
# திருக்கோயில்


"என்கடன் பணி செய்து கிடப்பதே"



மாலை 2]
விகாரி மார்கழி
சனவரி 1960
[மணி 4

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



திருக்கோணமலைக் கோட்டைவாயில்
(இதன் வழியாகத்தான் கோணேசர் கோயிலுக்குப் போகவேண்டும்)

# சிறப்புமலர்

## பொருளடக்கம்


1. திருக்கோணமலை
2. நவதிருப்பதி யநுபவம்
3. சைவம்
4. ஸ்ரீவைஷ்ணவம்
5. திருவாதிரை
6. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
7. இராமாவதாரம்
8. அவிநாசி
9. மெய்ப்பொருள் நாயனுர்
10. சாந்தலிங்க சுவாமிகள்
11. மருதமலை
12. பேரூர்
13. திருவெள்ளறை
14. திருவானைக்கா
15. மீராபாய்

வண்ணப்படம் - திருவானைக்கா அகிலாண்டேசுவரியம்மை.


பின் அட்டைப்படம் - திருக்குற்றாலம் கோயிலும் நீர்வீழ்ச்சியும், திருப்போரூர் முருகன்கோயில்.



## திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,
நுங்கம்பாக்கம் ஹைரோட்,
சென்னை-6.




ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்மன்

ஸ்ரீ ஜம்புகேஸ்வரம், திருவானைக்காவல்.

Rainbow Printers, Tiruchi

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] விகாரி மார்கழி - 1960 சனவரி [மணி 4


# ஈழநாட்டுத் திருத்தலம்—திருக்கோணமலை

'தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்ற கலா
மாண்பினர்காண் பலவேடர்
நோயிலும் பிணியுந்தொழிலர்பால்
நீக்கிநுழைதருநூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே'

என இராமேச்சுரத்தருகே கடற்கரையிலிருந்தே திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பெருமை வாய்ந்த திருக்கோணமலை என்னும் சிவத்தலம் ஈழநாட்டிடிலுள்ள இரண்டாவது புண்ணியத்தலமாகும். இது இலங்கைத்தீவின் கீழ்க் கடற்கரையில் மலைமேல் உள்ளது. புகைவண்டி நிலையமும் இயற்கையாகவே அமைந்துள்ள துறைமுகமும் இந்நகரில் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. இரயில் வழியே தலைமன்னாரிலிருந்து 221 மைல். மூர்த்தியின் பெயர் மாதுமையாளம்மை சமேத கோணேசுரர். புராதனக் கோயில். போர்த்துக்கேசியரால் இடிக்கப்பட்டதாகவும் கடலுள் ஆழ்ந்துவிட்டதாகவும் சொல்வர். இப்போது புதிதாக ஒரு திருக்கோயில் கட்டப்பெற்று திருப்பணி பூர்த்தியாகும் நிலையிலிருக்கிறது. இச் சிறுமலைக்கே சுவாமிமலை என்று பெயர் வழங்குகிறது. இந்திரன் முதலியோரால் பூசிக்கப்பெற்ற தலம். இந்தத் தலத்துக்கு தட்சண கைலாசம் என்னும் புகழுடன் ஒரு புராணமும் உண்டு. வாயுவினால் மேருமலையினின்றும் சிதறடிக்கப்பட்ட சிகரங்கள் மூன்றிடங்களில் விழுந்ததாகவும் அவையே திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திருக்கோணமலை என்றும் செவ்வந்திப் புராணம் கூறுகிறது.

'முன்னர் வீழ்ந்திடுசி கரிகாளத்தி யாமொழிவர்
பின்னர் வீழ்ந்தது திரிசிராமலையெனும் பிறங்கல்
அன்னதின் பிறகமைந்தது கோணமாவசலம்
இன்னமூன்றையுந்தக்ஷிண கயிலையென்றிசைப்பார்'

மலையின்மேலுள்ள கோயில்கள் இம்மூன்று மாத்திரமல்ல. நொடித்தான்மலை திருக்கேதாரம், அநேகதங்காவதம், இந்திரநீலபருவதம், பருப்பதம் (ஸ்ரீசைலம்) அண்ணாமலை, ஈங்கோய்மலை, திருக்கழுக்குன்றம், கொடிமாடச் செங்குன்றம், பரங்குன்றம் என்பனவும் மலைக்கோயில்களே. முதுகுன்றமும் குன்றமாகவே

கருதப்படுகிறது. கடற்கரையும் மலையுச்சியுமாக அமைந்ததால் திருக்கோணமலைத் தலம் தனிச்சிறப்புடையது. இயற்கை யழகு மிக்க சூழ்நிலையில் அமைந்துள்ள இத்தலத்தைக் குறித்த திருப்பதிகப் பாடல்களில்,

'குரைகடலோதம் நித்திலங்கொழிக்கும்
கோணமாமலை'

'கொடிதெனக் கதறுங்குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ்சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த்
தோன்றும் கோணமாமலை'

'தெழித்து முன்னரற்றுஞ் செழுங்கடல்
தரளஞ்செம்பொன்னும் சிப்பியும் சுமந்து
கொழித்து வன்திரைகள் கரையிடைச்
சேர்க்கும் கோணமாமலை'

'விரிந்துயர் மெளவல்மாதவி புன்னைவேங்கை
வண்செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடி
விடும்பொழில்சூழ் கோணமாமலை'

'துன்றுமொண் பெளவமவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்து றுதிரைபலமோதிக்
குன்று மொண்கானல்வாசம் வந்துலவுங்
கோணமாமலை'

எனப் பலவாறாக திருஞானசம்பந்தப் பெருமான் வியந்து பாடியிருக்கிறார்.

கடற்கரையில் அமைந்துள்ள ஏனைய தலங்கள் திருக்கழிப்பாலை (இப்போது கொள்ளிடநதியால் கொண்டுபோகப் பட்டு சிவபுரி எனவழங்கும் நெல்வாயில் என்னும் தலத்தில் தனிக்கோயிலாக அமைந்துள்ளது), மயிலை, திருவான்மியூர், திருக்கோகர்ணம், தென் திருமுல்லை வாயில், திருப்பாதிரிப்புலியூர், திருச்சோபுரம், திருப்பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம்பட்டினம்) நாகைக்காரோணம், வேதாரண்யம், அகத்தியாள்பள்ளி, திருக்கோடி (குழகர் கோயில்), திருப்புனவாயில், இராமேச்சுரம் முதலியன.

இங்குள்ள நடராஜமூர்த்தி சந்நிதி சூடாமணிசபை எனவும், இத்தலதீர்த்தம் மாவலிகங்கை என்றும் விளங்குகின்றன. ஐந்தாம் செகராஜசேகரன் என்ற யாழ்ப்பாணத்துநல்லூர் அரசன் யாழ்ப்பாணத்து நல்லூரில் மீனாட்சி சுந்தரேசுரர் ஆலயம் அமைக்க முயன்றபோது கைலாயநாதர் அவன் கனவில் தோன்றித் தன்னைக் கயிலாய நாதராகக் காட்சியளித்ததாகவும் அவ்வாறே தான் கட்டிய கோயிலைக் கைலாயநாதர் கோயிலாக அமைத்ததாக வரலாறு கூறுகிறது. இதை மூன்றாவது கைலாயம் என்பர்.

இராவணன் கயிலைமலையை எடுக்க முயற்சித்து சிவபெருமானால் நெருநெரென அடர்த்தப்பட்ட சம்பவம் இத் திருக்கோணமலையில் நடந்ததாகக் கூறுவதுமுண்டு. திருக்கோயில் முகப்பில் மலையின் ஒருபக்கம் வெட்டுண்டதுபோல் ஆழமாகக் காணப்பெறும் ஒரு இடத்தைக் காட்டி இது இராவணன் தன் வாளால் அகழ்ந்த இடமென்றும், அவன் கீழே கடலில் கிடந்து சிவபெருமானால் அமிழ்த்தப்பெற்றுக் கடலில் கிடந்துகொண்டே தனது சிரமொன்றை எடுத்துத் தன் நாடி நரம்புகளையே தந்திகளாக்கிச் சாமகானம்பாடிச் சிவபெருமானை மகிழ்வித்து அருள்பெற்றான் என்றும், அவன் கடலில் அழுந்திக் கிடந்தபோது அவன் இறந்து விட்டதாக எண்ணி அவன்தாய் உயிர் நீத்தாள் என்றும்,இராணவன் உயிர்தப்பி வந்தபோது மகாவிஷ்ணு வேதிய உருவில் தோன்றி அவன் தாயின் மரணத்தை யறிவிக்க அவன் கன்னியாதீர்த்தமென்னும்வெந்நீர் தீர்த்தத்தில்நீராடித் தாயின் அபரக்கிரியைகளை முடித்துக்கொண்டு வந்து கோணேசர் ஆலயத்தில் வழிபட்டு ஒரு லிங்கத்தையும் பெற்று இலங்காபுரிக்குச் சென்றதாகப் புராண வரலாறு உள்ளது.

இராவணனைக் குறித்துத் திருஞான சம்பந்தர் :

'எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திடவாத்தமாம்பேறு
தொடுத்தவர் செல்வந்தோன்றிய
பிறப்பும் இறப்பறியாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர்கருணை
தன்னருட்பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமாமலை யமர்ந்தாரே'

என எட்டாம் பாசுரத்தில் பாடியுள்ளார்.

மனுமுறை கண்டசோழனும் அவன் மகன் குளக்கோட்டன் என்பானும் கலிங்கநாட்டில் பிறந்து பேழையில் வைக்கப்பெற்று இலங்கை சேர்ந்து இலங்காபுரியை அரசாண்டு குளக்கோட்டனை மணந்த ஆடகசௌந்தரி என்ற அரசியும் திருக்கோயிலையும் திருக்குளத்தையும் கட்டித் திருப்பணி செய்ததாகவும் குளக்கோட்டன் இறைவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் எய்தியதாகவும் திருக்கோணசலபுராண வரலாறு கூறும். அவர்கள் நித்தியநைமித்திகச் செலவுகளுக்கு நிபந்தங்கள் ஏற்படுத்தியதாகவும் கூறுவர்.

பின்னர் கயவாகு என்ற புத்தமதத்தில் தோன்றிய இலங்கை மன்னன் கோணேசர் ஆலயத்தை இடித்து புத்த விகார் ஒன்று கட்டும் நோக்கத்துடன் குளக்கோட்டன் கட்டிய குளத்தருகே வந்ததும் கண்பார்வை மழுங்கவும் கோணேசர் வேதிய வடிவில் தோன்றித் திருநீறுகொடுத்துக் குணப்படுத்தியதால் குளத்துக்குப் பெயர் 'கண்தழை' என்று அமைந்ததாகக் கூறுவர். அதுவே தற்போது கத்தளாய்க்குளம் என வழங்குகிறது. கோணேசர் ஆலயம் பூசகர்களை புத்த குருக்கள் கடலில் தள்ளிவிட்டதால் பலர் இறந்துபோயினர். இருவர் மாத்திரம் கயவாகுவால் காப்பாற்றப்பட்டு மீண்டும் பூசகர்களாக விளங்கினர். அவர்கள் பரம்பரையினரே இப்போது முறைப் பூசகர்களாக இருக்கின்றனர்.

பின்பு புவனேக வீரபாண்டியன் என்னும் அரசன், இலங்கையரசன் புவனேகபாகுவை வென்றுகோணேசர் ஆலயத்துக்குத் தீர்வையில்லாமற் செய்தான் என்பது குடுமியாமலைக் கல்வெட்டில்,

திருக்கோணஅகவரப்பாடன் கழித்து வழங்கியருளி


என்பதாலும், அம்மலையில் தன் கயல் இலச்சினையைப் பொறித்த செய்தி,

'கோணமலையினும் திரிகூட கிரியினும்
உருகெழு கொடி மிசை இருகயலெழுதி'

என்னும் தொடராலும் அறிகிறோம்.

பதினேழாம் நூற்றுண்டில்போர்த்துகீசியர் காலத்தில் முன்னிருந்த கோணேசர் கோயில் இடிக்கப்பட்டு அக்கோயில் கற்களால் பறங்கியரின் கோட்டை கட்டப்பட்டதாகத் தெரிகிறது. அக்கற்களில் காணப்பட்ட ஒரு கல்வெட்டில் மனுச்சோழனுல் கட்டப்பட்ட அக்கோயில் பறங்கியரால் அழிக்கப்படுமென்றும் அதை மீண்டும் கட்ட அரசர்கள் யாரும் அத்தீவில் இருக்கமாட்டார்கள் என்றும் இருந்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

முன்னமேயே கோயிலதிகாரிகளுக்குக் கனவில் பறங்கியர் திருக்கோயிலை அழிக்கப்போகும் செய்தியை அறிவித்து மூர்த்திகளையும் திரவியங்களையும் கழனிமலைக்கு எடுத்துச் சென்றதாகவும் முதலாம் இராசசிங்கன் என்னும் அரசன் தம்பை நகர் என்னும் நகரையமைத்து அங்கே திருக்கோணநாதர் ஆலயத்தையும் நிறுவியதாகக் கூறப்படுகிறது.



திருக்கோணமலை—கோணேசர் கோயில் புதுத் திருப்பணி.

இப்போது திருக்கோண மலையிலேயே புதிதாக ஒரு ஆலயம் அமைக்கப் பெற்றுத் திருப்பணி முற்றுப்பெறும் நிலையில் உள்ளது என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளேன். இவ்வாலயத் திருப்பணிக்கும் இக்கோயில் பூசைகள் முறையாக நடக்கவும் சைவப் பெருமக்கள் அனைவரும் ஒல்லும் வகையால் உதவிசெய்யக் கடமைப்பட்டுள்ளனர்.

'மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்'.

## சந்தாதாரர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

திருக்கோயில் இதழுக்கான இரண்டாவது ஆண்டு சந்தாத் தொகையை இதுவரை அனுப்பாதவர்கள் சந்தா பணம் ரூ. 10 (பத்து)-ம் உடனே ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆசிரியர்.

# நவ திருப்பதியனுபவம்

[திரு. கே. பட்சிராஜன் பி. ஏ. பி. எல்.,]

இவ்வொன்பது திருப்பதிகளிலும், உள்ள கோயில்களின் காலம் நம்மால் வரையறுத்துக் கூற இயலாது. கோயில் என்று கூறும் பொழுது கர்ப்பக் கிருகத்தை மட்டும் நான் குறிக்கிறேன். இக்கோயில்கள் எழுந்ததைப் பற்றி அந்தந்த திருப்பதிகளின் தலபுராணங்கள் சில விஷயங்களைத் தருகின்றன. ஆனால் அவை காலத்தைக் குறிப்பிடுவன அல்ல. இவ்வொன்பது திருப்பதிகள் பற்றியவரை நம்மாழ்வார் நேரில் கண்டு அனுபவித்த தலங்கள் இவை என்றும், நம்மாழ்வார் அவதாரத்திற்கு வெகு காலத்திற்கு முன்பே அவை பிரசித்தி பெற்றிருந்தன என்றும் மட்டும் நாம் ஓரளவு கூறலாம். இத்தலங்கள் பற்றிய புராண வரலாறுகள் தற்கால ''பகுத்தறிவு'' வாதிகளுக்கு வேடிக்கையாகவும், வியப்பாகவும் கூட இருக்கலாம். அந்தத் தலங்கள் பற்றிய வரலாறுகள் என்னவென்பதை நம்பிக்கையுடைய நாம் சற்றுபார்ப்போம்.

## ஸ்ரீ வைகுண்டம்!

பூர்வம் நைமிசாரண்யத்தில் முனிவர்கள் கூடியிருக்கையில் சூதமா முனிவர் அங்கு எழுந்தருளினர். அவரிடம் முனிவர்கள், சிறந்த விஷ்ணுத்தலங்களைப்பற்றி அருளுமாறு கேட்க, சூதமா முனிவர் அருளினதாக ஒரு வரலாறு காணப்படுகிறது. அது வருமாறு:—

சோமுகன் என்னும் அசுரனல் வேத ஞானம் பறிபோன நான்முகக் கடவுள், தவம் செய்யத்தக்க இடத்தைத் தேடி, தண் பொருநை யாற்றங்கரையில் ஒரு அழகிய இடத்தைத் தேர்ந்து, அங்கு வைகுந்தநாதனை நோக்கித் தவம் செய்தார். வைகுந்தநாதனும் அவருக்கு பிரஸன்னமாய் இழந்த ஞானத்தை அளித்தார். வைகுந்தநாதன் வடிவழகை அனுபவித்த பிரமன், தான் பெற்ற பேறு தன் படைப்பும் பெறவேண்டும் என்று பகவானை வேண்ட அங்கேயே வைகுந்தநாதன் என்ற திருப்பெயருடன் எம்பெருமான் அர்ச்சாரூபமாக கோயில் கொண்டருளினன். அதன் காரணமாகவே அத்தலமும் 'திரு வைகுந்தம்' என்னும் பெயர் பெற்றது.

பின்னல் இந்திரன் இத்தல மகிமையை நாரத முனிவர் மூலம் கேள்வியுற்று, இத்தலத்துக்கு வந்து, திருமாலை வணங்கி அத்தலத்திலுள்ள 'கலசம்' என்னும் தீர்த்தத்தில் நீராடி, பலன் பெற்றான்.

இவ்வாறு தேவதைகளால் பூசிக்கப் பெற்ற வரலாறு ஒருபுறம் இருக்க, பிரமன் வேண்டுகோளின்படி பரமன் மனித்தர்க்கும் இலக்கானன் என்றும் ஒரு வரலாறு காண்கின்றது. காலதூஷகன் என்பவன், களவையே தொழிலாகக் கொண்டவன். எனினும் இறையன்பு மேலிட்டவன். ஆகவே தினமும் தன் தொழிலுக்குப் புறப்படுமுன், தான் வெற்றியோடு திரும்பினல் அன்று கிடைத்த கொள்ளைப் பொருளில் பாதியை இறைவனுக்குக் காணிக்கையாக அளித்து விடுவதாக சபதம் செய்து, அவ்வாறே செய்து, வெற்றிகரமாகத் தொழில் நடத்தி வந்தான். ஒரு சமயம், அவன் தன் தோழர்களுடன் அவ்வூர் அரசன் கோயிலைக் கொள்ளையடிக்கப் போயிருந்த போது இடையே காவலாளிகள் விழித்துக் கொண்டார்கள். காலதூஷனும், சிலரும் தப்பிவிட, ஒரு சிலர்காவலாளிகளிடம் சிக்கிக்கொண்டனர். அவர்கள் வாயிலாக அரசன் காலதூஷனைப்பற்றி அறிந்து, அவனைப் பிடித்து வரும்படி பணியாட்களை ஏவினன். இதனையறிந்த காலதூஷகன், வைகுந்தநாதன் கோயிலுக்குச் சென்று, தன்னை இந்த ஆபத்தினின்றும் அவன்தான் காக்கவேண்டுமென்று மனமுருகி வேண்டினன். இறைவனும் அவன் மன

உருக்கத்திற்கு இரங்கி, அவனுக்கு அபயம் அளித்து, தானே காலதூஷகன் வடிவில் அரசன் பணியாட்களிடம் சிக்கி, அரசன் முன்னிலையில் கொண்டுவரப்பட்டான். அரசன் அவனை நோக்கி ஏன் திருடினய் என வினவ, அரசனிடம் இறைவன், தத்துவ விசாரம் செய்தான். அதை வியப்புடன் கேட்ட அரசன், இவன் சாதாரணக்கள்வன் அல்லன், இறையம்சம் பொருந்தியவன் என்பதையுணர்ந்து அவனுடைய உண்மை உருவைக் காட்டுமாறு பணிந்துவேண்ட, இறைவனும் அவ்வண்ணமே தன் உண்மை யுருவை அவனுக்குக் காட்டி, தான் அவ்வுருக்கொண்ட வரலாற்றையும் கூறி, காலதூஷகனையும் அரசனுக்கு நண்பனுக்கி மறைந்தான். இவ்விதம், கள்வர் தலைவனைக் காக்க, கள்வர் தலைவனுகத் தோன்றியமையின், இப்பெருமானுக்கு "கள்ளர்பிரான்" என்ற காரணப் பெயர் அவ்வரசனுற் சூட்டப்பட்டது. இதுதான் இத்தலத்தைப்பற்றிய வரலாற்றுத் துணுக்குகள். இன்னும் சில வரலாறுகள் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இப்பெருமான் பிருது சக்ரவர்த்திக்கு பிரத்யக்ஷம் ஆனன் என்று ஒரு குறிப்பு கூறுகிறது. ஆனல் அதன் முழுவரலாறு அறியக் கிடைக்கவில்லை. பிரமன் தவம் செய்ததாக வரலாறு கூறும். ஆனல் பிரமனுக்கு பிரத்யக்ஷமானதாகக் குறிப்பில் கூறப்படவில்லை. எனவே இவை துணுக்குகளின் சேர்க்கையே முழு வரலாறும் அல்ல என்பதை யறியலாம்.

[இறைவன் திருநாமம், கள்ளப்பிரான், வைகுந்தநாதன்; தேவி, வைகுந்தவல்லி; தாமிரபர்ணி, பிருதுதீர்த்தங்கள்; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்; இந்திரனுக்கும் பிருதுசக்ரவர்த்திக்கும் பிரத்யக்ஷம்.]

## வரகுண மங்கை

ஸ்ரீ வைகுந்தத்தையடுத்து கிழக்கே இத்தலம் உள்ளது. இப்பொழுது நத்தம் என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீ வைகுந்தத்திலே நின்றவண்ணம் காட்சியளிக்கும் பெருமான் அடியார் நிலாகின்ற அவ்வைகுந்தத்தில் வீற்றிருப்பதுபோல் இருந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறன். இத்தலம்பற்றிய புராண வரலாறு ரசமானது. ஒரு அந்தணன் பகவான் நின்று காட்சியளிக்கும் திருவைகுந்தத்தின்தொலைவிலே நின்று, அவன் 'அருளார் திருச்சக்கரத்தால், அகல்விசும்பும் நலனும் இருளார் வினைகெட'த் தனிக்கோல் செலுத்தி வீற்றிருக்கும் இருப்போடு தனக்குக் காட்சியளிக்க வேண்டிக் கடுந்தவம் புரிந்தான். அவன் வேண்டுகோளுக்கு இரங்கி இறைவனும் வீற்றிருக்கும் திருக்கோலத்திலே காட்சியளித்தான். அவ்வந்தணன் வேண்ட அந்நிலையில் அர்ச்சா உருவிலே இன்னும் காட்சியளிக்கின்றன். அந்தணன் தவம் செய்து பேறுபெற்ற இடமாதலில் அத்தலத்துக்கே ஒரு மகிமை ஏற்பட்டது. வெகு காலத்துக்குப் பின், லோமசர் என்னும் முனிவர் தன் சீடன் ஒருவனுடன் இத்தலத்துக்கு வந்து தவம் செய்துகொண்டிருந்தார். அப்போது ஒரு வேடன் அருகில் உள்ள நீர் நிலையில் வலை வீசி ஏராளமாக மீனைப்பிடித்தான். பேராசையினுல் மீண்டும் வலைவீச அவன் செய்கையில் ஒரு கொடிய பாம்பு அவனைத் தீண்டியது. வேடன் மயங்கி அவ்விடத்திலேயே விழுந்து உயிர் துறந்தான். அவனது உயிரைக் கந்தருவர்கள் விமானத்தில் ஏற்றி அழைத்துச் சென்றனர். இதையனைத்தையும் கண்ட லோமச முனிவருடைய சீடன், தன் குருவிடம்போய், "உயிர்களைக் கொலை செய்து உண்டு ஊன் வளர்க்கும் இவ்வேடனுடைய உயிரை,கந்தருவர் விமானத்தில் ஏற்றிச் செல்லக்காரணம் யாது?" என்று கேட்டான். ரோமசரும் இது இத்தலத்தின் மகிமை. எத்தகைய பாபியானுலும் இந்த திவ்ய தேசத்திலே உயிர் பிரியப்பெற்றல் அவ்வுயிர் பாபம் நீங்கி, நற்கதிபெறும் என்று கூறினர்.

[எம்பெருமான் திருநாமம், விஜயாஸனன்; தாயார், வரணவல்லி. விஜயகோடி விமானம். தேவபுஷ்கரிணி, அக்நிதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம்.]

இங்கும் வரலாறு முழுவதுமில்லை. தீர்த்தம் அக்னியின் பெயராலான வரலாறு கிடைக்கவில்லை. இந்த பூமியிலே பகவான் அர்ச்சாரூபியாக விரும்பி வாழும் தலங்கள் பற்றிக் கூறுமாறு கேட்க இவ்வரலாற்றை விச்வசகன் என்னும் அரசனுக்கு சநகமுனிவர் கூறினதாகப் புராணம் கூறுகிறது.

6 - JAN 1960

## திருப்புளிங்குடி

மேற்சொன்ன அதிசயமான கதையை விச்வசகன் மிகவும் பக்தி சிரத்தையுடன் கேட்பதைக் கவனித்த சநகர் மேலும் சொன்னுர்:

இந்த வரகுணமங்கைத் தலத்திற்கு வடக்கே சற்று தூரத்தில் முன்காலத்தில் ஒரு ரமணீயமான மணல்திட்டும் சோலையுமிருந்தது. அதன் அழகில் ஈடுபட்டு "ஒண்டொடியாள் திருமகளுடன் வைகுந்தநாதன் ஏகாந்தமாக அங்கே கேளிக்கையாயிருந்தான். அந்தத் தெய்வீக தம்பதிகளின் உல்லாச விளையாட்டைக் கண்டு பரந்தாமனின் மற்ருெரு தேவியான பூமிபிராட்டி ரோஷம் கொண்டாள். படிப்படியாக அந்தப் பொருமை விஷம் ஏறி, தான் செய்வதின்னதென்று அறியாமல், உலகனைத்தையும் தாயாக நின்று தரிக்கவேண்டிய அவள், பூமியைத் திரஸ்கரித்து, பாதாளம் சென்று விட்டாள். அதனுல் எல்லா உலகங்களும் வறண்டு, உயிர்கள் கண் சுழன்று துடிதுடித்தன. தேவர்கள் பகவானிடம் சென்று முறையிட்டார்கள். பரந்தாமனும் காரணத்தையுணர்ந்து முறுவல்செய்து பாதாளம் சென்ருன். அவன் மட்டுமல்ல, திருமகளும் சென்ருள்—அவள் காரணமாகத்தானே பூமிதேவி இவ்விதம் ரோஷம் கொள்ளநேரிட்டது!—இருவரும் போய்ப் பாதாளமெங்கும் தேடிக் கடைசியில் பூமிதேவியைக் கண்டு சமாதானப்படுத்தினுர்கள். பூமிதேவியின் திருவுள்ளத்தில் அந்தரமணீயமான தலத்தின் அழகு குடிகொண்டுவிட்டதை உணர்ந்து பகவான் ஸ்ரீதேவி, பூதேவி யிருவருடனும் மீண்டும் அந்தச் சோலைக்கே எழுந்தருளி அங்கே பாதாளமெங்கும் அலைந்த அலுப்புத் தீர சயனித்திருந்தான். இரு தேவியரும் அவனது திருவடிகளை வருடி சிரமபரிகாரம் செய்தார்கள். இந்தச் சேர்த்தியழகை சேவித்த தேவரும் முனிவரும் இந்த சேவை நித்தியமாகவிருக்கவேண்டு மென்று பிரார்த்திக்க பகவானும் தேவியருடன் அங்கேயே அர்ச்சா மூர்த்தியாக நித்யமாக சேவை சாதிக்கிருர். அந்த இடமும் அருகிலுள்ள தீர்த்தமும் மிகவும் முக்கிய புண்யஸ்தலங்களாயின. பூமிதேவிக்கு அருளிய தலமாதலால் அதற்கு பூமி பாலனக்ஷேத்ரமென்றும் இறைவனுக்கு பூமிபாலன் என்றும் பெயர் ஏற்பட்டது.

ஒருகால், இமயச்சாரலில் இந்திரன், இந்திராணியுடன் அச்சாரல் அழகை ரஸித்துக்கொண்டிருக்கையில், மான்வடிவில் ரமித்துக்கொண்டிருந்த ஒரு ரிஷி தம்பதிகளின் மேல் வஜ்ராயுதத்தால் அடிக்க, அத் தம்பதிகளில் ஆணுனது ரிஷியாய் விழக்கண்டான். உடனே துடிதுடித்து பிரம்மஹத்தியால் பீடிக்கப்பட்டவனுய் அப்பாவம் தொலைய வழிநாடி, கடைசியில் இந்த க்ஷேத்ரத்தில் வந்து ரிஷிகளோடு பெரிய வேள்வி யொன்றியற்றி அந்த தீர்த்தத்தில் அவப்ருதஸ்நானம் செய்து பாவம் நீங்கப்பெற்ருன்.

இப்படியாக தீக்ஷையிலிருந்த இந்திரனை சில அரக்கர்கள் வந்து நலியப்புக்கார்கள். தீக்ஷையிலிருந்த இந்திரன், தான் போர்புரிவது தீக்ஷாபங்கமாகுமாதலால் ஒன்றும் செய்யாதிருக்க, அதுகண்ட பகவான் அரக்கர்மேல் சினந்து தன் கதையைக் கடாக்ஷிக்க, அக் கௌமோதகியின் அடியால் அரக்கர் அனைவரும் அழிந்தார்கள். அவர்களில் ஒருவன் முன்ஜன்மத்தில் பலயாகம் செய்து பலன்பெற வேண்டிய தருணத்தில் குருவுக்கு யாக தக்ஷிணை அளிக்க மறந்த குற்றத்தால் அரக்கப்பிறவி பெற்றவன். அவன் அப் பாபம் நீங்கப்பெற்றதும், முன் செய்த யாகபுண்யத்தின் பலனுக ஸ்வர்க்கம் புகுந்தான். இந்த தலத்தில் மரித்த காரணத்தினுல் அவன் அரக்கர் பிறவி மாய்ந்தது. இவ்வளவு பெருமையுடையது இந்த க்ஷேத்ரம் என்று சநகர் கூற அரசனும் அவரை வணங்கி இத்தலத்தில் எம்பெருமானுக்கு விசேஷமாக திருப்பணிகள் பல செய்து புண்யமடைந்தான்.

பூமிபாலன க்ஷேத்ரம் என்று வடமொழியால் பெயர்பெற்ற இந்த க்ஷேத்திரத்தின் இயல் தமிழ்ப்பெயர் 'திருப்புளிங்குடி' என்பது. குருகூரிலிருப்பது போன்று ஒரு பிரஸித்தமான புளியமரம் ஒன்று இங்கும் ஒரு நாளில் இருந்திருத்தல் கூடும்.

[எம்பெருமான் பெயர், காசினிவேந்தன்; தேவியர், மலர்மகள் நாச்சியார், புளிங்குடி வல்லித்தாயார்; வருணதீர்த்தம், நிருதி தீர்த்தம்; கிழக்கே திருமுக மண்டலம்; பள்ளி

கொண்ட திருக்கோலம்; வருணனுக்கும் நிரு திக்கும் பிரத்யக்ஷம்.]

பூமிபாலன் என்ற வடமொழிப் பெயர் காசினிவேந்தன் எனத் தமிழாகியிருக்கிறது. ஆனுல் ஆழ்வார் பாசுரத்தில் "காய்சின வேந்து" என்பதுதான் இறைவன் திருநாம மாகக் காணப்படுகிறது. இரண்டுமே பொருந் தலாம். பூமிப்பிராட்டிக் கருளினமையின் காசினிவேந்தனுனர். தீக்ஷையிலிருந்ததால் ஒன்றும் செய்ய முடியாத இந்திரனை நலிந்த அரக்கரைக்காய்ந்த சினத்தையுடையவனுத லின் காய்சின வேந்தானுன்.

தீர்த்தங்கள் இரண்டும் வருணன் நிருதி என்ற திக்பாலகர் பெயராலமைந்ததன் காரணமும், அவ்விருவருக்கும் பகவான் பிரத் யக்ஷமான வரலாறும் இப்பொழுது கிடைத் துள்ள குறிப்புகளில் கிடைக்கவில்லை.

இவைதான் இம்மூன்று தலங்களையும் பற்றி யான் முயன்றவரை இதுவரை கிடைத் துள்ள புராண வரலாறுகள். இதேபோல் மற்றைய ஆறு தலங்களின் வரலாறுகளையும் ஓரளவு தெரிந்துகொண்டு அப்பால் ஆழ்வா ரின் ஆன்ம வாழ்வில் இத்தலங்கள் எவ்வாறு தொடர்புபெற்றன வென்பதைத் தொகுத்து ஆராய்வோம்.

(தொடரும்)



சிக்கில்—நவநீதீசுவரர் கோயில் கல்வெட்டுத் திறப்புவிழா.

# சைவம்

திரு. K. வச்சிரவேலு முதலியார் B.A., L.T.,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## முத்திசாதனம்

### (1) மேலான குறிக்கோள்

இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களுள் உயிரே ஏனை இரண்டாலும் பயன் கொள்வது; அவ்விரண்டனுள் தளை உயிர்களை மயக்கிப் பிறவியிற் செலுத்தும் பகைப்பொருள். இறை அவற்றுக்கு என்றும் உறுதுணையாக நின்று உபகரிக்கும் உறவுப் பொருள்—என்னும் உண்மை மேலே விளக்கப்பட்டது. இதிலிருந்து, வாழ்க்கையின் முடிந்த, மேலான குறிக்கோள் (பரம லக்ஷியம்) இன்னது என்பது எளிதின் உணரப்படும்.

ஆணவம், கன்மம், மாயை எனப்படும் தளைகளின் நீங்கி முதல்வனைத் தலைப்படுவதே உயிர்களின் முன்னேற்ற நெறியின் முடிந்த மேலான நிலை ஆகும். இந்நிலையே வீடு, முத்தி, மோக்ஷம் என்னும் சொற்களால் குறிக்கப்படுவது. வீடுபேறு என்னும் சொல் அதனியல்பை ஓரளவு செம்மையாகத் தெரிவிக்கும் சொல் ஆகும். வீடு என்பது உயிர் தளையினின்றும் விடுபடுதலைக் குறிக்கும். வீடு எனினும், விடுதலை எனினும் பொருந்தும். முக்தி, மோக்ஷம் என்னும் சொற்களும் இப்பொருளையே பயக்கும். பேறு என்பது பெறுதல், அஃதாவது, உயிர் முதல்வனைச் சார்தலினால், முதல்வனுடைய எண்குணங்களும் தன்பால் மேம்பட்டு விளங்கப் பெறுதல். இதுவே வடமொழியில் சிவத்துவ அபிவியக்தி எனப்படும். சிவத்துவம்—சிவனது தன்மை, அருட்குணங்கள் எனப்பட்ட எண்குணங்களை உடைமை. அபிவியக்தி—விளக்கம், அஃதாவது, அக்குணங்கள் உயிரின்கண் விளங்கித் தோன்றுதல்.

"பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முக்தி" என்னும் சிவஞான சித்தியும், "சேர்வார்தாமே தான் ஆகச் செயுமவன்" என்னும் திருஞான சம்பந்தர் திருவாக்கும் இங்குக் கருதத் தக்கன.

### (2) படிவழி முறை (சோபானக் கிரமம்)

"எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவன்" என்பது சைவ சமயநெறி என்னும் நூலுட் கூறப்படும் ஓர் உண்மை. அங்ஙனம் உறையும் இறைவன் உயிர்களின் ஆற்றலைத் தடுக்கும் பாச சக்திகளை மெலிவித்துத் தனது பேரின்பமாகிய செம்பொருட்டன்மையைப் பெறுவிப்பதையே திருக்குறிப்பாக உடையன். ஆதலால், சிவநெறியில் மீளா நரகு (Eternal Damnation) என்றாற் போன்ற பேச்சுக்கு இடமே இல்லை. எல்லா உயிர்களும், எஞ்ஞான்றும், எவை எச் சூழ்நிலையில் எந்நெறி மேற்கொண்டு ஒழுகினும் ஆன்ம வளர்ச்சி நெறியில் முன்னேறியே செல்கின்றன என்பது சைவத்தின் பரந்த நோக்கமுள்ள பெருங் கொள்கைகளுள் ஒன்று.

ஆயினும், உயிர்கள் தம்மைப் பற்றியுள்ள பாசத் தடையின் வன்மை மென்மை பற்றி உணர்வு வகையில் பலபக்குவ வேறுபாடுகளை உடையவைகளாக உள்ளன. இக்காரணம்பற்றி உயிர்கள் எடுக்கும் பிறப்புக்கள் பலவாயின. உயர்ந்த பிறப்பெடுத்த மக்களுள்ளும் அவரவர் மேற்கொள்ளும் சமயங்களும், ஒழுக்கமும், நூல்களும், உபதேச முறைகளும் பலவகைப்பட்டன. ஒரு பாடசாலையில் கற்கும் மாணுக்கர் அறிவின் திறம் பற்றி வேறு வேறு வகுப்புக்களில் தங்கிக்

கற்று மேல் வருவதனை இதற்கு உவமையாகக் கொள்ளலாம்.

மக்கட் பிறப்பு எய்தினோருள் ஒரு கொள்கையோ, குறிக்கோளோ இன்றி கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழ்வோரை நோக்க, இம்மை வாழ்க்கை ஒன்றனையே முடிந்த பயனாகக்கொண்டு, அரசியலுக்கும் பொருளியலுக்கும் ஏற்ப வாழ்க்கையை ஒழுங்குபட நடத்துவோர் சிறந்தவர் என்பது தெளிவு. இத்தகையோரையே உலகாயதர் எனப் பெயர் தந்து நம்முன்னோர் முதற்படியில் உள்ளோராகக் கருதினர்.

இனி, இவரை நோக்க, உலக வாழ்க்கையோடு மறுமையைப் பயக்கும் அறநெறியையும் உணர்ந்து வாழ்வோர் சிறந்தவர் என்பதில் ஐயமில்லை. இவ்வறநெறியை வற்புறுத்துவனவாய் எழுந்த மதங்களே புத்தம், சமணம் முதலிய புறச் சமயங்கள் ஆகும். அறவொழுக்கத்தில் தலைநின்று ஒழுகி மேம்பட்டோர்க்கு ஆன்ம உணர்வு அல்லது தன்னை நோக்கி உணரும் உணர்வு விளங்கும். அறவொழுக்கத்தோடு ஆன்ம உணர்வையும் பொருளாகக் கொண்டு உணர்த்தும் சமயங்களே சாங்கியம், யோகம், வேதாந்தம் முதலிய வைதிக சமயங்களாம். ஆகலின், வைதிக நெறி நிற்போர் அறவாழ்க்கை ஒன்றனையே குறிக்கோளாகக் கொண்டோரினும் நுண்ணுர்வுடையோர் ஆவர்; இனிச் சிவநெறி என்பது இவரினும் நுண்ணுர்வுடையோரால் பற்றி ஒழுகுதற்கு உரியதாய், அறவொழுக்கம், ஆன்ம உணர்வு, கடவுள் மெய்யுணர்வு என்னும் மூன்றனையும் பொருளாகக்கொண்டுள்ளது. "சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை" என்பது பொது விதி. ஆதலால், சிவநெறியைத் தலைப்பட்டோர் மேலே கூறிய பரம லக்ஷியமாகிய வீடு பேற்றினை எய்துதற்கு மேற்கொண்டு ஒழுகவேண்டிய சாதனங்கள் உள்ளன: அவை சரியை, கிரியை, யோகம், ஞான நூற் பயிற்சி என்பவை. இச்சாதனங்களை மெய்யன்போடு அநுட்டிப்போர்க்கு, உயிர்க்குயிராய் இருந்து உணர்த்திவரும் முதல்வன் ஞானசிரியனை இடமாகக்கொண்டு வெளிப்பட்டுத் தோன்றி அநுபவஞானம் விளங்கச் செய்வன். அவ்வாறு அநுக்கிரகிக்கப் பெற்றோர் மெய்யுணர்ந்து அவாவறுத்து வீடுபேறடைவர்.

"புறச்சமய நெறிநின்றும்
அகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழிஉழன்றும்
புகலும் ஆச்சிரம
அறத்துறைகள் அவையடைந்தும்
அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும்
ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள்
உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும்
சென்றால் சைவத்
திறத்தடைவர்; இதிற்சரியை
கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால்
சிவனடியைச் சேர்வர்."

என்னும் சிவஞான சித்தித் திருவிருத்தம் உயிரின் வாழ்க்கைப் பாதையைப் படிமுறையில் வரிசைப்பட வைத்துக் காட்டுகின்றது.

## (3) சைவத்தின் சமரசம்

மேற்கூறியபடி எந்தச் சமயத்தையும் இகழ்ந்து தள்ளாது, அவ்வவற்றின் உள்ளீடுகள் எவ்வாறு ஆன்ம வளர்ச்சி நெறியில் மக்கட்குப் பயன்படுகின்றன என்பதை அளவிட்டு வரிசைப்படுத்திப் படிவழியின் வைத்து உணர்த்துவது சைவத்தின் விரிந்த, ஆனால் தன் உயரிய குறிக்கோளை விட்டுக் கொடாத, கொள்கையைக் காட்டும். இதுவே சைவத்தின் சமரசம் எனப்படும். இதனால் சைவர்களுக்குப் பிற சமயங்களிடத்துப் பொறையின்மை அல்லது வெறுப்புத் தோன்றுதற்கு இடம் இல்லை. அதே சமயத்தில் தம் ஆசிரியன்மார்கள் உறுதி எனக் கண்டு விதித்த ஒழுக்கங்களை மனம்பற்றி மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா [நோக்கின்,
அதுநோக்கி வாழ்வார் பலர்"

என்னும் திருக்குறளின் கருத்து இங்குப் புடைபட வைத்துக் கருதுதற்கு உரியது. ஒரு தலைவன் தனக்கு உறுதிச் சுற்றத்தாராய் உள்ள தோழர் முதலாயினோரை ஒரு

தன்மையராய்க் கருதி நடந்தால் உயர்ந்தோர் நீங்குவர்; அவ்வாறு நோக்கும் பொது நோக்கு நீக்கி, அவரவர் தகுதிக்கு ஏற்ப நோக்கி நடந்தால் எல்லாரும் விடாது ஒழுகுவர். அதுபோல ஒருவன் எல்லாக் கொள்கைகளையும் ஒரு தன்மையனவாகக் கருதின், அவன் எதனையும் மதித்தவன் அல்லன்; அவன் அறிவு உயர்ந்த கொள்கையைப்பற்று மாறும் இல்லை. அவ்வவற்றின் தகுதிக்கு ஏற்ப வரிசைப்படக் கொண்டு நோக்கின், அவன் எல்லாவற்றுனும் பயன் கொள்வன்; எதனையும் இகழ்ந்தவன் ஆகான். உயர்ந்ததையும் கைக்கொள்வன்.

## (4) வீடு பேற்றிற்கு உரிய சிறந்த சாதனம்

வீடு என்னும் சொற்குப் பொருள் விடுதலை, அஃதாவது, பாசப்பற்றை விடுதல்—என்பது மேலே கூறப்பட்டது. பற்று உள்ளவரை ஒருவருக்குப் பிறவியும், பிறவியால் வரும் துன்பங்களும் நீங்கா. அப்பற்றும் முதல்வனைப்பற்றினுல் அன்றி நீங்காது. மரத்தின்மீது ஏறியுள்ளவன் தான் பற்றியுள்ள ஒரு கிளையை விடவேண்டின், வேருெரு கிளையைப்பற்ற வேண்டும். அதுபோல, சிவப்பற்றைப் பற்றினுர்க்கு அன்றி அவப்பற்ருகிய பாசப்பற்று அருது. இக் காரணம் பற்றியே, தெய்வப் புலமைத் திருவள்ளுவனுர்,

"பற்றுக பற்றற்ருன் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்பார் ஆயினர்.

## வழிபாடு

பாசப்பற்று விடுதற்பொருட்டு முதல்வனைப்பற்றும் முறையே கடவுள் வழிபாடு எனப்படும். அது பொதுவும், சிறப்பும் என இருவகைப்படும். வழிபாடு—பின் நிற்றல், இறைவன் திருக்குறிப்பின் வழி நின்று ஒழுகுதல். வழிபாடு, பிற்றை நிலை என்பவை ஒரு பொருட் சொற்கள்.

பொது வழிபாடாவது இறைவனது அருளாணை ஆகிய அறத்தின் வழி நிற்றல். இது பொது ஒழுக்கம் எனவும்படும். இஃது இல்லறம், துறவறம் என இருவகைப்பட்டு, முறையே அன்பையும், அருளையும் அடிப்படையாகக்கொண்டு நிகழத்தக்கது. யோக நூல்களில் விதிக்கப்படும் இயமம் நியமம் என்பவை இப்பொது வொழுக்கத்தில் அடங்கும்.

கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, தன் மனைவியல்லாத மாதரைக் காமுருமை, இரக்கம், வஞ்சனையின்மை, பொறையுடைமை, மனங்கலங்காமை, அளவறிந்து உண்டல், தூய்மை என்னும் பத்தும் இயமம் எனப்படும் ஒழுக்கம் ஆகும்.

தவம், மனம் உவந்திருத்தல், கடவுட் கொள்கை, பொருளை நல்ல வழியில் ஈட்டி, நல்ல வழிகளில் செலவிடுதல், தன்னின் உயர்ந்தோரை வழிபடல், உயிர்க்கு உறுதி பயக்கும் நூல்களைக் கேட்டல், பிறப்பு, செல்வம், அதிகாரம் என்பவற்ருல் செருக்குருமல் அடங்கி ஒழுகுதல், தக்கன தகாதன பகுத்து உணர்தல், இறைவன் திருப்பெயரை எண்ணுதல், விரதம் என்னும் பத்தும் நியமம் எனப்படும் ஒழுக்கம் ஆகும்.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்"

என்னும் அருமைத் திருக்குறளில் பொய்தீர் ஒழுக்க நெறி என்றது இப்பொதுவொழுக்கத்தையே ஆகும். இவ்வொழுக்க நெறியால் மனம் மாசு அகன்று தூய்மையுற்று, நிலையாத பொருள்களைப் பற்றுதலினின்று நீங்கும். ஆதலால், இது பொய்தீர் ஒழுக்க நெறி எனப்பட்டது.

சிறப்பு வழிபாடாவது முதல்வனது உண்மையியல்பைத் தெளியக் கண்டு அவனைச் சார்தலால், அவன்றன் அருட்குணங்கள் நம்மிடத்து மேம்பட்டு விளங்குமாறு ஒழுகும் ஒழுக்கம். இஃது அருள் நூல்களை ஓதி உணர்ந்து, அவற்றுள் கூறியபடி முதல்வனை வணங்குதல், வாழ்த்துதல், நினைத்தல், உள் நோக்கி உணர்தல் என்னும் வடிவில் நிகழத்தக்கது. இவ்வொழுக்கம் அவரவர் ஆன்ம வளர்ச்சி நிலைக்கு ஏற்றபடி பலதிறப்படுவது. அப்பல திறனையும் பெரிய புராணத்துட் கூறப்படும் உண்மை நாயன்மார் வரலாறுகள் பற்றி உணரலாம். ஆயினும், உலகியலுக்கு இன்றியமையாது வேண்டப்படும் ஒழுங்கு முறைபற்றி, இது சரியை, கிரியை,

யோகம், ஞானம் என நான்கு வகையுள் வைத்து உணர்த்தப்படும். இச்சிறப்பொழுக்கத்தை முறைப்பட உணர்ந்து, முறைப்படக் கொண்டு உய்த்தற்பொருட்டு இயற்றப்படும் தொடக்கச் சடங்கு சிவதீக்கை எனப்படும். தொன்று தொட்டு வரும் கேள்வியோடு அனுபவமும் உடைய நல்லாசிரியனே சிவ தீக்கை செய்தற்கு உரியன்.

## (i) சரியை

முதல்வன், தன்னியல்பில், **'உருவொடு தொழில் பெயர் ஒன்றும் இன்றியே'** உண்மையறிவின்பப் பிழம்பாய், யாங்கணும் நிறைந்திருப்பவன். ஆயினும், கல்வி கற்கும் மாணக்கரிடத்துக் காணுமாறுபோல, உயிர்களின் அறிவு படிமுறையான் வளர்ந்து, நுணுகி, மேலோங்கி முடிவில் வியாபகமாய் நின்று முதல்வனைப்பற்றும் இயல்புடையது. ஆதலால், அதற்கு ஏற்றபடி, முதல்வன் அருவம், அருவுருவம், உருவம் என மூன்று வகைப்படும் அருள் வடிவங்களைக் கொண்டருள்கின்றனன். அம்மூன்றனுள் முதற்கண் உருவடிவம் ஒன்றனையே பொருள் என்று உணர்ந்து, புறத்தொழில் அளவில் இயற்றப்படும் வழிபாடு சரியை எனப்படும்.

சந்தியாவந்தனம், திருவைந்தெழுத்து எண்ணுதல், திருக்கோயிலுக்கும் முதல்வன் அடியார்களுக்கும் தொண்டுபுரிதல் முதலியவை இதன் கண் அடங்கும்.

இறைவன் **'உலகெலாமாகி உடனுமாய்'** நிற்கும் நிலையை இச்சரியையாளர் உணரார்; ஆதலால், இவர் சிவலிங்கம் முதலிய திருமேனிகளையே முதல்வன் என உளங்கொண்டு வழிபடுவர். இவர்களுக்கு முதல்வனும் அத் திருவுருவங்களில் இருந்து வெளிப்படுதல் இன்றி அருள்புரிவர். இன்னோர் இதன் பயனுகப் பெறும்பதம் சாலோகம் எனப்படும்.

சாலோகமாவது இறையுலகு எய்தி, அங்கு யாண்டும் தடையின்றி இயங்கி அங்குள்ள போகங்களை நுகர்ந்து வாழ்தல். சரியையாளர், ஒருவர் வீட்டில் பணி செய்யும் அகத்தொண்டர்க்கு உள்ள அன்பும் உரிமையும் போன்ற அன்பும் உரிமையும் இறைவனிடத்து உடையவராய் ஒழுகுதல் பற்றி இவர் தம் நெறி தொண்டு நெறி (தாச மார்க்கம்) எனப்படும்.

உண்மைச் சிவானுபூதிச் செல்வர்களாகிய பெருமக்கள் நால்வருள் திருநாவுக்கரசர் அருள் வாழ்க்கையில் இத்தொண்டு நெறி முனைந்து தோன்றி விளக்கம் பெறுகின்றது.

## (ii) கிரியை

மேற்கூறிய தொண்டு நெறியில் பயின்று வந்தோர்க்குப் பக்குவ முதிர்ச்சி பற்றி நுண்ணுணர்வு மிகுந்து அன்பு முதிரும். இவ்வாறு உணர்வும் அன்பும் முதிரப் பெற்றோர் முதல்வனுடைய ஐந்தொழிலியற்றும் ஆற்றலைக் குறிக்கும் ஐம்பெருமனுக்களும், அருட் குணங்களைக் குறிக்கும் ஆறங்க மனுக்களும், மூல மனுவுமே பொருள்; சிவலிங்கத் திருமேனி அம்மந்திரத் திருமேனியைக் குறித்து வழிபடுவதற்கு இடமாக உள்ளது என உணர்ந்து, புறம் அகம் என்னும் இரண்டன் தொழிலாலும் வழிபடுவர். இவ்வழிபாடு கிரியை எனப்படும். இதுவே சிவபூசை, சிவதன்மம் என்னும் பெயர்களால் வழங்கப்படுவது.

சிவபூசைக்கு முன் அங்கமாகப் பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, லிங்கசுத்தி என்னும் ஐவகைச் சுத்திகள் செய்யத்தக்கன.

இவ்வழிபாட்டில் மந்திரம், கிரியை, பாவனை என்பவை முறையே வாய், கை, சிந்தை என்பவற்றால், ஒரு வழிப்படக் கருத்தொன்றிச் செய்யப்படும். இப்பூசை முன்னர் அகத்தே இதயத்தானத்தில் பாவனை வகையால் செய்யப்பட்டு, பின் புறத்தே சிவலிங்கத் திருமேனியில் செய்யப்படும். பூசைக்கு அங்கமாகச் செய்யப்படுவன தியானமும் ஓமமும் ஆகும். பூசை அவற்றின் அங்கி ஆகும். அங்கி-முதன்மையுள்ள செயல்; அங்கம்-துணைச் செயல்.

கிரியையாளர்கள் முதல்வன் மந்திரங்களால் திருமேனி கொள்ளுகிறான் எனக்கருதி வழிபடுதலினால், அவர்களுக்கு முதல்வன், கடைந்தபொழுது விறகின்கண் தோன்றும் நெருப்புப்போல, அவ்வப்பொழுது தோன்றி நின்று அருள்புரிவன். பூசை என்னும் சொல் பூஜா என்பதன் தற்பவம். பூ-பூர்யந்தே (நிறைகின்றன), ஜா-ஜாயதே (தோன்றுகிறது) என்பது சொல்லின்

இயல்பு. அஃதாவது, துன்பத்திற்குக் காரண மாகிய கன்மம் எல்லாம் பூர்த்தியடைந்து, இன்பத்திற்குக் காரணமான ஞானம் தோன்துகிறது: இந்நிலையை எய்துவிப்பது பூசை என்றபடி.

கிரியையில் வழுவாது நின்றோர் முடிவில் எய்தும் பயன் **சாமீபம்** எனப்படும்; அஃதாவது, மைந்தர் போன்று இறைவனுக்கு அணுக்கராய் வைகி இன்புறும் நிலை. கிரியையாளர்களின் அன்பும் உரிமையும் மைந்தர்க்கு உள்ளவை போன்றிருத்தலால், இவர் தம் நெறி **மகன்மை நெறி** (சற்புத்திர மார்க்கம்) எனப்படும். திருஞான சம்பந்தருடைய அருள் வாழ்க்கையில் மகன்மை நெறி முனைந்து தோன்றி விளக்கம் பெறுகின்றது;

## (iii) யோகம்

கிரியையில் நின்றோர்க்கு நிகழும் பக்குவ முதிர்ச்சியால் அதிநுட்ப உணர்வும் அதற்குத் தகுந்த அன்பும் வளரும். அவ்வாறு வளரப்பெற்றோர், சுத்த மாயையில் விளங்குவனவாய், மனம் முதலிய அகக்கருவிகளைச் செலுத்துவன்வாய் உள்ள நாத, விந்துக்களாகிய சோதி வடிவே பொருள்; முற்கூறிய உருவம், அருவுருவம் எனப்பட்ட வடிவங்கள் அதனை நினைந்து வழிபடுதற்கு இடமாக உள்ளவையே என உணர்ந்து அகத்தொழில் ஒன்றுனே அந்த அருவத் திருமேனியை வழிபடுதற்கு உரியர் ஆவர். இவ்வழிபாடு யோகம் எனப்படும்.

ஐம்பொறிகளை அடக்கி, உயிர்ப்பைச் சுழுமுனைநெறியே செலுத்துதல்; அதனுல் மூலாதாரத்தில் விளங்கும் அசபாசத்தியை ஏனைய ஆதாரங்களினும் கண்டு மேலே செல்லுதல்; பின் பிரமரந்திரம் என்னும் உச்சியில் ஆயிரம் இதழ்த் தாமரையை அலரச்செய்து, அதன்கண் விளங்கும் சந்திரமண்டலத்தை மூலக்கனலால் இளகச் செய்தல்; அதனுல் ஒழுகும் அமுததாரையால் நாடிகள் எல்லாம் நனைதலால் உடம்பு நிலைத்திருக்கச் செய்தல்; தான் உடற்பற்று நீங்கிப் பேரொளியாகிய சிவ சோதியைக் கண்டு **அதுதான்** ஆகப் பாவித்தல்—என்னும் இவ்வியல்பினை உடையது யோகம்.

இயமம், நியமம், இருக்கை (ஆசனம்), வளிநிலை (பிராணுயாமம்), தொகைநிலை (பிரத்தியாகாரம்), பொறைநிலை (தாரணை), நினைதல் (தியானம்), அதுவாதல் (சமாதி). என்னும் எட்டும் இதன் அங்கங்கள் ஆம். யோகியர் எய்தும் சித்திகள் (பேறுகள்), அணிமா, மகிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம். வசித்துவம், கரிமா என எண்வகைப்படும்.

யோகியர் எய்தும் பதம் சாரூபம் எனப்படும். அஃதாவது, தோழற்கு உள்ள உரிமை போல இறைவனேடு ஒத்த வடிவும், ஒத்த அணிகலனும் பெற்று இன்புறுவது. இவர் தம் நெறி **தோழமை நெறி** எனப்படும். இந்நெறி நம்பி ஆரூரர் அருள்வாழ்க்கையில் முற்பட்டுத் தோன்றி விளக்கம் பெறுவது ஆம்.

இதுகாறும் விளக்கிய மூவகைப்படும் வழிபாடுகளும் **இறப்பில் தவம்** எனவும், இவற்றின் பயனுகக் கூறப்பட்ட சாலோகம் முதலிய மூன்றும் **பதமுத்திகள்** எனவும் வழங்கும். பதமுத்திகள் சரியை முதலியவற்றுக்கு இடையில் வரும் பயன்கள் ஆம். ஞானமே அவற்றின் முடிந்த உண்மைப்பயன்.

## (iv) ஞானம்

மேற்கூறியபடி சரியை கிரியா யோகங்களில் பயின்றுர்க்கு முதற்பொருளை உள்ளவாறு உணரும் வியாபக உணர்வு விளங்கும். அவ்வுணர்வால், எல்லையின்றி யாங்கணும் நிறைந்த உண்மையறிவின்பப் பிழம்பாகிய முதல்வனது உண்மையியல்பைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் படிவழி சென்று தலைப்பட்டுணர்ந்து, அவன் அருள்வழி நிற்றலே ஞானம் எனப்படும்.

இதற்குப் பயன் பரமலக்ஷியம் என மேற்கூறிய வீடுபேறு ஆகும். இது பரமுத்தி எனவும், சிவ சாயுச்சியம் எனவும் கூறப்படும். சிவ ஞானிகள் நிற்கும் நெறி நன்னெறி (சன்மார்க்கம்) எனப்படும். இது சமயகுரவர் நால்வர் வாழ்க்கையினும் உணரப்படுவதே யாயினும், மாணிக்கவாசகர் வாழ்க்கையை இந்நெறிக்குச் சிறப்பாக எடுத்துக் காட்டுவது வழக்கமாக உள்ளது.

### (v) யோகிகளும் ஞானிகளும் உருவ வழிபாட்டில் கொள்ளும் கருத்து வகை :

யோகியர் சிவலிங்கம் முதலிய திருமேனிகளை வழிபடும்போது, தமது இதயத்தில் விளங்கும் முதல்வன் அத்திருமேனிகளிலும் இருந்து வழிபாட்டை ஏற்றுக்கொள்வன் எனக் கருதிப் பிரணவம் முதலிய மந்திரங்களால் வழிபடுவர். அவர்களுக்கு முதல்வன் கறந்தபோது வெளிப்படும் பால்போல, அவ்வம்மந்திரங்களால் அவரவர் விரும்பிய வடிவாய் அவ்வப்பொழுது வெளிப்பட்டு அருள் புரிவன்.

சிவ ஞானிகள், முதல்வனை, ஓரிடமாகக் குறித்தல் இன்றி அன்புமாத்திரத்தால், அன்பு விளையும் இடங்களில் எல்லாம் வழிபடுவர். முதல்வன் அவர்களுக்குக் கன்றை நினைந்த தலையீற்று ஆனுக்குப்பால் அந்நினைவு மாத்திரத்தால் சுரத்தல் போல, எப்போதும் அவர் தம் அன்பே தானாக வெளிப்பட்டு நின்று அருள் புரிவன்.

இதனால், எல்லாராலும் தொழப்படும் முதல்வன் ஒருவனே ஆயினும், தொழுவார் கருத்து வேறுபாடுபற்றி, வழிபாட்டின் பயனும் அப்பயனை முதல்வன் அருளும் முறையும் வேறுபடும் என்பது உணரப்படும்.

### (vi) சரியை முதல் நான்கும் ஞானம் எனப்படல் :

மேலே கொடுத்த விளக்கத்தி லிருந்து இறைவனை அவரவர் உணர்வு நிலைக்கு ஏற்ப அறிந்து அணுகுதலே சரியை முதலாக நான்கு வகையில் வைத்து உணர்த்தப்படுகின்றது என்பது உணரப்படும். உருவம், அருவுருவம், அருவம், இவற்றைக் கடந்த உண்மை யறிவின்பப்பிழம்பு என்னும் முதல்வனுடைய நால்வகை இயல்புகளை முறையே அறிந்து செய்யும் வழிபாடே சரியை முதல் நான்காகக் கூறப்பட்டது. இவ் வழிபாட்டு முறையில், வழிபடுவோர் அறிவு படி முறையில் மேன்மேலும் நுணுகிவரும் என்பதும், அதற்குத்தக அறிவைத் தடுத்து நின்ற மலசத்தியும், முறைமுறையே தேய்ந்து வரும் என்பதும், "அன்பும் அருளும் அறிவுக்கு அடையாளம்" ஆகலின், முதல்வன் மாட்டு நிகழும் உண்மையன்பும் அம்முறையே முதிர்ந்துவரும் என்பதும் உணரத் தக்கன. முதிர்ந்து முறுகி வளர்ந்த மெய்யன்பு ஒன்றே முதற்பொருளை உணர்விப்பதும், உணர்ந்து பேரின்ப மயமாய் அநுபவிக்க வைப்பதும் ஆகும். இவ்வன்பு மெய்யுணர்வின் பயனாக முதல்வன் அருளால் கிடைப்பது.

"ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்" என்னும் பெரிய புராணம் இங்குச் சிந்திக்கத் தக்கது. இதனால் மெய்யுணர்வின் பயனே ஈசன்பால் உளதாகும் அன்பு என்பது உணரப்படும்.

"அன்பினில் விளைந்த ஆரமுதே" "ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே, என்னுடைய அன்பே", "அன்பே சிவமாயதாரும் அறிகிலார்", "அன்பில் ஊன்ற உள்ளெழும் சோதியாம் நின்றனன்" எனத் திருமுறைகளில் குறிக்கப்படும் அன்பு மெய்யுணர்வின் பயனாக முதல்வன் திருவருளால் பெறும் அன்பே ஆகும் என்னும் உண்மை உணர்ந்து கடைப்பிடிக்கத் தக்கது.

இன்னும் இங்குக் கூறியதிலிருந்து முதல்வனை உணரும் உணர்வே மெய்யுணர்வு எனப்படும். ஆகலின், முதல்வன் இயல்பை உணரும் உணர்வால் அவன்பால் மெய்யன்பும், அம்மெய்யன்பால் சரியை முதலிய வழிபாடும் நிகழ்வன என்பதும் உணரப்படும். இக்காரணம்பற்றிச் சரியை முதலிய நான்குமே மெய்ஞ்ஞானம் எனவும்படும். "விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே" என்னும் தாயுமானுர் வாய்மொழி கருதத்தக்கது.

### (vii) மெய்யுணரும் அறிவிற்றோன்றும் குறிகள் ;

பயன் கருதாது செய்துவரும் சிவபுண்ணியங்களின் பயனாக ஒருவன் அறிவின்கண் இருவினையொப்பு என்னும் குறி (அடையாளம்) தோன்றும். அஃதாவது, நல்வினை தீவினை என்னும் இருவினைகளையும், அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களையும்—இரண்டும் பிறப்புக்கே ஏது ஆவன எனக் கண்டு சமபுத்தி செய்து—ஒப்ப உவர்த்தல்,

" இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் —பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்னுந் திருக்குறள் இக்கருத்துப்பற்றி எழுந்தது.

இருவினை யொப்பின்கண் நிகழ்வன மலபரிபாகமும், சத்திநிபாதமும், சத்திநி பாதத்தால் மெய்யுணர்வின் விளக்கமும் ஆகும். மலபரிபாகமாவது மலசத்திகள் தேய்ந்து அகலுதற்குரிய பருவம் எய்துதல். இப்பரிபாகம் நிகழும்போது அதன்வழி நின்று உயிரை நடாத்தி வந்த முதல்வன் அருளாகிய திருவருள் தன்கருணைமறம் மாறிக் கருணையே யாகி உயிரின்கண் பதியும். இப்பதிவு சத்திநி பாதம் எனப்படும். சத்திநிபாதத்தில் நிகழ் வது மெய்யுணர்வு. மெய்யுணர்வின் முடிவு நிலையாகிய சிவஞானத்தால் அவா அறுத்து மெய்யன்பால் முதற்பொருளை அணைந்து பிரிப் பின்றி ஒன்றி நின்று இன்புறுதலே பரமுத்தி எனப்படும் வீடுபேறும்.

ஆதியார் தாளிணை அருளொடே வழிபடும்
நீதியாம் நீரினுர் நிலைமையாய் நின்றிடும்
பாதம்நான்கு; அவர்பெறும் பதமும்நான் கவற்றுளே
*ஓதியார் பெறுவதோர் உயர்பெருங் கதியதே.

—கந்தபுராணம்.

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நான்அழிய-வல்லதனுல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணு அரன்.

—திருக்களிற்றுப்படியார்.

*ஓதி-ஞானம்.

## செய்திகள்

மதுரை பேச்சியம்மன் துறை சாலையில் இருக்கும் ஸ்ரீ இராமேசுவரம் தேவஸ்தானம் பாடசாலையில் 25-10-58-ல் சிவாகம சித்தாந்த பயிற்சி வகுப்பு திரு. பி. டி. இராஜன் பார்-அட-லா. எம்.எல்.சி. அவர்கள் தலைமையில், சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை அமைச்சர் கனம் திரு. எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அவர்களால் துவக்கி வைக் கப்பட்டது. சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் கலந்துகொண்டார்கள். கனம் அமைச்சர் அவர்களையும், திரு. பி. டி. இராஜன் மற்றும் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் தேவஸ்தானத்தின் சார்பில் வரவேற்று வரவேற்புரையும் நிகழ்த்தப்பட்டது.

✦ ✦ ✦ ✦

சென்னிமலை, ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி தேவஸ்தானம், மலையாண்டவர் கோயில், திருப் பணியை சென்னை மாநில அறநிலையப்பாதுகாப்புத்துறை அமைச்சர் கனம் திரு. எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அவர்கள் 20-11-59 தேதி ஆரம்பித்துவைத்தார்கள். சென்னை அறநிலையப்பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் கலந்துகொண்டார்கள். அமைச்சர் அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

✦ ✦ ✦ ✦

பரதூர், ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில் மானேஜிங் டிரஸ்டி திரு. நா. காத்தப் பெருமாள் பிள்ளை அவர்கள் ஆதரவின்கீழ் சிதம்பரம் பரதூர் கிராமத்தில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் ஸ்தாபனக் கல்நாட்டுவிழா 24-11-59-ல் சிதம்பரம் திரு. ஜி. வாகீசம் பிள்ளை, எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. பரதூர் ஊராண்மைக் கழகத் தலைவர் திரு. உ. வாகீசம் பிள்ளை அவர்களால் நூல்நிலையத் திறப்புவிழாவும் அதனோடு இணைக்கப்பட்டு நடத்தப்பெற்றது. கடலூர் அறநிலையப் பாதுகாப்பு உதவி ஆணையாளர் திரு. ரா. அ. வரதராஜய்யர் அவர்கள் அடிக்கல் நாட்டிச் சிறப்பித்தார்கள்.

# ஸ்ரீ வைஷ்ணவம்

## பரிபாடலில் சோலைமலை

(பி. ஸ்ரீ)

ஸ்ரீவைஷ்ணவத்தின் பண்டைக்கால வளர்ப்புப் பண்ணைகளில் ஒன்று திருமாலிருஞ் சோலை என்ற சோலைமலை. இந்த மலைத்தலம் குறித்துப் பரிபாடலில் ஒரு பாடல் காணப் படுகிறது. இந்தப் பாட்டைப் பாடியவர் இளம்பெருவழுதியார். இவர் பாட்டு ஒன்று புறநானூற்றிலும் காணப்படுகிறது.

### தெய்வம் விரும்பும் மலை

மலைகள் நீண்டகாலமாக மக்களை வசீகரித்திருக்கின்றன; சிறப்பாகப் புலவர்களை வசீகரித்திருக்கின்றன. தெய்வத்தையும் வசீகரிக்கக்கூடியது மலை என்று பண்டைக்கால மக்கள் கருதிவந்தனர். விண்ணளாவிய மலையுச்சிகளில் விண்ணவர்கள் சஞ்சரிப்பதாக நம்பிவந்தார்கள். பழமையான புகழ்வாய்ந்த புலவர்கள் பல மலைகளை அழகிய நீண்ட மலைகள் (புனைநெடுங்குன்றம்) என்று பாராட்டியிருப்பதாகவும், அந்த மலைகளில் சில, மக்கள் துன்பங்களைப் போக்கி, நிறைந்த பயன்களைத் தருவதாகவும் இளம்பெருவழுதியார் தமது 'சோலைமலை'ப் பாட்டில் தெரிவிக்கிறார். இம் மலைகளிலும் சில, தெய்வங்களால் விரும்பப் படுகின்றன என்றும், இவற்றுள் மிகவும் சிறந்தது திருமாலிருஞ்சோலைமலை என்றும் சொல்லுகிறார்.

### சோலைமலையின் சிறப்பு

ஓங்கிநிற்கும் மலையைப் பார்த்ததும் மனமும் ஓங்குகிறது; துன்பமும் கவலைகளும், குறுகிய நினைவுகளும் மறைந்துவிடுகின்றன. மனக்கவலை தீர்த்து, விளக்குச்சுடரைத் தூண்டிவிடுவதுபோல் மனத்தைத் தூண்டி விடுகிறது மலை என்று தமிழறிஞர்கள் பாடியிருக்கிறார்கள். அத்தகைய அறிஞருள் ஒருவர் இளம்பெருவழுதியார்.

நாடு நகரங்களின் செழிப்பிற்குக் காரணமான ஆறுகள் மலைகளில் உற்பத்தியாகின்றன என்பதை அறியாதார் யார்? மலைகளில் அருவிகள் உண்டு; சுனைகள் உண்டு; தமிழர் நாகரிகமும் தமிழ்மொழியும் மலையிற்பிறந்தன என்றுகூடக் கருதுகிறோமல்லவா? மேகங்கள் படியும் மலைகளை மக்கள் விரும்புவதுபோல் தெய்வங்களும் விரும்புகின்றன என்றும், அத்தகைய மலைகளில் திருமாலிருஞ்சோலையில் திருமால் விருப்பத்துடன் கோயில்கொண்டிருக்கிறான் என்றும் பாடுகிறார் இளம்பெருவழுதியார்.

'நீள்நிலை ஓங்கு இருங்குன்றம்' என்று இப்புலவர் சோலைமலையைக் குறிப்பிடுகிறார். நீண்டு உயர்ந்த நிலைமையை உடையது இந்த இருங்குன்றம்—அதாவது, இந்தத் திருமாலிருஞ்சோலை—என்பது பொருள்.

### ஒன்று இரண்டாகி ஒன்றுகிறது!

திருமாலிருஞ்சோலையின் முக்கியமான சிறப்பு திருமால் இங்கே கோயில்கொண்டிருப்பது என்பதையும் தெளிவுபடுத்துகிறார் இளம்பெருவழுதியார். இங்கே இவர் கூறும் திருமால் கண்ணன்தான். ஆனால் இந்தத் தெய்வக்காட்சி ஒருவன் இருவராய்க் காணும் ஓர் அதிசயக் காட்சியாக வருணிக்கப்படுகிறது. அதாவது, திருமால் கண்ணனாகவும் பலராமனாகவும் தரிசனம் அளிக்கும் காட்சி இது.

கண்ணனையும் பலராமனையும் தாங்கிக் கொண்டிருக்கும் இம்மலை மக்கள் துன்பங்களைப் போக்கி அவர்களுக்கு வேண்டிய நிறைந்த பயன்களை அளிக்கவல்லது என்பது இவர் கருத்து. இந்த இரட்டைத் தெய்வங்களில் கண்ணன் கடல்போல் இருக்கிறானும்; பலராமனே கடற்கரைச் சோலையில் பரந்திருக்

கும் மணல்போல் இருக்கிறானும். கண்ணன் கருநிறம், பலராமன் வெண்ணிறம் என்பது குறிப்பு.

இப்படி இந்தச் சகோதர தெய்வங்கள் வேறு வேறு நிறங்களை உடைய உருவினராக இருந்தாலும் சொல்லும் பொருளும்போல் ஒன்று பட்டுக் காக்கும் தொழிலைச் செய்துகொண் டிருக்கிறார்களாம். மக்களைக் காப்பாற்றும் காரியத்தில் இந்தத் தெய்வ சகோதரர் இரு வரும் எல்லா வகையாலும் ஒன்றுபட்டவர் என்கிறார் இப்புலவர்.

### கதிதரும் மலை

திருமாலை இப்புலவர் 'நாறு இணர்த் துழாயோன்'—அதாவது, வாசனை வீசுகின்ற சின்னஞ் சிறு பூங்கொத்துக்களையுடைய துளசி மாலையை அணிந்திருப்பவன் என்கிறார். திருமால் அருள்பெறுவோர்க்கே தனிச் சிறப்பு வாய்ந்த வானுலகம் கிடைக்கும் என்கிறார். திருமால் அளிக்கும் இத்தகைய பரமபதத்தை,

வீறுபெறு துறக்கம்

என்கிறார் இளம்பெருவழுதியார்.

இந்தப் பரமபதத்தை 'அரிதிற்பெறு துறக்கம்'—அரிதாகப் பெறுதற்கு உரிய வானுலகம்—என்றும் கூறுகிறார். அரிதாகப் பெறுதற்கு உரிய பரமபதத்தை எளிதில் பெறுவதற்கு உதவுகிறது 'மாலிருங்குன்றம்' என்கிறார்.

சோலைமலையை 'இருங்குன்றம்' என்றும் 'மாலிருங்குன்றம்' என்றும் இவர் குறிப்பிடு வதிலிருந்து, சோலைமலைக்குத் திருமாலிருஞ் சோலைமலை என்ற பெயர் அந்தப் பழங்காலத் திலேயே இருந்திருக்கவேண்டும் எனக் கருத லாம்.

### பலதேவன், சிலம்பருவி சோலைமலை

இக்காலத்தில் திருமாலிருஞ்சோலைத் திருமால் கண்ணன்தான். ஆனால் சங்க காலத்திலும் சங்கப் பிற்காலத்திலும் பலராம னையும் மக்கள் வழிபட்டுவந்தனர் என்று தெரியவருகிறது. பலதேவன் என்ற பலராமன் வெண்ணிறமுடையவனாக இருந்ததுடன், வெண்கடம்பு மலரால் தொடுத்த மாலையை மார்பில் அணிந்து காட்சி அளித்தான் என் றும் புலவர் வருணிக்கிறார்.

சோலைமலையில் நூபுரகங்கை என்னும் சிலம்பருவி விழுவதைப் பலரும் அறிவர். பழையகாலத்தில் இது ஒரு பெரிய அருவி யாகத் திகழ்ந்தது என்று கருத ஆதாரம் உண்டு. பேரொளியுடன் 'மாண்வரத்தோன்றி அலங்கும் அருவி' என்கிறார் இப்புலவர். சோலைமலையில் சிலம்பருவி மாட்சிமை பெறத் தோன்றி ஆரவாரத்துடன் அசைந்து விழும் காட்சி இது. அந்த மாட்சிமையை இன்று நாம் நூபுரகங்கையில் காண்பதற்கில்லை. அப்படி மாட்சிமையுடன் விழுந்துகொண் டிருந்த மலையருவி தெய்விகமாட்சிவாய்ந்த பலதேவனுடைய மார்பிலுள்ள வெண்கடம்பு மலர்மாலை போலத் தோன்றியதென்பது இப் புலவர் வருணனை. இத்தகைய சிலம்பருவி யால் அழகுபெறுகிறது சிலம்பாறு என்று, அந்த நீர் பெருகி ஆறுபோல் ஓடுவதையும் குறிப்பிடுகிறார் இவர்.

சிலம்பாறு சோலைமலைக்கு அணியாக விளங்குகிறது என்கிறார். சோலைமலையின் சோலைவளத்திற்கும் வனப்பிற்கும் இந்த ஆறு காரணம் என்பதையும் குறிப்பாகக் கூறியுள் ளார்.

சிலம்பாறு அணிந்த
சீர்கெழு திருவின்
சோலை

என்பது இப்புலவரின் அழகான வாக்கு.

திருமாலிருஞ்சோலை என்ற முழுப் பெய ரையும் இவர் தம் மணிமொழிகளில் அணி பெற இழைத்திருக்கிறார்!

சோலையொடு தொடர்மொழி
மாலிருங் குன்றம்

என்று சொல்லவந்தவர் 'திருவின் சோலை யொடு....என்று தொடங்குவதைக் காண் கிறோம்.

'திரு' என்னும் சொல்லோடு தொடர்ந்த 'மால்' திருமால் என்று அமைகிறதல்லவா? சோலை என்னும் சொல்லோடு தொடர்ந்த குன்றம் சோலைக்குன்றம் என்று அமைந்து சோலைமலை என்று பொருள்படும். திருமா லிருஞ்சோலைமலை என்பது முழுப்பெயர்; சோலைமலை என்பது சுருக்கமான பெயர். இதையே திருமுருகாற்றுப்படையில் நக்கீர

தேவர் 'பழமுதிர் சோலைமலை' என்று குறிப்பிடுகிருர்.

## மாமனும் மருகனும்

திருமுருகாற்றுப்படை ஆசிரியர் முருகனைப் பாடியிருக்க, இளம்பெருவழுதியார் திருமாலைப் பாடுகிருர். இவர் காலத்தில் திருமாலின் கோயில் பிரசித்தமாக இருந்ததுடன், இப்புலவரும் விஷ்ணுபக்தியில் ஈடுபாடு உடையவராக இருந்தார் என்று ஊகிக்கலாம். திருமுருகாற்றுப்படை ஆசிரியர் அதிதீவிர முருகபக்தராக இருந்தார்; இளம்பெருவழுதியார் தீவிர விஷ்ணுபக்தராக இருந்தார்.

கண்ணனும் பலராமனும் தெய்வ சகோதரர்களாக உறவுபூண்டு மக்களுக்குத் துன்பம் போக்கி நிறைபயன் அளித்ததுபோல், மருகனும் மாமனும் (முருகனும் திருமாலும்) தரிசனம் அளித்து மக்களை வாழ்வித்தனர் என்று கருதுவதும் பொருந்துவதே.

## ஒளியிடை இருள்!

சோலைமலை பெரும் புகழும் பெற்றிருந்தது என்கிருர் இளம்பெருவழுதியார். வியக்கத்தக்க பெரிய மலை என்கிருர். இங்கே கண்ணன் பொன்னுடை புனைந்த நீலமேனியனுகக் காட்சிதருகிருன் என்கிருர். அதிசயமான காட்சி என்கிருர். இந்த அதிசயத்தை 'இளவெயில் வளாவ (சூழ) இருள் வளர்வன' என்று வருணித்திருப்பது ஊன்றி நோக்கத் தக்கது.

காலையில் இளவெயில் தோன்றும்போது இருள் மறைந்துவிடுகிறதல்லவா? பொன்னிற இளவெயில் தன்னைச் சூழ்ந்துகொள்ள அந்த வெயிலுக்கு ஆற்ருது கருநிற இருள் அப்படியே மறைந்து மாயமாய்ப் போவதைக் காண்கிரேம். ஆனுல் சோலைமலையில் ஆச்சரியமான முரண்பாடுகொண்ட ஒரு சூரியோதயம் காண்கிருர் இளம்பெருவழுதியார்.

மண்புனல் இளவெயில்
வளாவ,இருள் வளர்வெனப்
பொன்புனை உடுக்கையோன்

என்ற வாக்கை ஊன்றி நோக்கவேண்டும்.

இளவெயில் சூழ்ந்துகொள்ள, அந்த வெயிலுக்கு இடையே சிறிதும் மங்காது இருள் வளரும் அதிசயத்தையல்லவா இங்கே காண்கிரேம்? வெயில்தான் மங்குகிறது மயங்குகிறது இந்த நீலஜோதிக்கு முன்! பீதாம்பரம் தரித்து நிற்கும் திருநெடுமாலின் தோற்றமல்லவா?

'மக்களே! இக் கண்ணன் பலராமனேடு அமர்ந்திருக்கும் நிலையை உள்ளத்தில் கொள்ளுங்கள், நினைத்துப் பாருங்கள்' என்கிருர் புலவர். இப்படிச் சொல்லிவிட்டு, 'இனி நீங்கள் திருமாலிருஞ்சோலையின் மணம் கமழ் சிறப்பினைக் கேட்பீராக!' என்கிருர்.

## இயற்கையழகுகளின் இடையே அழகன்

கண்ணனை ஒத்த சிறப்பை உடையது கண்ணன் வாழும் சோலைமலை என்கிருர். பன்னிற மலர்களும் காய்கனிகளும் இம் மலையை அணி செய்கின்றன என்று சொல்லி, இதன் அதிசய அழகு திருமாலின் சௌந்தரிய அதிசயத்தை நினைவூட்டுகிறது என்கிருர். சென்று தொழ முடியாதவர்கள் கண்டு பணிந்து பேறு பெறலாம் என்கிருர்.

மலைச்சுனைகளில் நீலப்பூக்கள் கண்ணனின் நீலமேனி காட்ட, சுனைகளைச் சூழ்ந்து காணப்பட்ட அசோக மரங்களின் மலர்கள் கண்ணனது பொன்னுடை போல் காட்சி தருகின்றனவாம். மேற்பகுதிகளில் மாறுபட்ட நிறங்களோடு காணப்பட்ட காய் கனிகளும் பொன்னிற மலர்களும், பன்னிற மணிகள் இழைத்துப் பொன்னுல் செய்த (திருமாலின்) கிரீடத்தை ஒத்திருக்கின்றனவாம்.

திருமாலிருஞ் சோலையில் கேட்கும் ஓசைகளையும் வருணிக்கிருர். குட்டி தழுவியிருக்கும் தாய்க்குரங்கு பாயும் காட்சி ஒருபுறம். முல்லைக்கொடி வீசிப் படர்ந்து மெல்லரும்பு ஈன்று கிடக்கும் காட்சி ஒரு புறம். மயில்கள் ஆடாமல் ஒலி செய்துகொண்டிருக்கும் ஓசை ஒருபுறம்; குருக்கத்திச் செடிகளில் இலைகள் உதிரும்படி நுழைந்து குயில்கள் கூவும் கீதம் ஒருபுறம். மலைக்குகைகளில் தோன்றும் எதிரொலிகளையும் குறிப்பிடுகிருர்.

இத்தகைய குன்றை மனைவி மக்களோடு திசை நோக்கித் தொழுது செல்லுங்கள், மலைக்குச் செல்ல இயலாத மக்களே!' என்கிருர். 'மலையைத் திருமாலாக மதித்து வழிபட்டுச் செல்வீராக' என்கிருர்.

திருமாலிருஞ்சோலையில் திருமால் ('இருள் மயங்கு மணி மேனியன்) விசேஷ அன்புடன் எழுந்தருளியிருக்கிறனும். இப் பெருமானைத் 'தாமரை புரையும் கண்ணன்' என்கிறர்.

### துன்பம் களைவோன்

என்கிறர். 'இருங்குன்றத்தான்' என்கிறர்.

## இரட்டைத் தெய்வ வழிபாடு ('பெரும்பெயர் இருவர்')

பலதேவ—கிருஷ்ணர் இருவரையும் வாழ்த்துவதுடன் இப்பாட்டு முற்றுப்பெறுகிறது. வேதத்திலேயே இந்த இரட்டைத் தெய்வ வழிபாட்டுக்கு ஆதாரம் இருக்கிறதென்று கருதுகிறர் இப்புலவர். 'வேதம் இந்த இரட்டைத் தெய்வத்தைப் புகழ்ந்து பேசுவதால், நாங்கள் அந்த இருவரையும் வணங்குகிறேம்' என்கிறர்,

மனைவி மக்களோடும் பெற்றேரோடும் அன்புள்ள உறவினரோடும் பிறரும் வணங்கிப் பேறுபெற வேண்டும் என்று ஆசைப்படுகிறர்.

### வாழும் வழி

இங்கே துறவு நெறி குறிக்கப்படவில்லை; வாழும் வழியாகத்தான் வைஷ்ணவம் குறிக்கப் பெறுகின்றது. கண்ணனின் நீலமலை போன்ற தோற்றத்தை உள்ளத்தில் கொண்டு, 'சோலைமலை மேல் ஒரு நீலமலையே!' என்று போற்ற விரும்புகிறர். 'பசுமையான துளசி மாலை (பசுந்துளவு) அணிந்திருக்கிறன் எம் கண்ணன்' என்கிறர். இப்படிக் கண்ணனைப் போற்றுகிறவர், ஒற்றைக் குண்டலத்துடன் வெண்ணிறமேனியனுக விளங்கும் பலதேவனையும் போற்ற விரும்புகிறர்.

கருடப் பறவையின் உருவம் கொண்டுள்ள அழகிய கொடியை உடையவன் கண்ணன் என்று, அந்த வெற்றிக்கொடியின் சிறப்பில் ஈடுபடுகிறர். அதே சமயம் பலதேவனது வெற்றிக்கு அறிகுறியான கலப்பைப் படையைக் குறித்தும் பிரஸ்தாபிக்கிறர். பிறகு கண்ணன் பெருமையிலேயே ஈடுபட்டுப் பலபடியாகப் புகழ்கிறர்.

இவ்வளவு புகழும் வேதத்தில் காணப்படுகிறது என்கிறர். அத்தகைய வேதத்தை 'அஞ்சிர் நாம வாய்மொழி'—அதாவது அழகிய சீரும் புகழும் வாய்ந்த வேதம்—என்கிறர்.

'பெரும்பெயர் இருவர்' என்று போற்றப்படும் இரட்டைத் தெய்வத்தை வேதம் துதித்து நலம் பெற்றிருப்பதுபோல் தாமும் துதித்து நலம்பெற விரும்புகிறர். எதற்காக? பலதேவ—வாசுதேவர்களான இருவரும் கோயில் கொண்டிருக்கும் திருமாலிருஞ் சோலை மலையின் அடியில் வாழும் வாழ்க்கை தமக்கும் தம்மைச் சேர்ந்தவர்களுக்கும் வாய்க்கவேண்டும் என்பது இங்கே இவரது முடிவான பிரார்த்தனை.

வாழ்க்கை வேண்டும் என்கிறர். வாழும் வாழ்க்கை வேண்டும் என்கிறர். 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்று சிவநேசச் செல்வரான திருஞான சம்பந்தர் கூறி அதற்குச் சிவவழிபாட்டைப் பெருவழியாகக் காட்டுவதுபோல், இளம்பெருவழுதியாரும் வாழப் பெருவழி ஒன்று காட்டுகிறர் இந்தப் பரிபாடற் பாட்டிலே.

'கழுமலவள நகரில் அம்மையப்பனுகக் காட்சி தருகின்றன் இறைவன்; அவன் அருளால் அவன் தாள் வணங்கினுல் இவ்வுலகத்திலே நல்ல எண்ணம் வாழ வழி தெரியும்' என்பது திருஞான சம்பந்தரின் திருவுள்ளம். இளம்பெருவழுதியாரோ திருமாலிருஞ் சோலைமலைத் தலத்தில் பலதேவருடன் இசைந்து தரிசனம் அளிக்கும் கண்ணபிரானை வழிபட்டு, அந்த மலையடியில் வாழப்பெற்றல் வாழும் வழி தானே புலனுகிவிடும் என்று முடிவு கட்டுகிறர்.

### கைம்மக வோடும் காதல் அவரொடும்

வாழ்ந்து இல்லறத்தை நல்லறமாக்கிக் சொள்ளும் வாழ்க்கையைத்தான் இவரும் குறிப்பிடுகிறர்.

* * *

அந்தக் காலத்திலே சோலைமலையின் அடியில் இப்படி வாழ்ந்த பாகவத சமயிகள் (வைஷ்ணவர்) திருமாலிருஞ் சோலைக்கு யாத்திரையாக வந்தவர்களுக்கு வைஷ்ணவக் கொள்கைகளை அறிவித்தார்களென்றும், இவர்களும் பல வேறு தலங்களுக்கு யாத்திரை போய் அங்கங்கே இக்கொள்கைகளை விதைத்து வளரச் செய்தார்களென்றும் ஊகிக்கலாம்.

# திருவாதிரை

[திரு. T. S. கந்தசாமி முதலியார் M.A., சாத்தூர்]

நிலமிசை வாழும் மக்கள் வானத்தை யென்றும் ஆரா விருப்புடன் நோக்கி ஓவா வியப்பெய்துகின்றனர். வானமிந் நிலவுலகிற்குப் பேரழகு செய்கின்றது. மதிபூவா இரவில் வானம் முல்லை பூத்த கானம்போல் விளங்கும். மதிபூத்த இரவிலோ அது மலர் பூத்த பாற்கடல் போற்றிகழும். வானத்தில் மின்னும் மீன்கள் எண்ணிறந்தன. எனினும் அவற்றுள் நாண்மீன்களாக விளங்குவன மிகச் சிலவே. மதி சென்னெறியாகிய மதி செல் மண்டிலத்தில் விளங்கும் மீன்கள் நாண்மீன்களாம். நாண்மீன்கள் தாமே இயல்பாக ஒளியுடையன. மதிமீனன்று; கோள். மதிதன்னியல்பில் ஒளியுடையதன்று. அது ஞாயிற்றொளியைப் பெற்று, அதை எதிரொளி செய்கின்றது. ஞாயிறுமீன்; தன்னொளியுடையது. மீன்கள் நிறத்தாலும், அளவாலும், பிறவற்றாலும் வெவ்வேறு தன்மையுடையன.

பண்டைத் தமிழர் வானநூற் புலமை பெற்றிருந்தனர். நிலம், ஞாலம், மீன், கோள் முதலிய சொற்களே தமிழர் வானநூற் புலமையை மெய்ப்பிக்கும் தக்கச் சான்றுகள். உலக மக்களனைவரும் பூமியைப் புடைபெயர்ச்சியின்றி நிற்கும் இயல்புடையதெனக் கருதினர். தமிழரும் அவ்வுணர்வால் பூமிக்கு, நிலம் எனப் பெயரிட்டனர். நில் என்னும் பகுதி, அம்மென்னும் விகுதியொடு புணர்ந்து, நிலமென்றாகி, நிற்குந்தன்மையுடையதென்று கருதப்பட்ட பூமியைக் குறித்தது. 'ஞாலம்' என்னும் சொல், ஞால் என்னும் முதனிலையடியாகப் பிறந்தது. அம் முதனிலை, 'அம்' விகுதியொடு புணர்ந்து, 'ஞாலம்' என்றாயிற்று. அச்சொல், வெளியிடைத் தொங்கும் நிலவுலகத்திற்குக் காரணக் குறியாயிற்று. 'ஞா' என்னும் முதனிலையடியாகப்பிறந்த 'ஞாயிறு' என்னும் சொல் நாப்பணுள்ளதென்னும் பொருள் பயந்து ஒளி மண்டிலத்தின் நடுவிலுள்ள சூரியனைக் குறிக்கின்றது. மின்னென்னும் முதனிலை நீண்டு மீன் என்றாகி, மின்னு தலையுடைய மீனை யுணர்த்திற்று. கொள்ளென்னும் முதனிலை நீண்டு கோள் என்றாகி, தானே ஒளி செய்யமாட்டாது, பிறிதோர் ஒளி பொருளின் ஒளிபெற்று மின்னும் பொருளைக் குறித்தது. இத்தகைய சொற்களை ஆக்கிக்கொண்ட தமிழர் வானநூற் புலமையுடையரா யிருந்தனர் எனக் கூறினால் அது மெய்ம்மையுடையதன்றோ?

செஞ்ஞாயிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும்' பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போலவென்றும்
இனைத் தென்போரு முளரே. (புறம்-30)

எனப் பண்டைத் தமிழரின் வானநூற் புலமை பாராட்டப் பெற்றிருத்தல் காண்க. தம் கையகத்துள்ள பொருளின் தன்மையைப் பிறர் அறியும் தெளிவினும், வானநூற் புலவர் வானகத்திலுள்ள பொருளின் தன்மையை யறியுந்தெளிவு சிறப்புடையது. நாண்மீன்களையே தமிழர் நன்கறிந்தனர். ஏனையவற்றுள் 'வடபுல வெள்ளி'யை நன்கறிந்திருந்தனர். 'வடபுல வெள்ளி தென்புலம் படரினும்' என வடதிசை நீங்காத துருவமீனை வெள்ளைக்குடி நாகனார் கூறியுள்ளமை காண்க. நாண்மீன்களுள் பல்லாற்றானும் சிறந்த திருவாதிரையைத் தமிழர் நன்கறிவர்.

உலகங்கள் பலவற்றிற்கும் முதல்வனும் அவற்றை யெல்லாம் படைத்து, அளித்து, அழிக்கும், பிறவாயாக்கைப் பெரியோனுமாகிய சிவனைத் தமிழர் 'ஆதிரையான்' என அழைத்தழைத் தகம்குழைந்து, ஆரா இன்பத்துள் திளைக்கின்றார். ஆதிரையையும் பிற அண்டங்களையும் ஒருங்கே படைத்த ஆதி சிவனை, ஆதிரையிற் பிறந்தான், என்னும் பொருள்கொண்டு, ஆதிரையான் என்பர் சிலர் : அவர் அறியார்.

"மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்

ஆதிரையா னுதிரையா னென்றென் றயர்வுறுமீ
யூர் திரைநீர் வேலியுலகு.''

என்னும் பண்டைப் புலவர் செய்யுள் அப் பொருளைத் தெளிவுறுத்தும். ஆதிரையான் எனச் சிவனை அழைப்பதற்குத் தக்க காரணம் வேறு உளதாதல் வேண்டுமென உய்த்துணரக் கிடக்கின்றது. அக்காரணம் யாதெனப் பின்னர் ஆராய்வாம்.

திருவாதிரை யென்னும் பெயர் அம் மீனுக்குத் தமிழர் முதற்கண் சூட்டிய பெயரன்று. அம்மீனுக்கு வடமொழியாளர் இட்ட பெயர் 'ஆருத்ரா' என்பது. அவ்வட மொழிப் பெயரே, ஆதிரையெனத் திரிந்து, 'திரு' என்னும் கடவுட் சார்பைப் புலப்படுத்தும் அடைமொழி பெற்றுத் திருவாதிரை யென மருவியுளது. அவ்வடமொழிச் சொல்லுக்குச் செந்நிறமுடையதென்பது பொருள். பின்னை, தமிழர் அம்மீனுக்கிட்ட பெயர்தான் என்னையோஎனின், அது 'செம்மீன்' என்பதாம். 'செம்மீன்' எனும் சொல்லும் அப் பொருட்டாதல் காண்க. திருவாதிரை யென்னும் சொல் வழக்கேறச் செம்மீன் என்னும் வழக்கு வீழ்ந்தது. வானநூற் பொருண்மையுடைய பல தமிழ்ச்சொற்கள், அங்ஙனமே வடமொழிச் சொற்கள் வழக்கேற, வழக்கு வீழ்ந்தன.

நாண்மீன்கள் பலவற்றுள்ளும் திருவாதிரை உருவத்தில் மிகப் பெரியது. அதனிற் பெரியது கேட்டை ஒன்றே. ஆதிரை இத்துணைப் பெரிதென மனத்தாலும் யார்க்கும் கணித்தற்கரிய பெரிய வுருவத்தது. நிலத்தின் வாழும் மக்கள் நிலமே சாலப் பெரிய பொருள் என மதித்துத் தருக்குவர். அவர் வானிடை யியங்கும் மீன்களின் பருமையை யுணரார். தலைவி, தலைவன் பால்வைத்த அன்பின் மாண்பை விளக்கவந்த கவி, அவ்வன்பை நிலத்தினும் பெரிது எனக் கூறினர். அக்கவியின் கருத்துள் நிலமே மிகப் பெரிய பொருளென்னும் கொள்கை படிந்து கிடக்கின்றது. ஆதிரை நடுவிற் பூமியை வைக்கின் இந்நிலவுலகம் ஊசியின் நுனியினும் சிறிதாகத் தோன்றும். ஞாயிறு, நிலத்தினும் பதின்மூன்று லக்ஷத்தையாயிரம் மடங்கு பெரிது. ஆதிரை ஞாயிற்றினும் இரண்டரைக் கோடி மடங்கு பெரியது. அதன் குறுக்களவு இருநூறு கோடி மைல் நீளமென்ப. ஞாயிறு பூமியினின்று ஒன்பது கோடியே முப்பது லக்ஷம் மைல் தூரத்துளதென்ப. ஞாயிறிருக்குமிடத்தில் திருவாதிரையை வைப்பின், அது பூமியிருக்குமிடத்தையும் கடந்து அதன் கீழும் சென்று செவ்வாயையும் தொடும் என்று வானநூற் புலவர் கூறுவர். கேட்டை மீன் ஆதிரையினும் மற்றுமோர் அரை மடங்கு பெரியது. ஆனல் அது இருசுடர்களின் நெறியை விட்டுச் சிறிது விலகியுளதென கருதற் கிடமுளது.

ஆராயுமிடத்து, மதி செல்லும் நெறியில் விலகாது நேர் நிற்கும் மீன்களுள் தன்னேடிணைப்பதின்றி தானேயாகப் பெரியது திருவாதிரையாம்.

விண்மீன்கள் பல நிறமுடையன. சில வெண்ணிறமுடையன. சில மஞ்சள் நிறத்தன. வேறு சிலவற்றின் நிறம் நீலம்; மற்றும் சிலவற்றின் நிறம் செம்மை. செம்மை நிறமுடைய நாண் மீன்கள் கேட்டை, ஆதிரை, உரோகணி என மூன்றும். மீன்கள் இயற்கையொளியுடையன எனக் கண்டோம். அவைகள் அளப்பில் வெப்பமுடையன. வெப்பத்தின் ஏற்றத் தாழ்விற்கேற்றுங்கு அதனையுடைய பொருள்கள் நிறத்தில் வேறுபடுகின்றன. செந்நிறமுடைய மீன்களின் வெம்மை சென்றிகிரேடு (Centrigrade) வெப்பளவை (Thermometre)யில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவரை யளவை (Degree) யாகும். ஆதிரையும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வரையளவையுடைய வெப்பமுடையது. விண்மீன்களுள் ஆதிரை பேரொளி யுடையது.


ஆதிரை நிலத்தினின்று மிகமிக நெடுந் தூரத்தில் வானிடையுளது. வானில் மீன்கள் எல்லாம் நிலத்தினின்று சம தூரத்தில் இருப்பனபோல் தோன்றினும் நுனித்தாராயின் அவை ஒவ்வொன்றும் ஏற்றத்தாழ்வுடைய தூரத்திலிருந்து மின்னுகின்றன வெனக் காணலாம். செம்மீன் சிந்தையும் செல்லாச் சேணிடையுள்ளது. விண்ணியங்கு பொருள்கள் மக்கள் மனத்தையும் மலைவிக்குந் தூரத்திலிருப்பனவால், அவற்றேடு பூமியிடை யுளதாய தூரத்தை, அறிஞர் ஒளிக் கால வாய்பாட்டிற் கூறுவர். ஒளி, தான் தோன்றும் இடம் விட்டுப் புறப்பட்டுச் செல்

லுங்கால் கணத்திற்கு, ஒரு நூற்றெண்பத் தாருயிரம் மைல் வேகத்திற் செல்லுமென்ப. அவ்வேகத்தோடு செல்லும் ஒளி, குறிப்பிட்ட ஒரு மீனினின்று புறப்பட்டு, நிலத்தையடையச் செல்லும் காலத்தால், நிலத்தோடு அம் மீனிடை யுளதாய தூரத்தைக் குறிப்பிடுதல் வானநூற் புலவர் வழக்கு. ஆதிரையினின்று புறப்படும் ஒளி நிலவுலகத்திற்கு வந்து சேர இருநூறு ஆண்டுகள் செல்லும் என்ப. ஆதலின், ஆதிரை, நிலவுலகத்தினின்று இருநூறு ஒளியாண்டு தூரத்துள தென்ப. அங்ஙனம் கூறுதலின் பொருளாவது, திருவாதிரை இன்று வானிடை விட்டொழிந்து போயினும், இன்னும் இருநூறு ஆண்டுகளுக்கு, அதன் ஒளி, நம் கண்ணுக்குப் புலப்படும் என்பது,

ஆதிரை மிக்க விசையுடன் வானிடையிடையறு தியங்கிக் கொண்டுளது. விண் மீன்கள் பலவும் இடையறு தியங்குகின்றன, கணம் ஒன்றிற்குப் பதினைந்து மைல் விசையுடன் ஆதிரை யியங்கு மென்ப.

ஆதிரை, ஒரு தனி மீனுயினும், அஃதொரு மீன் கூட்டத்திலுள்ளது. அக்கூட்டத்தை மேலைநாட்டு வானநூற் புலவர் ஒரியன் எனக் கூறுவர். அக்கூட்டத்தை முழுதுற சோக்கின் அஃதொரு சிறு மரக்கலம் போன்றும், ஆதிரை அதில் ஏற்றிவைத்துள்ள செஞ்சுடர் விளக்குப் போன்றும் காணப்படும்.

—தமிழ்க்கலை ஆண்டுமடல்.



இராமேசுவர தேவஸ்தான ஆதரவில் மதுரையில் சிவாகம சித்தாந்தப் பயிற்சி வகுப்பை 25-10-59-ல் அறநிலையஅமைச்சர் திறந்துவைத்தல்.

# மலைநாட்டுத் திருப்பதியநுபவம்

[மகாவித்வான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்]

[திருமூழிக்களப்பதியின் அநுபவத் தொடர்ச்சி]

நம்மாழ்வாருடைய திருவாய்மொழியில் (9—7) எங்கானலகங்கழிவாயென்கிற பதிகத்தில் திருமூழிக் களத்தப்பனை நோக்கித் தூது விடப்படும் நாரை கொக்கு குருகு முதலிய பறவைகட்கும் மேகத்திற்கும் உள்ளுறை பொருள் விளக்கப்பட்டதாயிற்று கீழ். அதில் 6, 8 ஆம் பாசுரங்களில் தூது விடப்படும் வண்டினங்களுக்கு இப்போது உள்ளுறை பொருள் விளக்கப்படுகின்றது.

[6. தூதுமொழிவாய் வண்டினங்கள்!] என்று வண்டுகளை விளிக்கின்றாராழ்வார். தூய மொழியை வாயிலேயுடைய வண்டினங்களே! என்பது பொருள். "வரிவண்டு தேதென வென்றிசை பாடும்" என்றும் "தென்னாதெனாவென்று வண்டு முரல் திருவேங்கடத்து" என்றும் பற்பல விடங்களில் வண்டுகள் இசை பாடுவதாக [அதாவது ரீங்காரம் செய்வதாக]ச் சொல்லப்படுவதுண்டு. இதை நாம் அனுபவத்திலுங் காண்கிறோம். தூய மொழிகளை வண்டுகள் சொல்லுவதாகக் கண்டதில்லை. இங்கே தூமொழிவாயென்று அடைமொழி கொடுத்துக் கூறியதனால் தூய வாக்கினால் உபகரிக்கும் ஆசிரியர்களையே வண்டாகக் கொண்டனராழ்வார் என்பது சொற்றொடையிலேயே தோன்றி நின்றது. இங்கு 'தூதுரைத்து மறுமாற்றம் கொண்டு வாருங்கள்' என்னாமல் தூதுரைத்தல் சொல்லவேண்டுமென்றிவ்வளவே கூறியுள்ளதனால் ஒரு சிறந்த நூற்கொள்கை தெரிவிக்கலாகிறது. அடியார்களைக் காப்பதில் (அல்லது) அடியார்களுக்குக் காட்சி தருதலில் எம்பெருமான்தானே இயற்கையாகக் குதூகலமுடையவன். அன்னவன்பால் நாம் இரப்பதோ தூதுவிடுவதோ செய்யத்தக்கதன்று. சிசுக்களுக்குச் செய்யவேண்டிய போஷணைகளைத் தாய்தந்தையர் தாமாகவே செய்கின்றனரேயன்றி, சிசுக்கள் வேண்டச் செய்வதாகவுண்டோ? இல்லையே. அஃதேபோல நமக்கு ஆவன செய்யக் கடமைப்பட்டிருக்கின்ற திருமாலிடத்து நாம் இரப்பதும் தூதுவிடுவதும் எதுக்கு? என்று சிலர் நினைக்கக்கூடும். இவ்விடத்து உண்மையாதெனில்; "ஸர்வஜ்ஞோபி ஹி விச்வேச: ஸதா காருணி கோபி ஸந், ஸம்ஸார தந்த்ர வாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்று முனிவர்கள் மொழிகின்றார்கள். இதன் கருத்து யாதெனில், பகவான் இயற்கையாகவே எல்லாமுணர்ந்தவனாயினும், நம்போல்வாரிடத்து எப்போதும் அருள் மிகுந்தவனாயினும் 'என்னைக் காத்தருளவேண்டும்' என்று நம் போல்வார்வாயினின்றும் வெளிவரும் வேண்டுகோட் பாசுரத்தையும் விரும்புகின்றான் என்பதாம்.

இங்ஙனம் விரும்புகைக்குக் காரணமும் இந்த சுலோகத்திலேயே கூறப்பட்டுள்ளது. [ஸம்ஸார தந்த்ரவாஹித்வாத்] என்று. அவரவர்கள் வேண்டாமல் தானே காத்தருள்வதானால் வாசியற எல்லாரையும் ஏககாலத்திலேயே காத்தருள வேண்டிவரும். அந்தக் கிலேசம் நேராமைக்காக வென்றபடி. இந்த நூற்கொள்கையைப் பிள்ளையுலகாசிரியரும் முமுக்ஷுப்படியென்னும் ரகசிய நூலில் "இவன் அர்த்திக்கவேணுமோ? ஸர்வஜ்ஞன் இவன்நினைவு அறியானோவென்னில், இவன் பாசுரம் கேட்டவாறே திருவுள்ளமுகக்கும்" என்றிரண்டு சூர்ணைகளினால் விளக்கியுள்ளார்.

இங்ஙனமே சொல்லுமளவில் 'எம்பெருமான் நிர்ஹேதுகமாக அருள் செய்கிறான்' என்னும் நூற்கொள்கை பங்கமடையாதோ

வென்று சங்கிக்க வேண்டா. நிர்ஹேதுகமாக அருள் செய்வதென்பது சில உயர்ந்த அதிகாரிகள் திறத்திலேயன்றி எல்லார் திறத்திலுமன்று. இது பகவானுடைய திருவாக்கிலேயே வெளிவந்த விஷயம்; "நாஸௌ புருஷகாரேண ந சாபி அந்யேந ஹேதுநா, கேவலம் ஸ்வேச்ச யைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந" என்பது பகவானுடைய திருவாக்கு. ஒரு கால விசேஷத்தில் ஓர் அதிகாரி விசேஷ விஷயத்தில் நான் எனது இஷ்டமே காரணமாக விசேஷ கடாக்ஷம் செய்கின்றேனென்பது இத் திருவாக்கின் தாற்பரியம்.

ஆக, பகவானிடத்து நமது கோரிக்கையைத் தெரிவிக்கவேண்டியது பொதுவானவொரு விதியென்று தெரியவருவதால் "செய்த்தலையெழு நாற்றுப்போல் அவன் செய்வன செய்து கொள்க" என்கிற உறுதிக்கும் குறையில்லாதபடி நம்முடைய பிரார்த்தனை இன்றியமையாததென்று முடிந்தது. இதுவே 'தூதுரைத்தல் செப்புமின்கள்' என்றதனுல் தெரிவிக்கப் பட்டதாம்.

[இனி வண்டுக்கும் ஆசிரியர்க்குமுள்ள ஒற்றுமை நயம் விவரிக்கப்படுகின்றது.]

1. வண்டு வடமொழியில் மதுவிரதமென்று பேர் பெற்றிருக்கும். தேன் தவிர வேறென்றைக் கொள்ளாது என்றபடி. அதுபோல, சாஸ்திரங்களில் தேனுகச் சொல்லப்பட்ட எம்பெருமானையன்றி மற்றென்றைவிரும்பாதவர்கள் வண்டெனத்தகுவர். திருமங்கையாழ்வார் எம்பெருமானை "உளங்கனித்திருக்கு மடியவர் தங்களுள்ளத் துளூறியதேன்" என்கிருர். நம்மாழ்வார் "எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலைக்கோனே" என்கிருர். எம்பெருமானைத் தேன் போன்றவனுகச் சொல்லுமிடங்களும் பலபல. உபநிடதங்களிலும் பகவான் மதுவாகவே ஓதப்படுவது காண்கிறோம். "மது வித்யா" என்னும் பகுதியில் இது விளங்கும். எத்தனை கால மனுபவித்தாலும் தெவிட்டாத தேனுகிய பகவானைப் பருகிப் பருகிக் களித்துத் திருப்பாணழ்வார் போல்வாரையொத்து இசை பாடி யுலாவும் பெரியோர்களே வண்டாக விளிக்கப்படுகிருர்கள்.

2. வண்டுக்கு வடமொழியில் சஞ்சரீகமென்றும் ஒரு பெயருண்டு. எப்போதும் ஸஞ்சரித்துக்கொண்டே யிருப்பதென்று பொருள். பக்தர்களும் பதியே பரவித் தொழும் தொண்டர்களாகையாலே "சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே மதிட் கச்சியூரகமே பேரகமே வெள்ளறையே வெஃகாகவே பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர் ஆராமஞ்சூழ்ந்த வரங்கம்" என்று, திருப்பதிகள் தோறும் திரிக்துழல்வார்கள். இத்தன்மையினுலும் வண்டோடொப்பார்கள். "தீதில் நன்னெறி காட்டி யெங்குக் திரிக்தரங்கனம்மானுக்கே காதல் செய்தொண்டர்" என்று குலசேகராழ்வாரருளிச் செய்ததும் இங்குக் குறிக்கொள்ளத் தக்கது.

3. வண்டுகட்குப் புகவரிதான இடமே கிடையாது. எங்கும் எளிதாகப் புகுந்து விடும். கட்டுங் காவலுமான திருக்கோயில் களிலும் அவலீலையாக உள்ளே புகுந்து அர்ச்சா மூர்த்திகளின் திருமேனியிலும் புரளும். ஒருவருடைய தடைக்கும் அஞ்சி நிற்கமாட்டா; தடுப்பாருமிலர். இவ்வண்ணமாகவே "சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க இயக்கரும் மயங்கினர் திருவடிதொழுவான் அந்தரம்பாரிடமில்லை", "பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய வாசல்" என்னும்படியான திருக்கோயில் வாசல்களிலே அந்தரத்தமரர்களும் அருந்தவமுனிவர்களும் தடைபட்டு நிற்கவும் ஒரு தடையுமின்றியே தாராளமாகவுள்ளே புகுந்து திருமால் திருக்கோலத்தைத் தழுவி முழுசிப் பரிமாறும் பாக்கியசாலிகள் வண்டெனத் தகுவர்.

4. பெரியாழ்வார் வண்டுகளைப்பற்றிச் சொல்லுமிடங்களில் "அறு வால் வரி வண்டுகள் ஆயிர நாமஞ் சொல்லிச் சிறு காலைப் பாடும்" என்றும், "எல்லியம்போது இருஞ் சிறை வண்டு எம்பெருமான் குணம்பாடி" என்றும் பகவானுடைய திருநாமங்களையும் திருக்குணங்களையும் பாடுவனவாகச் சொல்லியுள்ளார். இத்தன்மை சாதாரண வண்டுகளிடத்து எங்ஙனே காணவியலும். நம்மாழ்வார் தாமும் (திருவிருத்தத்தில்) "எம் மீசர்விண்ணோர்பிரானுர் மாசின் மலரடிக்

ரிற் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே!" என்றருளிச் செய்கிறார். எம்பெருமானது திருப்பாத மலரிலே நம்மைக் கொண்டு சேர்க்க வல்ல திறமை சர்தாரண வண்டுகட்கு எங்ஙனே வரும்? இத்தகைய உக்திகளினால் ஆழ்வார்கள் தாமே உள்ளுறை பொருளையும் ஒருவாறு விளங்கக் காட்டியுள்ளார்களென்பது அறியத் தக்கதாம்.

இனி எட்டாவது பாட்டிற் செல்வோம். இதில் "மனக்கின்பம்பட மேவும் வண்டினங்காள்!" என்றுள்ளது, மனக்கு என்றது மனத்துக்கென்றபடி. அத்துச்சாரியை பெருதது. உள்ள முகந்திருப்பதாகச் சொல்லுகிற விதன் கருத்து யாதெனில்; சர்ஸ்திரங்களிலுள்ள அர்த்த விசேஷங்களை நுட்பமாகக் கண்டறிந்து அவற்றை இடைவீடின்றிச் சிந்தனை செய்வதனாலும்; மஹாமேதாவிகளான சீடர்களுக்கு அவற்றைஅன்போடு உபதேசிக்கப் பெறுவதனாலும் உள்ளத்தில் சந்தோஷம் தவிர சங்கடமென்பது ஆசிரியர்க்கு ஒருபோதுமிராது. "திருமால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கே வரும் தீவினையே" என்ற நம்மாழ்வார் பாசுரத்தின்படி மகிழ்ந்து விளங்குமாசாரியர்களை இங்குக் கூறியதாயிற்று.

இனி, பத்தாம் பாசுரத்தில் 'மிகவின்பம் படமேவும் மென்னடைய வன்னங்காள்!' என்று அன்னப்பறவை தூதுவிடப்பட்டுள்ளது. அன்னத்திற்கும் ஆசிரியர்க்கும் பல வகைகளால் ஒற்றுமையுண்டு. சில வகைகளை இங்குக் காட்டுதும்.

1. நீரையும் பாலையும் கலந்து வைத்தால் அவற்றைத் தனித்தனியே பிரிக்க வல்லது அன்னம் என்று நூற்களிற் கூறப்படுகின்றது. அதுபோல, ஸாரங்களும் அஸாரங்களும் கலந்த கட்டியாயிருக்கிற சாஸ்திரங்களில் அஸாரங்களையும் அல்ப ஸாரங்களையும் தள்ளி ஸாரப் பொருள்களைக் கொண்டு சீடர்களை உய்விப்பர் ஆசிரியர்.

2, "அன்னமதாயிருந்தது அங்கு அறநூலுரைத்த" என்றும், "அன்னமாய் நூல் பயந்தான்" என்றும் சொல்லுகிறபடியே பகவானுடைய அவதாரமான அன்னமானது வேத சாஸ்திரங்களை வெளியிட்டது. அதுபோல, சிஷ்யர்களைக் குறித்து சாஸ்திரங்களை யுபதேசிப்பவர்கள் ஆசிரியர்கள்.

3. அன்னமானது சேற்று நிலத்தில் அடியிடமாட்டாததென்று பிரசித்தியுள்ளது. அதுபோல, "மாறன் விண்ணப்பஞ்செய்த சொல்லார் தொடை யலிந்நூறும் வல்லார்-பிறப்பாம் பொல்லாவருவினை மாயவன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே அழுந்தார்" (திருவிருத்தம்) என்கிறபடியே ஸம்ஸாரமாகிற சேற்று நிலத்திலே பொருந்தமாட்டாதார் கொள்ளத்தகுவர்கள்.

4. "பெடை யோடன்னம் பெய்வளையார் தம் பின் சென்று நடை யோடு இயலி" என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்தபடியே அன்னப் பறவை மாதர்களின் நடையழகைக் கண்டு தானும் அப்படி நடக்கைக்காக அவர்களைப் பின்செல்லுமென்று அறியப்படுகிறது. அதுபோல, ஆசாரியர்கள் அன்ன நடையவணங்கான இலக்குமியினது நடையைப் பின்பற்றுவர்கள். இலக்குமியின் நடையாவது அவளுடைய நடத்தை. குற்றவாளர்களான நம் போன்ற ஸம்ஸாரிகளைக் குறித்து எம்பெருமான் திறத்தில் புருஷகாரம் செய்வதே இலக்குமியின் நடத்தையாகும். அதனை ஆசிரியர்கள் பின்பற்றுகையாவது, தாங்களும் அச்செயலிலே ஊன்றியிருக்கையேயாம். இலக்குமி புருஷகாரம் செய்யாவிடில் எம்பெருமான் முத்திச் செல்வமளிக்கமாட்டாதது போலவே ஆசிரியர்கள் புருஷகாரம் செய்யாவிடினும் எம்பெருமான் திருவுள்ளமிரங்கமாட்டானென்பது ஸம்பிரதாய நூற்கொள்கை. ஆக இத்தன்மையினாலும் அன்னநடையுடைமை காண்க.

5. திருமங்கையாழ்வார் தாமே மற்றோரிடத்தில் அன்னத்தைப் பற்றிப் பேசுகையில் "அன்னம் மென்கமலத் தனிமலர்ப் பீடத்து அலைபுனலிலைக்குடை நீழல், செந்நெலொண்கவரியசைய வீற்றிருக்கும்" என்றருளிச் செய்துள்ளார். அன்னமானது மேலேயெழுந்த தாமரையிலையைக் குடையாகக்கொண்டும், செந்நெற் கதிர்கள் இருபுறமும் அசைவதைச் சாமரை வீசுவதாகக் கொண்டும் பத்மாஸனத்தில் வீற்றிருப்

பதாக இதில் சொல்லப்பட்டது. குடை சாமரங்கள் பணிமாறச் சீரிய சிங்காசனத்தில் ஆசிரியர்கள் வீற்றிருக்குமிருப்பு இதனால் தெரிவிக்கப்பட்டதாகும். ஆக இத்தன்மைகளினால் அன்னத்தோடொற்றுமை பெற்ற ஆசாரியர்களை நோக்கித் திருமூழிக்களத்தப்பனுக்குத் தமது நிலைமையைத் தெரிவிக்குமாறு ஆழ்வார் வேண்டினாராயிற்று.

திருமூழிக்களத்திருப்பதி யனுபவம் முற்றுப்பெற்றது. திருக்காட்கரை திருப்பதியனுபவம் அடுத்த இதழில்.

---

# செய்திகள்

சென்னை, பூங்காநகர், கந்தகோட்டம், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தெய்வ நிலையத்தில், 23-11-59 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு திரு. பி எஸ். செட்டியார் அவர்கள் தலைமையில் சொல்லின் செல்வர் திரு. ஆர். பி. சேதுப் பிள்ளை அவர்கள், ஸ்ரீநக்கீரர் அருளிய "திருமுருகாற்றுப்படை" பதிவுக்கல்லைத் திறந்து வைத்தார்கள். ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாஸ சுவாமிகள் அருளிய "குமாரஸ்தவம்" பதிவுக் கல்லைத் திரு. காட்டாவூர் சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் திறந்துவைத்தார்கள். சென்னை அறநிலைய அமைச்சர் "நல்லறங் காவலர்" திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் "கந்தகோட்டம்" என்கிற மின்சார ஒளி விளக்கை இராஜகோபுரத்தில் துவக்கி வைத்தார்கள். திரு. டாக்டர் சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் "முருகா" என்கிற மின்சார ஒளிவிளக்கை இராஜகோபுரத்தில் துவக்கி வைத்தார்கள். திருப்புகழ்மணி திரு. டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். திரு. சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷதர் அவர்கள் மற்றும் பல பெரியோர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தவிர இந்து மத அறநிலையப் பாதுகாப்புத்துறை துணை ஆணையாளர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் திருமுருகாற்றுப்படைப் பதிவுக்கல் செதுக்கித்தந்த திரு. வி. என். புருஷோத்தமன் (வி. கே அண் சன்ஸ்) அவர்களுக்கு தங்கப் பதக்கம் பரிசளித்தார்கள்.

✦ ✦ ✦ ✦

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்தில் திருக்கார்த்திகை விழா 4-12-59 முதல் 13-12-59 முடிய நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

சிரவணபுரம், கௌமார மடாலயம் அருட்பெருந்திரு. இராமானந்த சுவாமிகள் மூன்றாவது ஆண்டு நிறைவுக் குருபூஜை விழா 19-12-59 சனிக்கிழமை நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "திருக்கேதார யாத்திரை வகையரு நிதி" என்ற பேரறக் கட்டளை நிறுவி, அந்நிதியினின்று நடத்தப்பெறும் பல தருமங்களுள் ஒன்றாக ஸ்ரீ படம்பக்கநாதருக்குப் புனுகு மெய்ப்பூச்சும் ஆராதனையும் நடைபெறத் திட்டம் வகுத்துள்ளார்கள். அதன்படி இந்த ஆண்டு கார்த்திகைத் திங்கள் பௌர்ணமி யன்று 14-12-59 மாலை திருவொற்றியூரில் படம்பக்கநாதரான ஸ்ரீ ஆதிபுரீசுவரருக்குப் புனுகு மெய்ப்பூச்சும் ஆராதனையும் நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

கோவைக்கடுத்த சிரவணபுரத்தில் கௌமார மடம், மன்றம், ஆலயம் முதலியன நிறுவி அன்பர்கள் பரவ விளங்கிய, அருட்டிரு இராமானந்த சுவாமிகளின் மாணாக்கரும், பக்த மான்மியம் முதலான பல நூல்களின் ஆசிரியரும் தவப்பெருந்தலைவரும், தமிழ்ப் பெரும் புலவரும் ஷை மடாலயத்தில் அதிபருமாக விளங்கித் திருவருட்பேறடைந்த தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் பதினோராவது ஆண்டு நிறைவுக் குருபூஜை விழா 10-12-59 வியாழக்கிழமை ஷை மடாலயத்தில் இனிது நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

6-12-59 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு திருவெண்காடு ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அகோரமூர்த்திக்கு மகாருத்திராபிஷேகமும், மாலை 6-மணிக்கு சென்னை இந்த சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் முன்னிலையில் ஸ்ரீ பத்ரகாளியம்மைக்கு நூதன வெள்ளிக்கவச அணிவிப்பும், வெள்ளி சோடசோபசார தீபங்களைக்கொண்டு அலங்கார தீபாராதனையும் நடைபெற்றன.

# துன்பவெயிலுக்கு ஒரு பூங்கா

## (ஸ்ரீராமாவதாரம்)

(பி. ஸ்ரீ.)

காந்தியடிகள் சிறுவராக இருந்தபோது பேய் பிசாசு என்றெல்லாம் பயப்படுவாராம். தம் குடும்பத்திலே வெகுகாலமாக வேலை செய்துகொண்டிருந்த வேலைக்காரி ஒருத்தியிடம் தம் நிலைமையைத் தெரிவித்தார். 'குழந்தாய், பயத்திற்கும் துன்பத்திற்கும் மருந்து இருக்கிறது. அதுதான் இராம நாமம்!' என்றாள் அவள். அந்த இளம்பருவத்திலே அந்த மருந்து பலித்துவிட்டது. இளமையுள்ளத்தில் விழுந்த விதை ஆழமாக வேரூன்றி முளைத்து வளர்ந்து ஆயுள் முழுவதும் அருள் - நிழல் தந்த ஒரு மகாவிருட்சமாகிவிட்டது மகாத்மா காந்திக்கு.

கற்பகமே! யான் உன்னை
விடுவேன் அல்லேன்

என்று சிவபக்தியைப் பற்றிக்கொண்ட அப்பருள்ளம்போல் இராமபக்தியைப் பற்றிக்கொண்டது காந்தியடிகளின் உள்ளம்.

இராமபக்தி என்றால் பொதுவாகத் தெய்வபக்திதான் காந்தி அண்ணலுக்கு. இளமையிலேயே இராமாயண கதையிலும் ஈடுபட்டார். துளஸீ இராமாயணத்தை ஒரு இராமபக்தர் நோயுற்றிருந்த தந்தைக்காகப் பாராயணம் செய்துவந்ததைப் பதின்மூன்று வயதுச் சிறுவரான காந்தி செவிவாயாகப் பருகி இன்புற்றார். தமது 'சத்திய சோதனை'யில் துளஸீதாசரின் இராமாயணத்தைப் 'பக்தி இலக்கியத்திலேயே மிகச் சிறந்த நூல்' என்று குறிப்பிடுகிறார். இந்த இராமாயணத்தில் சொல்லப்படும் இராமாவதார தத்துவம் பொதுவாக இந்துக்கள் அனைவருக்குமே உடன்பாடு என்று கருதுவதில் தவறில்லை.

### இராமாவதாரமும் துளஸீதாசரும்

இராவணனுடைய கொடுங்கோன்மையால் உலகம் அல்லற்படுகிறது. இராவண பயத்தாலே அந்தக் கொடுமைகளைக் கண்டிக்கவும் துணிவு இல்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பூமிதேவி பசு வடிவம்கொண்டு தேவர்களிடமும் முனிவர்களிடமும் சென்று உதவி கிடைக்குமா என்று பார்க்கிறாள். அவர்கள் படைப்புக் கடவுளான பிரமனிடம் போய் முறையிட்டுக் கொள்கிறார்கள். பிரமனும் திருமாலை நோக்கித் தோத்திரம் செய்கிறான்.

அப்போது, 'முனிவர்களே! தேவர்களே! சாதுக்களே! உங்களுக்காக நான் மீண்டும் ஒரு பிறவி எடுக்கப் போகிறேன்' என்று ஒரு குரல் கேட்கிறது. தசரத ராஜகுமாரனாக அவதரித்து நிலவுலகின் துயரங்களைத் துடைக்கப் போவதாக வாக்களிக்கிறான் திருமால்.

பிரமனின் கட்டளைக்கு இணங்கத் தேவர்கள் வானரர்களாகப் பிறக்கிறார்கள். தனக்குப் பிள்ளை இல்லையே என்று வருந்திய தசரதன் புத்திர காமேஷ்டி யாகம் செய்கிறான். கௌசலை வயிற்றில் திருமால் இராமனாகப் பிறக்கிறான். தேவர்கள் பூமாரி பொழிகிறார்கள். இராமகாரியத்தில் பங்கு கொள்வதற்காகச் சகோதரர்களும் தோன்றுகிறார்கள். பகவான் சாதாரணக் குழந்தைபோல் வளர்ந்து கொண்டிருந்ததைத் துளஸீதாசர் வருணிப்பதையும் காண்கிறோம்.

துளஸீ இராமாயணத்திலே இராமாவதாரக் கொள்கையை, வால்மீகி இராமாயணத்தில் நாம் காண்பதைக் காட்டிலும், தெளிவாகக் காண்கிறோம். இங்கே அவதாரமூர்த்தி அடியார்களின் இரட்சகனாகி தன்னைச் சரணமாக அடைகிறவர்களைக் காப்பாற்றுகிறான் என்ற பக்திப் பெருங்கொள்கை ஐயந்திரிபுகளுக்கு இடமின்றி வெளியிடப் பெற்றிருப்பதைக் காணலாம்.

வால்மீகி இராமாயணத்தில் புதைபொருளாகக் காணப்படும் அவதார தத்துவம் 'ராம

சரித மானஸ்' என்ற துளஸி ராமாயணத்தில் வெளிப்படையாகக் காணப்படுகிறது. வால்மீகி மாமுனிவரின் இதிகாசம் துளஸீதாசர் வாக்கிலே ஒரு பக்திப் பெருவெள்ளமாகி விடுகிறது. இந்த வாக்கிலே சைவ வைஷ்ணவ சமரசத்தையும் காண்கிறோம்.

### துளஸீதாசரும் தமிழ்நாடும்

துளஸீதாசருக்கு முற்பட்டவன் தமிழிலே இராமாயணம் பாடிய கம்பன். துளஸீதாசர் கி. பி. பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்தவர். பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் இவர் இராமாயணம் பாடத் தொடங்கினார். அக்பர் சக்கரவர்த்தி காலத்திலும், அதற்கு முன்னும் பின்னும், துளஸீதாசர் வாழ்ந்திருக்கக் கூடும் என்று தெரிய வருகிறது. இங்கிலாந்திலே ஷேக்ஸ்பியர் மகாகவி வாழ்ந்த காலம் அது. கம்பனோ குறைந்த பட்சம் துளஸீதாசருக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவன். எனவே, கம்பனுடைய கருத்துக்களைக் காலத்தால் பிற்பட்ட துளஸீதாசர் அறிந்திருக்க முடியும். அறிந்திருந்தார் என்பதற்குச் சான்று உண்டு.

தமிழகத்திலே ஆழ்வார்களாலும் இராமானுஜர் முதலான ஆசாரியர்களாலும் வளர்க்கப்பெற்று வந்த ஸ்ரீவைஷ்ணவ சமயம் பின்னாளில் சில மாறுதல்களுடன் வடஇந்தியாவிலும் பரவியது என்பது இன்றைய ஆராய்ச்சியாளர்கள் ஒரு முகமாய் ஒப்புக்கொண்டிருக்கும் சரித்திர உண்மையாகும். இராமானுஜ பரம்பரையில் வந்த இராமானந்தர் என்ற வைஷ்ணவ குரு பதினான்காம் நூற்றாண்டில் வடநாட்டிலே தம் பக்தி மதக் கொள்கைகளைப் பரப்பி வந்தார். இராமானந்தரின் ஞான பரம்பரையில் வந்த ஒரு குருவே துளஸீதாசருக்கு ஞானாசிரியராக வாய்த்தார் என்று துளஸீ இராமாயணத்தை ஆங்கிலச் செய்யுள் நடையில் மொழிபெயர்த்திருக்கும் ரெவரண்ட் ஏ. ஜி. அட்கின்ஸ் என்பார் கூறியுள்ளார்.

பொதுவாகப் பக்தியைக் குறித்தும், சிறப்பாக இராமபக்தியைக் குறித்தும் தம் குருவிடமிருந்தே துளஸீதாசர் அதிகமாய்த் தெரிந்துகொண்டாராம். எனவே, இராமானந்த குரு பரம்பரையில் கிடைத்த ஞானம் துளஸீ தாசரின் இராமாவதாரக் கொள்கையை உருவாக்கியது என்று கருதுவது தவறாகாது.

'இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம் குடிகொண்ட கோயில்' என்று இராமானுஜரைக் குறிப்பிடுகிறது இராமாநுச நூற்றந்தாதி. வால்மீகி இராமாயணத்தைச் சரணாகதி முதலான பக்திப் பெருங் கொள்கைகளுக்குப் பயன்படுத்திக்கொண்ட வைஷ்ணவ ஆசாரியர்கள் ஆழ்வார்களைப் பின்பற்றியே அத்தகைய கொள்கைகளை உருவாக்கிக்கொண்டு, வால்மீகியின் இராம கதையை ஒரே பக்தி வெள்ளமாக்கிப் பொது மக்கள் இதயத்தை வளப்படுத்த முயன்றார்கள். இத்தகைய பக்தி வெள்ளத்தைத் தன் கவிதையில் தேக்கிக் காட்டுகிறான் கம்பன். இக்கவிஞன் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்திருக்கக்கூடும் என்பது ஆராய்ச்சிப் பேரறிஞர்களான திரு. ரா. இராகவையங்கார் ஆகியவர்களின் துணிபு. எனவே, பதினான்காம் நூற்றாண்டில் தென்னாட்டிலிருந்து வடக்கே சென்று வைஷ்ணவக்கொள்கைகளைப் பரப்பிவந்த இராமானந்தர் வாயிலாகக் கம்பராமாயணக் கருத்துக்களும் பரவித் துளஸீதாசருக்குக் கிடைத்திருக்கக் கூடும் என்று கருதலாம்.

துளஸீதாசர் தமிழ் நாட்டில் யாத்திரை செய்து இங்குள்ள பக்திக் கொள்கைகளைத் தெரிந்துகொண்டார் என்பதற்கும் சான்றுகள் உண்டு. கி. பி. 1575-ல் இராமாவதாரம் நிகழ்ந்த அயோத்தியிலேயே தாம் தமது இராமாயணத்தைப் பாடத் தொடங்கியதாக இவரே கூறியுள்ளார், எனவே, அதற்கு முன் இவர் தமிழகத்தில் யாத்திரை செய்து இந்நாட்டு ஸ்ரீ வைஷ்ணவர்களின் அவதாரக் கொள்கைகளையும் கம்பராமாயணக் கருத்துக்களையும் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.

சரணாகதி சாஸ்திரம் என்று இராமாயணத்தைப் போற்றினார்கள் தமிழகத்து வைஷ்ணவர்கள். பரம்பொருளே இராமனாக அவதரித்ததால் இராமனிடம் பரமபக்தியும் மகாவிசுவாசமும் கொண்டு அன்பு பாராட்டி இராமனையே சரணமாக அடைந்து வாழ வேண்டும் என்றகொள்கையைத் துளஸீதாசர் தென்னகத் திலிருந்து கற்றுக்கொண்டார்—

அதாவது, தமிழ் நாட்டுப் பேரறிஞர்களான ஆசாரியர்களிடமிருந்தும், தனிப் பெருங் கவிஞனை கம்பனிடமிருந்தும் எப்படியோ கற்றுக்கொண்டார் — என்று கருதுவது பொருந்துவதே.

இராமபக்தி துளஸீதாசருக்கு ஒரு தத்துவக் கொள்கை மட்டும் அன்று; ஒரு புனித வசீகரம் பொருந்திய திருஉருவத்தினிடம் இருதயத்தையும் மனோபாவத்தையும் அர்ப்பணித்து, அந்த அழகன் வாயிலாக உண்மையைத் தேடும் ஒரு சன்மார்க்கப் பெருமுயற்சியும் ஆகும். இத்தகைய பக்தியில் சன்மார்க்க லட்சியங்களுக்கும் சிறந்த இடம் உண்டு. தெய்வத்துடன் உறவுகொண்டு நேசம் பூண்டு பெருவாழ்வு வாழ்வதற்கும் இடம் உண்டு.

பௌத்தம் போன்ற சன்மார்க்க மதங்களில் புருஷோத்தமனைத் தெய்வத்தை நாம் காண்பதற்கு இல்லை; அறநெறியே முத்தி நெறி. அத்தகைய கொள்கை வசீகரமான சந்திரிகை போலத் தோன்றிய போதிலும், சூரிய ஒளியே இல்லாமல் சந்திரிகையை மட்டும் எப்போதும் அனுபவித்துக்கொண்டிருக்க முடியுமா? துளஸீதாசரின் இராமசந்திர பக்தியில் சன்மார்க்க சந்திரிகையை மட்டும் நாம் காணவில்லை; நம்மீது அன்பு என்ற சூரிய ஒளியை வீச நம்முடன் உறவுகொண்டாடி உள்ளத்தை மலரச் செய்யும் அன்புக் கடவுளின் வழிபாட்டையும் காண்கிறோம்.

இத்தகைய கொள்கையைத் துளஸீதாசர் தமிழ் நாட்டு வைணவத்திலிருந்தும், கம்பனின் இராமாவதாரக் கொள்கையிலிருந்தும் தெரிந்துகொண்டிருக்கக்கூடும் என்று துணிவது தவறாகாது.

## ஆதிகாவியத்திலே இராமாவதாரம்

துளஸீதாசர், கம்பன் முதலான பிற்காலக் கவிகள் சொல்லும் இராமகதைக்கும், ஆதிகாவியம் என்று சொல்லப்படும் வால்மீகிஇராமாயணத்திலுள்ள இராமகதைக்கும் வித்தியாசங்கள் உண்டு. கதைப் போக்கில் முக்கிய அம்சங்கள் ஒத்திருந்தபோதிலும், பல விவரங்களும் வேறுபடக் காண்கிறோம். ஒரே விஷயம் பல இடங்களில் பலவிதமாய்ச் சொல்லப்பட்டிருப்பதையும் காணலாம். வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டே வடமொழியிலும் பிரதேச மொழிகளிலும் எழுந்த காவியங்கள் நாடகங்கள் முதலியன பலவேறுபாடுகளுடன் இராமகதையைச் சொல்லுகின்றன. எனினும் இவை பெரும்பாலும் தீமையை அழித்து அறத்தை நிலை நிறுத்துவதற்கு அவதரித்த இராமபிரானின் புகழை விளக்கும் நோக்கத்துடனேயே இயற்றப் பெற்றுள்ளன.

இத்தகைய இராமகதைக்கே மூல பொக்கிஷமாக உள்ள வால்மீகி இராமாயணம் இதிகாசமாகவும் காவியமாகவும் இமயமலை முதல் கன்யாகுமரிவரையிலுள்ள இந்து மக்களால் போற்றப்பட்டு வந்திருப்பது வெளிப்படை. இந்தஇராமாயணம் நமது தமிழகத்தில்தோன்றித் திகழ்ந்த ஆழ்வார் ஆதியர்களால் சரணகதி கிரந்தம் என்றும், பக்திப் பெருநூல் என்றும் போற்றப்பட்டு வந்திருக்கிறது என்பது பிரசித்தமான செய்தி. தமிழ் நாட்டு ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இராமாயணம் ஓர் உபதேச கிரந்தமாயிற்று.வால்மீகியின்வாக்கு ஆழ்ந்த கருத்துக்களையும் தத்துவப் புதை பொருளையும் உடையது என்பது இவர்கள் கருத்து. ஸ்ரீ வைஷ்ணவ குருசிஷ்ய பரம்பரையில் வந்த உபதேசங்களையும் தத்துவப் பொருளையும் கவிச்சக்கரவர்த்தியான கம்பனும் கேட்டிருக்கலாம். கேட்டுத் தன் கலைக் கோயிலைக் கட்டி நிறுத்துவதற்குப் பயன் படுத்திக் கொண்டிருக்கலாம்.

உத்தம புருஷன் யார் என்று வால்மீகி முனிவர் நாரதரைக் கேட்டதாகவும், அந்தப் புருஷன் ஸ்ரீ ராமன்தான் என்று வால்மீகி பதில் சொன்னதாகவும், அந்த உத்தம புருஷனின் கதையையே வால்மீகி இராமாயணம் என்ற நவரஸங்கள் நிறைந்த காவியமாகப் பாடியதாகவும் வழங்கி வருவதைப் பலரும் அறிவர். வால்மீகி இராமாயணம் வருணிக்கும் உத்தம புருஷனை வைஷ்ணவர்கள் புருஷோத்தமனாகிய அவதாரமூர்த்தியென்று வழிபடுகிறார்கள்.

தேவர்கள் இராவணன் முதலான அரக்கர்களின் கொடுமைக்கு ஆற்றாது திருமாலைச் சரணமடைந்தார்கள் என்றும், அப்பெருமான் அபயதானம் செய்து இராமனாகப் பிறந்தான் என்றும் வழங்கும் அவதார கதைக்கு இப்போதுள்ள வால்மீகி இராமாயணத்தில் ஆதாரம் இருக்கிறது. இராமனைச் சரணாகதி செய்து இம்மையிலும் மறுமையிலும் பேறு

பெறக்கூடும் என்பதற்கும், சரணுகதியின் முக்கிய பலன் பகவானுடைய கைங்கரியமே என்பதற்கும் உரிய ஆதாரங்களையும் வால்மீகி இராமாயணத்தில் காண்கிறோம். பகவானைக் காட்டிலும் அடியவர்களுக்குப் பணி செய்வது முக்கியமானது என்ற கொள்கையையும் வால்மீகி சொல்லும் இராம கதை வற்புறுத்துகிறது என்பதிலும் ஐயமில்லை. எனவே உத்தம புருஷனது சரிதம் கூறும் வால்மீகி இராமாயணத்திலும் புருஷோத்தமனுகிய அவதாரமூர்த்தியைப் பக்தர்கள்கண்டு கொள்வதில் அதிசயமில்லை.

## ஆழ்வார்களும் இராமாவதாரமும்

இராம கதை வடநாடெங்கும் பரவியிருந்ததுபோல் தென்னுட்டிலும் பரவி யிருந்தது. நம் தமிழகத்தில் சங்க காலத்திலேயே இராமகதையை மக்கள் அறிந்திருந்தார்கள். சிலப்பதிகாரத்தில் திருமால் இராமனுக அவதரித்தான் ஏன்பது 'ஆய்ச்சியர் குரவை'யில் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

**மூவுலகும் ஈரடியால்**
**முறைநிரம்பா வகைமுடியத்**
**தாவியசே வடிசேப்பத்**
**தம்பியொடும் கான்போந்து**
**சோவரணும் போர்மடியத்**
**தொல்இலங்கை கட்டழித்த**
**சேவகன்சீர் கேளாத**
**செவிஎன்ன செவியே;**
**திருமால்சீர் கேளாத**
**செவிஎன்ன செவியே!**

உலகம் அளந்த தன் திருவடிகள் சிவப்பத் தம்பியாகிய இலட்சுமணனேடும் இராமன் காட்டிலே அலைந்து திரிந்தானும். இராவணனது இலங்கையை அழித்த இந்த இராமனது வீரப்புகழ் திருமாலின் அவதாரச் சிறப்பே தான் என்று ஆய்ச்சியர்கள் பாடுகிறுர்கள். உலகம் அளந்தவனும் (வாமனனும்) 'சோ' என்ற அரணை அழித்தவனும் (கண்ணனும்) திருமாலின் அவதார புருஷர்களே என்பது கருத்து.

இந்த இராமாவதாரக் கொள்கை ஆழ்வார்களின் காலத்தில் தமிழகத்தில் மிகவும் பிரசித்தமாகிவிட்டது. ஆழ்வார்கள் பெரும்பாலும் கிருஷ்ணுவதாரத்தில் ஈடுபட்டவர்களே, எனினும் இராமாவதாரத்தையும் பக்தியுடன் குறிப்பிடுகிறுர்கள். நம்மாழ்வார்,

**கற்பார் இராம பிரானைஅல்**
**லால்மற்றும் கற்பரோ?**

கற்கின்றவர்கள் ஸ்ரீராமபிரானுடைய கீர்த்தியை அல்லாமல் வேறு சில கீர்த்திகளையும் கற்பார்களோ?-என்று தம் ஐந்தாம் திருவாய்மொழியின் முதற்பாசுரத்தில் பேசுவதிலிருந்து, ஆழ்வார்களின் தலைவரான இவருக்கு இராமாவதாரத்தின் மீதுள்ள ஈடுபாடு புலனுகிறதல்லவா?

திருமங்கை மன்னனும் இராமாவதாரத்தில் ஈடுபாடுள்ளவர் என்பதற்கு இவர் பாடிய பெரிய திருமொழியில் சான்றுகள் காணலாம். இராமன் தாடகை வதம் செய்து விசுவாமித்திரனது வேள்வியைக் காத்ததும், வில்லை முறித்துச் சீதையை மணந்ததும் வனத்திற்குச் சென்றதும், 'ஏழை, ஏதலன், கீழ்மகன்' என்று எண்ணுமல் வேடனுகிய குகனேடு தோழமை பூண்டதும், விராதனைக் கொன்றதும், சூர்ப்பணகையை அங்கபங்கம் செய்ததும், கரனைக் கொன்றதும், மாயமானை மாய்த்ததும், கவந்தனைக் கொன்றதும், ஏழு மராமரங்களைத் துளைத்ததும், வாலியை வதைத்ததும், விபீஷணனுக்கு அரசு அளித்ததும், கடலில் அணை கட்டியதும், திருமங்கை மன்னனின் பாசுரங்களில் குறிக்கப் படுவதைக் காண்கிறோம்.

ஆண்டாள் இராமனை 'மனத்துக்கு இனியான்' என்று திருப்பாவையில் குறிப்பிடுகிருள். தொண்டரடிப் பொடியாழ்வார் தம் திருமாலையில்,

**சிலையினுல் இலங்கைசெற்ற**
**தேவனே தேவன் ஆவான்**

என்று முழக்குவதைக் கேட்கிறோம். திருப்பாணுழ்வாரும் 'அமலனுதிபிரான்' என்று தொடங்கும் தமது அருமையான வாக்கால் இராமன் திருப்புகழையும் பேசுகிறுர்.

குலசேராழ்வாருக்கு இராமாவதாரத்திலுள்ள ஈடுபாடு பிரசித்தமானது. 'பெருமாள் திருமொழி' என்ற இவரது பிரபந்தத்தை ஸ்ரீராமாயணஸாரம் என்றே கூறுவதுண்டு. இந்த ஆழ்வார் இராமாயண காலட்சேபத்

தைப்பொழுது போக்காகக் கொண்டிருந்தார். இராமபிரான் இவரது முக்கியமான ஆராதன மூர்த்தி.

எம்பெருமான் தன்சரிதை
செவியால் கண்ணல்
பருகுவோம் இன்னமும்
மதியோம் அன்றே

என்ற இவர் வாக்கிலிருந்து, இராமாயணத்தில் இவருக்குள்ள ஈடுபாட்டைத் தெரிந்து கொள்ளலாம்.

## குலசேகரர் கண்ட இராமாவதாரம்

வால்மீகி இராமாயண காலட்சேபம் நடத்துகிருர் பௌராணிகர் குலசேகரமன்னரின் அரண்மனையிலே, சேரநாட்டில் இவர் தலைநகரிலே. கரதூஷணுதியர் சூர்ப்பணகையின் தூண்டுதலால் படையெடுத்துவந்துவிட்டார்கள். இராமன் தம்பியைச் சீதைக்குக் காவலாக இருக்கும்படி நிறுத்துகிருன். பிறகு தனக்கு ஆரும் துணையில்லாமல் தனியே அந்த அரக்கர்கள் அனைவரோடும் போருக்கு வந்து நிற்கிருன். இப்படிப் பௌராணிகர் சொன்னதுதான் தாமதம், 'அப்படியா செய்தி? நம்முடைய படைகளெல்லாம் போருக்குச் சித்தமாய் முன்னே செல்ல வேண்டும். நாமும் அந்தக் களம் நோக்கிப் புறப்படுவோம்' என்று சொல்லிக் கொண்டே புறப்படுகிருர் குலசேகரர்.

சபையோர் திடுக்கிட்டு நிற்கிருர்கள். நிபுணரான பௌராணிகரோ, 'இராமபிரான் தான் ஒருவனுகவே எதிரிகள் அத்தனை பேரையும் வென்று வருகிருன்' என்று அந்தக் கட்டத்தை முடிக்கிருர். அது கேட்ட குலசேகரர் தம் யுத்த யாத்திரையை நிறுத்துகிருர்!

அவதாரமூர்த்தியின் சுகதுக்கங்களை இப்படி நேரில் கண்டு அனுபவித்தவர் குலசேகரர் என்ருல், இவரது இராமபக்தியை என்னென்பது? வேருெரு சமயம் பௌராணிகரின் புதல்வர் காலட்சேபம் நடத்தத் தொடங்கினர். மன்னரின் மன நிலையை உணர்ந்து கொள்ளாமலே சீதையை இராவணன் கவர்ந்து சென்ற செய்தியை விவரிக்கத் தொடங்கினர். உடனே உள்ளம் கொதித்தது குலசேகரருக்கு. 'இதோ கடல் கடந்து போய் அரக்கர் கோனை வென்று அன்னையை மீட்டு வருவேன்!' என்று எழுந்தார். கடலில் அப்படியே இறங்கிவிட்டாராம் குலசேகரர்.

குலசேகரர் கண்ட இராமாயணம் இது! இந்த இராமாயணத்தைப் பாடியிருக்கிருர் இவர் என்ருல், இந்தப் பாசுரங்களில் இவர் கண்ட காட்சிகளை நாம் இன்றும் காணலாம் என்பதில் அதிசயத்திற்கு இடமில்லை.

குலசேகர மன்னர் குலசேகராழ்வாராகி, 'அடி சூடும் அரசை அல்லால் அரசாக எண்ணேன் மற்று அரசு தானே' என்று முடி துறந்தார். இராமபிரானுடைய இன்ப துன்பங்களைத் தமது இன்ப துன்பங்களாக அனுபவித்த இவரைக் குலசேகரப் பெருமாள் என்றும், இவர் பாசுரங்களைப் 'பெருமாள் திருமொழி' என்றும் பக்தருலகம் போற்றுகிறது.

இராமனைக் குழந்தையாகவும் கண்டு தாலாட்டுகிருர் இந்த ஆழ்வார்.

மன்றுபுகழ்க் கௌசலைதன்
மணிவயிறு வாய்த்தவனே!

என்று தொடங்கும் பெருமாள் திருமொழிப் பகுதி தமிழ் நாட்டில் மிகவும் பிரசித்தமானது, இந்தப் பாசுரங்களில் குழந்தை இராமனை அவதார மூர்த்தியாகவே கண்டு பாடிக் களிக்கிருர் குலசேகரர். இத்தாலாட்டுப் பாசுரங்களில் இந்த அவதாரமூர்த்தியை இவர்,

அற்றவருக்கு அருமருந்தே!

—அதாவது, உனக்கே அற்றுத் தீர்ந்தவர்களாய் வேறு கதி அற்றவர்களுக்கு—அருமையான மருந்து போன்றவன்!—என்று அழைக்கிருர். தேவர்களுக்கு அமுதம் அருளியவன் பக்தர்களுக்குத் தானே அமுதும் அருமருந்தும் ஆகிருனும்.

இந்த அவதார மூர்த்தியை இந்த ஆழ்வார் 'இளையவர்கட்கு அருள் உடையாய்!' என்றும் அழைக்கிருர். 'இளையவர்' என்ருல் இளைத்திருப்பவர்கள், துர்ப்பலமாக இருக்கும் சாதுக்கள். கொழுத்திருக்கும் துஷ்டர்களுக்கு ஆற்ருத நிலையிலும் 'தருமமே வழி; இறைவனே கதி' என்று இருக்கிறவர்கள்.

இந்த அவதாரக் குழந்தையை இவர் எங்கே கண்டார்? மானசீகமாய்க் காலத்தை

யும் தேசத்தையும் கடந்து செல்லக்கூடிய பாவனசக்தி வாய்க்கப்பெற்றவர் தாம் இவர். எனினும் அயோத்திக்கு மானசிக யாத்திரை போய் இராமன் காலத்தைச் சேர்ந்த அந்த அயோத்தியில் அவதார மூர்த்தியைக் கண்டு கொள்ளாமல், தமிழகத்திலேயே திருக்கண்ணபுரத்தில் கண்டு களிக்கிறார். தாம் கௌசலையாகி இராமபிரானைக் கண்ணபுரத்தில் தொட்டிலில் இட்டுத் தாலாட்டிப் பாடுகிறார்.

தாயாகி, இன்புற்றுப் பாடுவதுமட்டுமா 'பெருமாள் திருமொழி'யில் இடம் பெற்றிருக்கிறது? தந்தையான தசரதனுகவும் தம்மைப் பாவித்துக்கொண்டு இராமபிரானை அனுபவிக்கப் பார்க்கிறார். ஆனால் தன் கிழப்பருவத்தில் வனவாசம் புகுந்த இராமனை இழந்து தவிக்கும் தசரதனின் நிலை வந்து விடுகிறது இவருக்கு. 'கைகேசி தன் சொல் கேட்டு நன்ருக நானிலத்தை ஆள்வித்தேன் நன்மகனே! உன்னை நானே' என்று கதறுகிறார்.

எவ்வாறு நடந்தனை? எம்
இராமாவோ! எம்பெருமான்
என் செய்கேனே!

என்று புலம்புகிறார்.

பெருமாள் திருமொழியில் பத்தாம் திருமொழியாக அமைந்திருக்கும் பாசுரங்களை 'ஸ்ரீ ராமாயண சங்கிரகம்' என்று கூறுவதுண்டு. சிதம்பரம் என்ற தில்லைத் திருப்பதியின் விஷயமாகப் பாடப்பெற்றவை இப்பாசுரங்கள். அவதார மூர்த்தியாகிய இராமபிரானை,

தில்லைநகர்த் திருச்சித்ர
கூடம் தன்னுள்

கண்குளிரக் காண விரும்புகிறார் இவர். கோவிந்தராஜப் பெருமாளைத்தான் இராமனுகக் குறிப்பிடுகிறார் இந்த ஆழ்வார்.

## இராமாவதாரமும் கம்பனும்

ஆழ்வார்களின் இராமபக்திச் செல்வம் குலதனமாகக் கிடைத்தது;வால்மீகி இராமாயணத்தை ஆழ்வார் பாசுரங்களின் விளக்க உரையாகக் கொண்டு அனுபவித்திருக்கிருன் கம்பன்! இந்தக் கவிஞன் கவிதையிற்போல் பக்தியிலும் முதிர்ந்து கனிந்து பக்குவமடைந்த நிலையிலேதான் தமிழ்ப் பேரிதிகாசமாகிய தன் இராமாயணத்தைப் பாடியிருக்கிருன். இவன் தன் இராமாயணத்திற்கு 'இராமாவதாரம்' என்றே பெயர் சூட்டி விட்டான் என்ருல், இராமன் என்ற அவதார மூர்த்தியிடம் இவனுக்குள்ள ஈடுபாடு நிகரற்றது என்பதை ஊகித்துக் கொள்ளக் கூடுமல்லவா?

இராவதாரம் பற்றிய தத்துவமும் கொள்கைகளும் கம்பராமாயணத்திலே மிகவும் தெளிவாய்க் காணப்படுகின்றன. அலைகடல் நடுவிலே மலைபோலக் கண்வளரும் சர்ப்பசயன மூர்த்தியே,

கொலைதொழில் அரக்கர்தம்
கொடுமை தீர்ப்பன் என்று

அவதரித்ததாகக் கம்பன் கூறுகிருன்.

பள்ளிகொண்ட பெருமாளை 'உறங்குகிறவன் தானே!' என்றுகூட இராட்சஸ சக்திகள் நினைத்துவிட வில்லையாம். 'அவன் மூச்சற்றுக் கிடக்கிருனே?' என்றுகூட இராவணன் கேட்டுவிட்டான் விபீஷணனை நோக்கி. ஆனல் அந்தத் துயில் அறிதுயில் தானே?— உறங்குவதுபோல் யோகம் புரிவது தானே? அந்த யோகத்திற்கு விஷயம் இந்த லோகத்தின் யோக க்ஷேமம்தான் என்பது கம்பரின் குறிப்பு.

எங்கும் கண்களாகவும் செவிகளாகவும் உலக ரட்சையை நாடிய வண்ணம் உறங்குவது போலிருக்கும் ஈசுவர சக்திதான் இராவணதி இராட்சஸாளை அழித்து உலகத்தைக் காப்பாற்றியது என்பது கம்பன்கண்ட இராமாவதார தத்துவம்.

'அழுது முறையிட்டால் அம்பலத்தே கேட்கும்' என்பது 'நந்தனர் சரித்திரக் கீர்த்தனை'யில் நந்தனர் கூற்று. சாதுக்களின் துயரங்களும் முறையீடும் இரட்சக மூர்த்தியின் நெஞ்சிலே பட்டதும் அப்பெருமான் தன் யோக நித்திரையை உதறித் தள்ளி விட்டுக் கருடன்மேல் பறந்து வந்தானும் அபயம் அளிப்பதற்காக ;

கருமுகில் தாமரைக்
காடு பூத்து,நீ(டு)
இருசுடர் இருபுறத்(து)
ஏந்தி, ஏடவிழ்

திருவொடும் பொலியஒர்
செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல்
வந்து தோன்றினன்.

வெயிலால் தவித்துக்கொண்டிருக்கும் பயிர் பச்சைகளும் உயிர்ப் பிராணிகளும் மழைமுகம் காண்பதுபோலக் கண்டார்களாம் தேவர்கள் பகவானை. முதல் முதல் ஆகாசத்தில் அதிதூரத்திலே கரும்புள்ளிபோல் ஒரு மேகம், அது வரவரப் பெரிதாகிறது. பிரமாண்டமான அந்தக் கருநீல மேகத்தினிடையே செந்தாமரை காடாகப் பூத்துக் கிடப்பதுபோல் ஒரு தோற்றம். மேகத்தின் இருபுறமும் இரு சுடர்கள்—ஏக காலத்திலே எதிர் எதிராகப் பொலியும் சந்திர சூரியர்கள் போல. அந்த நீலஜோதி தாமரை மலரை நினைவூட்டும் தோற்றத்துடனும், சங்கு சக்கரங்களுடனும், மகாலட்சுமியுடனும் ஒரு பொற்குன்றின்மேல் கருடாரூடனாகி வந்து அபயம் அளித்தானும் தேவர்களுக்கு.

தசரதன் குறைதீரத் தேவர்களின் குறையும் தீர்ந்துவிட்டது; சாதுக்களின் குறையும் தீர்ந்துபோயிற்று. மின்னலோடு மேகம் தோன்றியதுபோலத் தோன்றிய பெருமான் சீதாராமராகி, இராவணவதம் செய்தபின் பட்டாபிஷேகம் செய்து கொள்கிறான் :

மரகத சயிலம் செந்தா
மரைமலர் காடு பூத்து,
திரைகெழு கங்கை வீசும்
திவலையால் நனைந்து செய்ய
இருகுழை தொடரும் வேற்கண்
மயிலொடும் இருந்த(து) ஏய்ப்பப்
பெருகிய செவ்வி கண்டார்
பிறப்பெனும் பிணிகள் தீர்ந்தார்.

'கருமுகில்' இப்போது அவதாரத்திலே மரகத மலையாகக் காண்கிறது. 'தாமரைக் காடு பூத்து' வந்த பெருமான் 'செந்தாமரை மலர்க்காடு பூத்து' வீற்றிருக்கிறான் அவதார புருஷனாக. அந்த இருசுடராகிய சங்கு சக்கரங்கள் இப்போது காணப்படவில்லை; கங்கா தீர்த்தத்தால் அபிஷேகம் செய்துகொண்டிருக்கிறானே, அந்தப் புனித நீர்த்திவலைகள் திருமேனியையும் பொன்னுடையையும் நனைத்து அழகு செய்கின்றன. கருமுகிலுடன் மின்னல்போல வந்த இலட்சுமி இப்போது சீதா லட்சுமியாகி,

இருகுழை தொடரும் வேல்—கண்
மயில்

ஆக அமர்ந்து அழகுக்கு அழகு தருகிறாள். அந்தப் பொற்குன்று போன்ற கருடனுடைய ஸ்தானத்தை இப்போது வகிக்கிறது சிங்காதனம். அவதாரத்தின் அழகு அதற்கு முற்பட்ட ஆதி நிலையையும் வென்று விடுகிறது என்பது குறிப்பு.

அவதாரங்கள் என்ற பல பிறப்புக்களிலும் இறைவனுடைய அருளழகு வளர்ந்து வருகிறது என்பது அவதார தத்துவ ரகசியங்களில் ஒன்று. இதைக் கம்பன் நன்கு உணர்ந்து நமக்கும் உணர்த்துகிறான். கிஷ்கிந்தா காண்டத்தில் வானர சகோதரர்களான வாலி சுக்கிரீவர் வாயிலாகவும் இந்த உண்மை உணர்த்தப்படுகிறது.

செருக்கிழந்த நிலையில் இறந்துகொண்டிருக்கும் வாலி இராமன் அவதாரமூர்த்தி என்பதை உணர்ந்து கொள்கிறானும். இந்த நிலையில் மகனை நோக்கி இராமனைச் சுட்டிக் காட்டி,

மேல்ஒரு பொருளும் இல்லா
மெய்ப்பொருள் வில்லும் தாங்கி,
கால்தரை தோய நின்று
கட்புலக்(கு) உற்ற(து) அம்மா!

என்கிறான்.

மெய்ப் பொருளாகிய பரம்பொருள் இராமன் என்ற அழகனாக அவதரித்திருக்கிறது என்பது திரண்ட பொருள். 'பொன்னுடை புழுதி படியலாகாதே!' என்று பரம்பொருள் பரம பதத்திலேயே தங்கிவிட்டால், இந்த அவதார அழகை எப்படிக் காணமுடியும் என்பது குறிப்பு.

சுக்கிரீவன் இராமனை முதல்முதல் பார்ப்பது மூன்று பாடல்களில் சித்தரிக்கப்படுகிறது. முதல் முதல் வால்மீகிக்கு நாரதர் காட்டிய உத்தம புருஷனைத்தான் காண்கிறான். அணிதுறந்து முடிதுறந்து வந்திருக்கும் தியாக சௌந்தரியம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது. 'இவனன்றோ

உத்தம வீரபுருஷன்!' என்று களிக்கின்றன கண்கள்.

பிறகு சுக்கிரீவன் இராமனை இலட்சிய புருஷனாக நோக்குகிறான். முடிவில் அவதார மூர்த்தியாகத் தரிசிக்கிறான், தெளிகிறான்:

தேறினன் அமரர்க் கெல்லாம்
தேவராம் தேவ ரன்றே
மாறிஇப் பிறப்பில் வந்தார்
மானுடர் ஆகி மன்னோ!

சுக்கிரீவன் தேறித் தெளிந்த நிலை இது. தேவதேவன் மானுடனாகி அவதரித்ததால், அது அவனுடைய அருளழகிற்கு மட்டும் வெற்றி அல்ல; மானுடத்திற்கே வெற்றி என்கிறான். ஆண்டவன் அவதாரமூர்த்தியாக இறங்கி வந்து துஷ்டநிக்கிரகம் செய்தது அவனுக்கு வெற்றி அல்ல, மானிடப் பண்பிற்கே வெற்றி என்று கூறுவது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது,

இது இராமாவதாரத்தின் சிறப்பான வெற்றி என்பது கம்பன் கருத்து.

வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்ற தன்றே

என்று பாடியிருக்கிறான்! இராமனுடைய வெற்றிப் பாடல்களைப் பாடவந்த கவிஞன், அந்த வெற்றி மானுடத்தின் வெற்றிதான் என்கிறான்; மானுடப் பண்பிற்கு முடிசூட்டி வைக்கிறான்!

சுந்தரகாண்டத்திலே அனுமன் வாயிலாகவும் இராமாவதாரத்தை வெளியிடுகிறான் கம்பன். 'சக்கரவர்த்தித் திருமகனின் தூதனாக வந்தேன்' என்கிறான் அனுமன். 'வேதமும் அறமும் சொல்லும்' மூர்த்தி என்கிறான் இராமனை. அறத்தை நிலைநிறுத்தி உலகத்தைச் செந்நெறியில் செலுத்த இராமன் பிறந்தான் என்று சொல்லுகிறான், இராவணனை நோக்கி.

மக்கள் செல்ல வேண்டிய செந்நெறியில் தீமை குறுக்கிடுகிறதே என்றால், அந்தத் தீமை நிலையில்லாதது, அது அழிந்தே தீரும் என்கிறான். தீயோர் இறந்தொழிவது திண்ணம்; தக்கோர் இடர்தீர்ந்து வாழ்வதும் உறுதி என்கிறான். அதற்காகவே இராமவதாரம் ஏற்பட்டிருக்கிறது என்று இராவணனிடம் சொல்லுகிறான்.

இப்படி அவதார தத்துவத்தை வெளியிடும் அனுமன் வாயிலாகக் கம்பன் தன்னுடைய சமரச உணர்ச்சியையும் வெளியிடுகிறான்:

சூலமும், திகிரி சங்கும்,
கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும், மலரும், வெள்ளிப்
பொருப்பும்விட்(டு) அயோத்தி வந்தான்

மும்மூர்த்திகளும் இராமனாக வந்தார்கள் என்பது குறிப்பு, துளஸிதாசரின் சமரசக் கொள்கையைக் கம்ப இராமாயணத்திலும் கண்டு கொள்ளலாம் என்பது என் கருத்து.

மற்றப்படி, கம்பனது அவதாரக் கொள்கை ஆழ்வார் ஆதியர்களின் கொள்கையைத் தழுவி அமைந்திருப்பதுதான்,

மூவர்க்கு முதல்வ ராய
மூர்த்தியார் அறத்தை முற்றும்
காவற்குப் புகுந்து நின்றார்
காகுத்த வேடம் காட்டி

என்று கம்பன் கூறுவது ஸ்ரீ வைஷ்ணவக் கொள்கைதான்—ஆழ்வார்களுக்கும் ஆசாரியர்களுக்கும் உடம்பாடான அவதாரக் கொள்கைதான்.

## வேதாந்த தேசிகனும் அவதார தத்துவமும்

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் 'மஹா வீர வைபவம்' என்றும் 'ஸ்ரீரகுவீரகத்யம்' என்றும் சொல்லப்படும் நூல் ஒன்றை வடமொழியில் இயற்றியுள்ளார். இது நாடக ரீதியில் அமைந்திருக்கிறது. இராமாவதாரத்தின் மகிமையை வெளியிடுவதுதான் இதன் முக்கிய நோக்கம். சரணம் அடைந்தவர்களின் பயம் என்ற இருட்டைப் போக்க வல்ல தோற்றத்தை உடையவன் இராமன் என்றும், இந்தச் சூரியனுக்கு ஒளி சீதா பிராட்டி என்றும் சொல்லுகிறார். இந்த அவதார மூர்த்தியை,

ஜயஜய மஹாவீர!

என்று வாழ்த்துகிறார்.

உலகத்திற்குக் காரணமான பரம் பொருள் கௌசலையின் புதல்வனாக ஒளிந்து விளையாடியதாம். எனவே விசுவாமித்திர னின் வேள்வி காத்தது இராமனுக்கு சிறு பிள்ளை விளையாட்டே என்கிறார். துஷ்டர் களை அழிப்பதில் பொல்லாத வலிமை பெற் றிருந்த புயங்கள் இராமனை அழகு செய்தன என்கிறார். தாமரை மலர்க் கூட்டத்தின் அழ கைக் கொள்ளை கொள்ளும் கண்ணழகு வாய்ந்தவர் என்கிறார்.

பரசுராமர் கர்வ பங்கத்தாலும் இராமன் தானே பரம்பொருள் என்பதை விளக்கி விட்டானும். வேடனை குகனுடன் செய்து கொண்ட நட்பினால் இந்தப் பரம்பொருளின் எளிமை அறிவிக்கப்பட்டது என்கிறார். ஜடாயு என்ற கழுகுத் தலைவனுக்கு இராமன் இறுதிக் கடன் செய்ததை, பக்தர்கள் மீது பகவானுக்கு உள்ள பேரன்பிற்குச் சான்றா கக் காட்டுகிறார். சபரிமோட்சத்தையும் இத் தகைய சான்றாகக் காட்டுகிறார்.

சுக்கிரீவனுடைய சரணாகதியினால் இராமன் தன் சுதந்திரத் தன்மையை இழந் தான் என்கிறார். சரணம் அடைந்த பக்தர் களுக்குப் பகவான் 'அடிமையாகி'ப் பணிபுரி கின்றான் என்பது குறிப்பு. அனுமனை இராமன் அணைத்துக்கொண்டதையும் இந்த அவதாரமூர்த்தியின் பேரன்பிற்கு ஒரு பெருஞ் சான்றாகக் காட்டுகிறார்.

இராவணனுடைய அடைக்கலப் பொரு ளாக ஏற்றுக்கொண்டபோது, ஸர்வேச்வர பாவம் (பரம் பொருளா யிருக்கும் தன்மை) இராமாவதாரத்திலே நன்கு புலனாயிற்று என்கிறார். அவதாரமூர்த்தியின் மகா வீரமும் சத்திய விரதமும் விபீஷண சரணாகதியில் விசேஷமாக வெளிப்பட்டன என்பது கருத்து.

சத்துருவின் தம்பிக்கு அருள்புரிந்த வீரத்துடன், சத்துரு போர்க்களத்தில் தளர் ச்சியுற்றுப் போரைத் தொடர்ந்து நடத்த முடியாமலும் பின்வாங்கிப் போக முடியாம லும் நின்றபோது 'இன்றுபோய் நாளைவா!' என்று விடை கொடுத்தனுப்பிய தயாள வீரமும் சேர்ந்து அவதாரமூர்த்தியின் மகா வீரமாகிறது என்ற கருத்தையும் ஸ்ரீரகுவீரகத் யத்தில் காண்கிறோம்.

சகல ஜனங்களாலும் கௌரவிக்கப் பெற்றவன் இந்த அவதார புருஷன் என் கிறார் ஸ்ரீ தேசிகன். இது, 'எல்லாருக்கும் துயர்துடைத்த பெருமான் அல்லவா? வாய் படைத்தவர்களெல்லாம் வாழ்த்தி வணங்கி னார்கள்' என்று கம்பன் பாடி யிருப்பதை நினைவூட்டுகிறது.

வெயில் தாங்காமல் மக்கள் குளிர்ந்த நிழல்களையும் நீர்நிலைகளையும் கண்ணுக் கினிய காட்சிகளையும் உடைய சோலைகளுக் குப் போகிறார்கள் அல்லவா? இத்தகைய அழ கிய பூங்கா பக்தஜனங்களுக்கு ஸ்ரீ ராமன் என்கிறார் ஸ்ரீதேசிகன். திருமேனியை நினைத் தாலும், திருநாமத்தை உச்சரித்தாலும் சகல மங்களமும் அளிக்கிறதாம் இப்பூங்கா.

தமது 'தசாவதார ஸ்தோத்ர'த்திலும் மனத்துக்கு இனிய மகாவீரனாக இராமனைக் குறிப்பிடுகிறார் ஸ்வாமி தேசிகன். இங்கே 'எந்நிலையோராயினும் தஞ்சமெனத் தன்னை ஒரு தரம் அடைந்தபோதிலும் அவர்களை ஆட்கொண்டு ஆதரிப்பதை ஒரு விரதமாகக் கொண்டிருப்பவன்' இந்த அவதார வீர மூர்த்தி என்கிறார். தருமமே வடிவுகொண்டு வந்த ஓர் அபூர்வ வில்லாளி என்றும் குறிப் பிடுகிறார்.

இந்த அவதாரம் அன்று அதர்மங்களை விலக்கிச் சாதுக்களைக் காப்பாற்றியதுபோல், இன்று நமக்கு நேரும் அதர்மங்களையும் விலக்கி நம்மையும் காப்பாற்றவேண்டும் என்று பொருள்படத் தமது தோத்திரத்தை (இராமன்மீது தோத்திரத்தை) முடித்துக் கொள்கிறார்.

* * *

காந்தியடிகளின் உள்ளத்தைக் கவர்ந்த பிரார்த்தனைப்பாட்டு 'ரகுபதி ராகவராஜா ராம்' என்பதை அறியாதார் யார்? காந்தியடி கள் அரசியல்வாதி மட்டுமல்ல, நமது நாட் டுப் பக்த பரம்பரையில் வந்த பெரியோரும் ஆவார். 'ஆண்டவன் கல்யாண குணங்களை யுடைய புருஷோத்தமன் ஆவான்' என்று கூறும் காந்தியடிகள் கடவுளை இராமனாகவும் கண்டார் என்பதிலும், துளஸீராமாயணத் தில் விசேஷ விருப்பம் கொண்டவராக இருந் தார் என்பதிலும் வியப்பில்லை.

சத்தியமே தெய்வம் என்றார் காந்தியடி கள். 'மேலொரு பொருளும் இல்லா மெய்ப்

பொருள்' இராமனுக வந்தது என்கிறுன் கம்பன். அன்பு அல்லது அஹிம்ஸை நெறி ஒன்றே மெய்ப்பொருளாகிய பரம்பொருளை அடைவதற்கு வழி என்று காந்தியடிகள் கூறுவதும், சரணுகதியே அவதார மூர்த்தியாகிய இராமனை அடையும் நெறி என்று ஆழ்வார் ஆதியர் கூறுவதற்கும் ஸாராம்சத்தில் வேற்றுமை இல்லை.

இராமநாமத்தில் காந்தியடிகளுக்கு விசேஷ நம்பிக்கை உண்டு. இராமநாமம் நோய்களைப் போக்கி ஆரோக்கியம் அடைவதற்கும், அற வழியில் நடப்பதற்கும் ஓர் அரும்பெருந் துணையாகும் என்பர் காந்தியடிகள். இராமனைக்காட்டிலும் இராமநாமம் சக்திவாய்ந்தது என்று கூடக் காந்தியடிகள் கூறியுள்ளார். (ஹரிஜன் பத்திரிகை: 2-6-1946) இக்கருத்தும் தொண்டரடிப் பொடியாழ்வாரின் 'திருமாலை' முதற் பாசுரத்திலே வெளியிடப்பெற்றிருக்கிறது.

கம்பனும் இராமநாமத்தின் தனிப் பெருஞ் சிறப்யை வற்புறுத்துகிறுன், ஓர் அற்புதமான பாட்டிலே:

மும்மைசால் உலகுக்(கு) எல்லாம்
மூலமந் திரத்தை, முற்றும்
தம்மையே தமக்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே மறுமை நோய்க்கு
மருந்தினை, இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னை...

திருநாமம் எம்பெருமானுடைய குண விபூதிகளுக்கு வாசகம் என்பது வைஷ்ணவ ஆசாரியர்களின் கருத்து. இறைவனுடைய கணக்கில்லாத கல்யாண குணங்களையும் எல்லையற்ற செல்வங்களையும் நமக்கு நினை வூட்டும் ஒரு நினைவுக்குறி, அன்பர்கள் உகந்து ஆண்டவனுக்குச் சூட்டியிருக்கும் திருப்பெயர் என்கிறுர்கள்.

இராமநாமம் அவதாரமூர்த்தியான இராமனுடைய அனந்தகல்யாண குணங்களையும், சரணம் அடைந்தவர்களை ஆதரித்துக் காப்பாற்றும் பேரன்பையும் பேராற்றலையும் நினைவூட்டுவதுடன், நம்பிக்கை உள்ளவர்களுக்கெல்லாம் நோய்க்கு மருந்தாகவும், வாழ்க்கையாகிய கோடையில் இளைப்பாறுவதற்குக் கிடைத்திருக்கும் குளிர்பூஞ்சோலையாகவும் உதவும் என்பது முனிவர்கள் ஆழ்வார்கள் முதல் காந்தியடிகள் வரை நம்பி வந்த கொள்கை மட்டுமல்ல, அனுபவமாய்க் கண்டறிந்த உண்மையுமாகும்.

7-12-59 திங்கட்கிழமை காலை 9-மணிக்கு ஸ்ரீ பிச்சக்கட்டளை எஸ்டேட்டிற்குச் சொந்தமான ஸ்ரீ குங்கிலியக் கலய நாயனுர் திருமடாலயத்தில், புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீ குங்கிலியக் கலய நாயனுர், ஸ்ரீ காரி நாயனுர் புராணக் கல்வெட்டுத் திறப்புவிழா சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களால் நிகழ்த்தப்பெற்றது.

விளம்பி ஆண்டு மார்கழி மாதம் முதல் பந்தணைநல்லூர் ஸ்ரீ பசுபதீசுவரர் ஆலயத்தில் சிறப்பான மாதவழிபாடு மாதந்தோறும் நடைபெற்று வந்திருக்கிறது. அதன் முதல் ஆண்டு விழா (12-12-59) சனிக்கிழமை மாலை 3-மணி முதல் ஷி தேவஸ்தானத்தில் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸ்பால் சிவநெறிச் செல்வர் வித்வான் கே. எம். வெங்கடராமய்யா, எம். ஏ., பி. ஓ. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காஞ்சிபுரம், ஸ்ரீ ஏகாம்பரநாத சுவாமி கோயிலில் நாயன்மார்களின் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 9-12-59 முதல் 11-12-59 முடிய சிறப்பாக நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பெற்றன.

வன்னியத்தேனும்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத நடராஜப்பெருமானுக்கென்று ஸ்ரீமதி மதுரம் கோபாலகிருஷ்ணய்யர் அவர்களால் கட்டுவிக்கப்பட்ட அம்பலவாணம் சபா மண்டபத்திறப்புவிழா 8-9-59-ல் நடைபெற்றது. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையில் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கள் "நடராஜ தத்துவம்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு ஆற்றினுர்கள்.

# – : அ வி நா சி : –

மந்தி கடுவனுக் குணப்பழம் நாடி மலைப்புறஞ்
சந்திகள் தோறுஞ் சலபுட்ப மிட்டு வழிபடப்
புந்தி யுறைவாய் புக்கொளி யூரவி நாசியே
நந்தி யுனைவேண்டிக் கொள்வேன் நரகம்
[புகாமையே

—சுந்தரர்.

அவிநாசி பாடல்பெற்ற தலங்களில் ஒன்று. கொங்கு நாட்டில் பாடல்பெற்ற ஏழு பதிகளில் ஒன்று. இது கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிநாசி வட்டத்தின் தலைமையிடம். திருப்பூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 8 கல் தொலைவிலிருக்கிறது. பஸ் மூலம் போகலாம். கோயம்புத்தூரிலிருந்து பஸ் ஏறி 23 கல் சென்றால் இவ்விடத்தை யடையலாம். தங்குவதற்குச் சத்திரங்கள், மடங்கள், பிரயாணிகள் விடுதி முதலியன உள்ளன.

சுந்தரர் தேவாரத்தில் 'புக்கொளியூர் அவிநாசியே' என்று கூறப்படுவதால் 'திருப்புக்கொளியூர் அவிநாசி' என்று வழங்கப்படுகிறது. அவிநாசி (விநாசம் இல்லாதவன், அழிவில்லாதவன்) என்ற இறைவன் பெயராலேயே இத்தலத்தின் பெயர் குறிக்கப் பெறுகிறது. 'பொங்காடரவா புக்கொளியூர் அவிநாசியே', 'பூத்தாழ் சடையாய் புக்கொளியூர் அவிநாசியே' என்று சுந்தரர் கூறுவதால் இறைவன் திருநாமம் அவிநாசி என்று பெறப்படுகிறது. 'அரிய பொருளே அவிநாசியப்பா' என்ற மணிவாசகர் திருவாக்கும் இதை வலியுறுத்தி நிற்கிறது. ஊழிக்காலத்தில் சிவபெருமான் அக்கினி தாண்டவம் செய்த காலத்து அஞ்சித் தேவர்கள் புக்கு ஒளித்த காரணத்தால் புக்கொளியூர் என்ற பெயர் ஏற்பட்டதெனத் தலபுராணங் கூறுகிறது. அந்தணச் சிறுவன் ஒருவன் முதலைவாயினுட்புக்கு ஒளிந்த ஊர் 'புக்கொளியூர்' என்ருயிற்றென்று கூறுவாருமுளர். தட்சிண காசி, வாரணசி என்ற பெயர்களும் உண்டு.

இத்தலத்து இறைவன் திருநாமம் - அவிநாசியப்பர், அவிநாசிநாதர் என்பன. திருஅவிநாசிப்பரமர் என்பர் தலபுராணக்காரர். தேவியின் திருப்பெயர் பெருங்கருணையம்பிகை, கருணலயச் செல்வி என்பவை.

கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. கோபுரம் முழுவதும் கட்டப்பெருமல் அடித்தளத்துடன் இருக்கிறது. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. கோயிலைச் சுற்றி வீதிகள் இல்லை. தேரோடும் தெருக்கள் தனியே இருக்கின்றன, கோபுரத்தின் முன் மண்டபத்தின் வலதுபுறம் செல்வ விநாயகர் சந்நிதி வடக்கு நோக்கியிருக்கிறது. கோபுரத்தின் முன்புறம் இரண்டு நிர்த்தன கணபதிகளும், உள் வாயிற்படிகளில் இருமருங்கும் கிழக்கு நோக்கி துவாரபாலகர்களும் காட்சியளிக்கின்றனர். கோபுரத்தின் கீழுள்ள இன்னுமோர்படிக்கட்டில் மாணிக்க வாசகரும், சுந்தரரும் மேற்கு நோக்கி இறைவனை வணங்கும் பாவனையில் எழுந்தருளியிருக்கின்றனர். கோபுரத்தின் உட்பக்கம் அடிப்பாகத்தில் வலதுபுறம் திருமாலும், இடதுபுறம் சந்திரனும் இருக்கின்ருர்கள். உள்ளே நுழைந்ததும் அவிநாசியப்பர் சந்நிதிக்கெதிரில் பெரிய நந்தியைக்காண்கிறேம். சாதாரணமாகச் சிவன் கோயில்களில் அம்பாள் சந்நிதி, இறைவன் சந்நிதிக்கு இடதுபுறம் இருக்கும். ஆனல் இக்கோயிலில் வலதுபுறம் அமைந்திருக்கிறது, அம்பாள் கர்ப்பக்கிரக மேல்புறச் சுவரில் பெரிய தேள் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. அதையும் மக்கள் பூசிக்கின்றனர். அவிநாசியப்பர் கோயிலுக்கு வெளியில் திருக்குளத்துக்கெதிரில் அம்பிகை தனிக்கோயில் இருக்கிறது. மூலஸ்தானத்திலேயே பாதிரி மரம் இருக்கிறது. அம்பிகைத் தவக்கோலத்தில் காட்சியளிக்கிருள்.

இத்தலத்தில் நான்கு தீர்த்தங்கள் உள்ளன. காசிக்கங்கை என்ற கிணறு கோயிலுக்குள் இருக்கிறது. கோயிலுக்கு வடபுறம் வெளியில் நாககன்னிகை தீர்த்தம்

(கிணறு) இருக்கிறது. கோயிலுக்கெதிரில் நீராழி மண்டபத்துடன் திருக்குளம் ஒன்



அவிநாசி—சுந்தரர் கோயில்

றிருக்கிறது. பெரிய நந்தி ஒன்று குளக் கரைப் படிக்கட்டுகளின் வாயில்மேல் அழகு செய்கிறது. நள்ளாறு என்ற தீர்த்தம் கோயிலுக்கு வடபுறம் ஓடுகிறது. சுந்தரர் தேவாரத்தில் குறிக்கப்படுகிறது. இதே ஆறு கோயிலின் எதிரே ஓடுகிற இடத்திலுள்ள துறையை ஐராவத தீர்த்தம் என்கின்றனர். இத்தலத்தின் விருட்சம் மாமரம்.

கோயிலில் சுவாமி, அம்மன் இவர்களின் சந்நிதி மண்டபத் தூண்களிலும், கர்ப்பக் கிரகச் சுவர்களிலும் அழகிய சிற்ப வேலைப் வேலைப்பாடமைந்த உருவங்கள் இருக்கின்றன. சுவாமி சந்நிதிக்கு முன்னுள்ள மண்டபத் தூண்களில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, காளி, வீரபத்திரர் இவர்களின் அழகிய உருவங்களைக் காணலாம். இன்னும் மூன்று தூண்களில் பெரிய காளியப்ப கவுண்டர், அவர் மகன், சின்ன காளியப்ப கவுண்டர் இவர்களின் உருவங்கள் இருக்கின்றன. பெரிய காளியப்பக் கவுண்டரின் மகனுடைய தொடையிலிருந்த சிலந்தி குணமடைந்ததற்காக இந்த மண்டபம் கட்டப் பட்டதாக அங்குள்ள கல்வெட்டு அறிவிக்கிறது. அந்த மகன் உருவத்தின் தொடையிலுள்ள ஒரு சிறு பள்ளத்தை அடையாளமாகக் காட்டுகின்றனர். அம்பிகை சந்நிதியின் முன் மண்டபத் தூண்களில் குறவன், குறத்தி, நாககன்னிகை, மண்டபம் கட்டிய நாயக்கர், அவர் மனைவி, முருகன்-வேடன், இவர்களின் அற்புத சிற்ப வேலைப்பாடமைந்த உருவங்கள் இருக்கின்றன. மண்டபத்தின் படிக்கட்டுகளில் இருமருங்கும் உள்ள சிங்கங்கள் மிக வனப்புடன் விளங்குகின்றன. கோயிலுக்கு வெளியே சந்நிதிக்கெதிரிலுள்ள விளக்குத் தூண் மண்டபத்தில் சுந்தரர், முதலைவாய்ப் பிள்ளை, மீன் வாயில் இலிங்கம் இந்த உருவங்களைக் காணலாம்.

அவிநாசித் தலத்திற்கே மிக்க சிறப்புத் தருவது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றுத் தொடர்புடைய ஒரு அற்புத நிகழ்ச்சிதான். சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனாரைக் காண்பதற்காக சோழநாடகன்று மலைநாடு செல்ல கொங்கு நாட்டுக்கு வருகிறார். அவிநாசியிலுள்ள அந்தணர் தெரு வழியே போகிறார். அத்தெருவில் எதிர் எதிருள்ள இரண்டு வீடுகளில் மங்கல ஒலியும், அழுகை யொலியும் கேட்கிறார். அங்குள்ளாரை வினவுகிறார். அந்தணர்கள் "ஒரே வயதுள்ள இரு குழந்தைகள் குளிக்க மடுவிற்குச் சென்றனர்; மடுவில் ஒருவனை முதலை இழுத்துச் சென்றது; தப்பிப் பிழைத்துவந்த பையனுக்கு இந்த வீட்டில் பூணூல் விழா நடைபெறுகிறது; அதே வயதுடைய முதலையால் விழுங்கப்பட்ட மகனை நினைத்து எதிர் வீட்டிலுள்ள தாய் தந்தையர் அழுகின்றனர்" என்று கூறினர். சேக்கிழார்,

**அந்தணாளர் வணங்கி 'அரும்புதல்வர்**
**இருவர் ஐயாண்டு**
**வந்த பிராயத்தினர் குளித்தமடுவில்**
**முதலை ஒருமகவை**
**முந்த விழுங்கப் பிழைத்தவனை**
**முந்நூலணியும் கலியாணம்**
**இந்தமனை மற்றந்தமனை இழந்தார்**
**அழுகை' என்றுரைத்தார்**


என்று மிகச் சுருக்கமாக அழகுபடக் கூறுகிறார். முதலையுண்ட மதலையின் பெற்றோர் வந்து சுந்தரரை வணங்குகின்றனர். அவர்களை அழைத்துக்கொண்டு சுந்தரர் அம்மடுவிற்குச்சென்று பதிகம் பாடுகின்றார். 'உரைப் பாருரையுகந்து' என்று தொடங்கும் பாடலில் 'கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச்

சொல்லு காலனையே' என்று கூறியதும் முதலை குழந்தையை உயிருடன் கரையில் கொண்டுவந்து உமிழ்கிறது. பெற்றோர் மகிழ அக்குழந்தைக்கு பூணூல் கலியாணத்தை சுந்தரர் முடித்து வைத்தார். குளத்தில் அந்த சிறுவன் குளிக்கப்போனதை "குளத்திடை யிழியாக் குளித்த மாணியெனைக் கிறிசெய்ததே", "குளத்திடை உள்ளாடப் புக்க மாணியெனைக் கிறிசெய்ததே" என்று சுந்தரர் பாடலில் குறிக்கிறார். ஹரதத்தாசாரிய சுவாமிகள் 'ஹரிஹர தாரதம்யம்' என்ற வடமொழி நூலில் ஒரு சுலோகத்தில் இதைப் புகழ்கின்றார். முதலையிருந்த மடுவை இப்போது தாமரைக்குளம் என்றழைக்கின்றனர். கோயிலுக்குத் தெற்கே சற்று தூரத்திலுளது. அது ஏரியாக இருக்கின்றது. அதன் கரையில் சுந்தரர் எழுந்தருளியுள்ள கோயில் இருக்கிறது. அவர் திருமுன் முதலைவாயினின்றும் பிள்ளை வெளியே வருவது போன்ற சிலை உருவம் இருக்கிறது. பங்குனி உத்தரத்தன்று அவிநாசியப்பர் அங்கு சென்று காட்சி கொடுக்கும் திருவிழா நடைபெறுகிறது. சித்திரை பூரத்தன்று இத்தலத்தில் பெரிய தேர் உற்சவம் உண்டு. முதலைவாய் மதலையழைத்த பெருமையை,

நாட்டார் அறிய முன்னுளில் நன்னுள்
உலந்த ஐம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன்
தன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கண் தனிமா
முதலை வாய்நின்று
மீட்டார் கழல்கள் நினைவாரை
மீளா வழியின் மீட்பனவே

என்று சேக்கிழார் நமிநந்தியடிகள் புராணத்தில் கூறுகிறார். அருணகிரிநாதர், 'செறிப்பித்த கராவதின் வாய்மக வழைப்பித்த புராணக்கருபாகர திருப்புக்கொளியூருடையார் புகழ் தம்பிரானே' என்று பாடுகிறார்.

இத்தலத்தில் இன்னுமொரு அற்புத நிகழ்ச்சியைக் கேள்விப்படுகிறோம், குருநாத பண்டாரம் என்பவர் அவிநாசி நாதர்பால் அளவிறந்த பக்தியுடையவர்; சிவபூசை வழுவாது செய்பவர். முதலை மடுவு ஒரு சமயம் பெருமழையினுல் உடைப்பெடுக்கும் தருவாயிலிருந்தது. அதன் கரையில் அமைதியாய் சிவபூசை செய்துகொண்டிருந்த பண்டாரத்தை




அவிநாசி அம்மன் சந்நிதி முன்தோற்றம்

உடைப்படைக்க ஆட்களுடன் வந்த அதிகாரிகள் அகன்று செல்லச் சொன்னார்கள். சிவபூசையிலேயே நாட்டத்தைச் செலுத்தியிருந்த அவர் காதில் படவில்லை. அவர் அகந்தையுடைய போலிச்சாமியார் என்றெண்ணி அவர் வைத்துப்பூசை செய்து கொண்டிருந்த சிவலிங்கத்தை யெடுத்துத் திருக்குளத்தில் எறிந்ததுமன்றி, அவ்வதிகாரிகள் பண்டாரத்தை மண்ணடைக்கக் கூலியாளாகவும் அமர்த்தினர். வேலை முடிந்ததும் சிவலிங்கம் எறியப்பட்ட திருக்குளக்கரைக்குச் சென்று அமர்ந்து தன் ஆன்மார்த்த மூர்த்தி தன் கைக்கு வந்தாலன்றி உயிர் வாழ்வதில்லையென்ற உறுதியுடன் இரவு பகலாகப் பல நாட்கள் கடுந்தவம் கிடந்தார். இறைவன், சிவலிங்கத்தை ஒரு மீன் வாயிலாய்க்கரையில் உமிழச் செய்தார். பண்டாரமும் சிவலிங்கத்தைப்பெற்று ஆனந்த பரவசமடைந்தார். அவிநாசி நாதர் சந்நிதி விளக்குத்தூண் மண்டபத்தில் மீன் சிவலிங்கத்தை உமிழும் உருவமும், வழி காட்டி விநாயகர் கோயிலில் ஒரு பெரியார் கையில் சிவலிங்கத்துடன் வீற்றிருப்பதுபோன்றிருக்கும் சிலையும், தாமரைக் குளக்கரையிலுள்ள சுந்தரர் கோயிலில் இருக்கும் மீன் சிவலிங்கத்தை உமிழ்வது போன்ற சிலையும் இந்த நிகழ்ச்சியின் உண்மையைக் காட்டும் சின்னங்களாக உள்ளன.

இத்தலத்தைப்பற்றி யெழுந்த நூல்களும், பாடல்களும் பல. பிரமாண்ட புராணம், பவுடியோத்திரம், மகாஸ்காந்தபுராணம் இவைகளில் இத்தலச் சிறப்புக்கள் கூறப்பட்டிருக்

இன்றன. சுந்தரர் பத்துப் பாடல்களையுடைய ஒரு பதிகம் ஓதியுள்ளார். 'வேண்டிக்கொள்



அவிநாசி கோபுர அடிப்பாகம்

வேன் பிறவாமையே' என்றும்; 'வேண்டிக் கொள்வேன் நரகம் புகாமையே' என்றும் கூறி இறைவனை வணங்குகிறார். அப்பரடிகள், 'அணவரியான் கண்டாய் அவிநாசி கண்டாய்'' என்று அருளுகிறார். வாதவூரடிகள் 'அரியபொருளே அவிநாசி யப்பா!' என்று அறை கூவுகிறார். திருமூலர் திருமந்திரத்தில் ஒரு பாடலும், பதினோராந் திருமுறையில் ஒரு பாடலும் இப்பதியைப் பற்றியுள்ளன. சேக்கிழார் வெள்ளானைச் சருக்கத்தில் 4 பாடல்களிலும், நமிநந்தியடிகள் புராணத்தில் ஒரு பாடலிலும் கூறியிருக்கிறார். அருணகிரிநாதர் ஆறு திருப்புகழ்ப் பாடல்களால் போற்றியிருக்கின்றனர். பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் ஒரு பாட்டுண்டு. சிவப்பிரகாச சுவாமிகளின் நால்வர் நான்மணி மாலையில் இரண்டு பாடல்கள் உள்ளன. இராமலிங்கசுவாமிகள் ஒரு பாடலை அருளியுள்ளனர். இளையான் கவிராயர் என்பவர் 1021 செய்யுட்களையுடைய அவிநாசித்தலபுராணம் இயற்றியிருக்கிறார். வாசுதேவ முதலியாரின் கருணாம்பிகை சதகம், சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் (சம்பந்த சரணாலயத் தம்பிரான்) அவர்களின் கருணாம்பிகைப் பிள்ளைத் தமிழும், கருணை தாசரின் கீர்த்தனைகள், தாராபுரம் ஆறுமுகம் பிள்ளையின் அவிநாசி நான்மணிமாலை, நெகமம் - முத்துநாகப்ப முதலியாரின் அவிநாசிநாதர் பதிகம், கோவை-கந்தசாமி முதலியாரின் பெருங்கருணாம்பிகை பதிகம், விசுவநாதய்யரின் இரு திருப்புகழ்ப் பாடல்கள், பவானி பண்டித-குமாரசாமிபிள்ளையின் திரு அவிநாசி நாதருலா, சுவாமி சுத்தானந்த பாரதியாரின் சிவாஷ்டகம், சிரவணம் பட்டி-கந்தசாமி சுவாமிகளின் யமகவந்தாதி, வித்துவான் குமாரஞான சம்பந்தனாரின் பெருங் கருணையம்மை கட்டளைக் கலித்துறை இவைகள் எல்லாம் இப்பதியைப்பற்றியனவே. இன்னும், அவிநாசித் தலபுராண வசனத்தை திருப்பூர் டி. எஸ். கந்தசாமி செட்டியார் பதிப்பித்திருக்கின்றார். அவிநாசி-கு. இராஜமுத்து என்பவர் 'திருப்புக்கொளியூர் அவிநாசித் தலபுராண மான்மியம்' என்ற உரை நடை நூலை இயற்றியிருக்கின்றார்.

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பூலோக கைலாசமான புக்கொளியூர், தட்சிணவாரணாசியான அவிநாசி, திருப்புக்கொளியூர் என்று இவ்வூரின் பெயர் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறது. அவிநாசி ஆண்டார், அவிநாசி ஆளுடைய நாயனார் என்று இறைவன் திருப்பெயர்கள் சொல்லப்படுகின்றன. அம்பிகை-திருக்காமக் கோட்டத்து நாச்சியார் பெருங்கருணைச் செல்வியார் என்றழைக்கப்படுகிறாள். கொங்கு சோழமன்னர்களான வீரராஜேந்



அவிநாசி அம்மன் கோயில் சிங்கம்

திரசோழன், குலோத்துங்க சோழன், வீர பாண்டியன், சுந்தரபாண்டியன், கோனே

ரின்மை கொண்டான், உம்மத்தூர்த் தலைவர்களான வீர நஞ்சராய உடையார், வீர சிக்கராய உடையார், விஜயநகர அச்சுத தேவ மகா ராயர் முதலியவர்களின் காலத்தவை இந்தக் கல்லெழுத்துக்கள். நித்திய பூசை, திருவிழா, விளக்கெரிக்க, ஏழைகளுக்கு உணவு, எண்ணெய் முதலியவை வழங்கத் தானங்கள் செய்ததை இவை அறிவிக்கின்றன. சுந்தரபாண்டியன், குளக்கரையில் சுந்தரர் கோயிலைக் கட்டினான் என்றும், தென்பள்ளியென்ற இடத்தில் சுந்தரர் கோயில் இருந்ததாகவும் இவைகளிலிருந்து அறிகிறோம். நச்சினார்க்கினியர் என்ற கண்டியாத் தேவர் இறைவன் இறைவி எண்ணெய் முழுக்காட்டிற்குத் தானம் வழங்கியிருக்கிறார். அவிநாசியில் கரிவரதப் பெருமாள், காசி விசுவநாதர், ஆஞ்சநேயர் கோயில்களுமுள்ளன.

இறவாமற் பிறவாமல்
எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான
பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே
குகனேசொற் குமரேசா
அறநாலைப் புகல்வோனே
அவிநாசிப் பெருமாளே

—அருணகிரிநாதர்.

திருப்புகலூர், ஸ்ரீ அக்னீஸ்வரசுவாமி தேவஸ்தானத்திற்கு 15-11-59ந்தேதி சென்னை அரசாங்க அறநிலைய ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ-ஏ.எஸ்., அவர்கள் வருகைதந்து ஷெ தேவஸ்தானத்திற்கு அண்மையில் வாங்கிய யானைக்குட்டிக்கு "சூளிகாம்பாள்" என்று பெயர் சூட்டினார்கள். இக்கோயில் இறைவியின் பெயர் சூளிகாம்பாள் என்னும் கருந்தார்குழலி.

திண்டுக்கல் தாலுகா, காமாட்சிபுரம் ஸ்ரீ கோபிநாதசுவாமி ஆலயம் மலைப்படிக் கட்டு திருப்பணியைச் சென்னை மாநில அறநிலைய ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் 23-10-59 தொடங்கி வைத்து திருப்பணியின் அவசியத்தைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். திண்டுக்கல் நகராட்சி ஆணையர் திரு. வெங்கடாசல சர்மாவும் இவ்விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அறநிலைய ஆணையருக்கு தர்மகர்த்தாக்களின் சார்பிலும், பொதுமக்களின் சார்பிலும் ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. இக்கோயில் நிர்வாக தர்மகர்த்தாவும், திண்டுக்கல் நகராட்சித் தலைவருமான திரு. ஓ. சின்னச்சாமி பிள்ளை தலைமையில் 7 பேர் அடங்கிய ஓர் திருப்பணிக்கமிட்டி அமைக்கப்பட்டது. மதுரை மாவட்ட அறநிலைய உதவி ஆணையர் திரு. ஏ. வெங்கடாஜலம் அவர்களும் கலந்துகொண்டார்கள். இக்கோயில் மலைப்படிக்கட்டு திருப்பணியையும் மற்றுமுள்ள திருப்பணிகளையும் செய்ய சுமார் ரூ. 52,000 (ஐம்பத்திரண்டாயிரம் ரூபாய்) செலவழிக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அறநிலைய ஆணையர் ஏலத்தில் விட்ட திருப்பணி வெள்ளிக்கரணையை கன்னிவாடி திரு. ஆர். திருமலைசாமி ரெட்டியார் ரூ. 301-க்கு ஏலம் எடுத்தனர்.

சிதம்பரம் தாலுகா, பரதூர் ஸ்ரீ அகஸ்தீசுவரர் வரதராஜப் பெருமாள் கோயிலில் 24-11-59 காலை திரு ஜி. வாகீசம் பிள்ளை எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் பரதூர் ஊராண்மைக்கழகத் தலைவர் திரு. உ. சிவசங்கரம்பிள்ளை அவர்களால் நூல்நிலையத் திறப்பும், கடலூர் அறநிலையப்பாதுகாப்புத்துறை உதவி ஆணையாளர் திரு. ரா. அ. வரதராசய்யர், பி. ஏ., அவர்களால் ஸ்ரீ வரதராசப்பெருமாள் கோயில் அஸ்திவாரக் கால்கோளும் சிறப்பாக நடைபெற்றன.

# மெய்ப்பொருள் நாயனார் : : :

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொரு ளுக்கடியேன்

—சுந்தரர்.

கற்றநன் மெய்த்தவன் போலொரு
பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை அவனைச்
செறப்புக லுந்திருவாய்
மற்றவன் தத்தா நமரேயெனச்
சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு
ளாமென்று பேசுவரே

—நம்பியாண்டார் நம்பிகள்.

சேதி நாட்டிலே திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்டு மலையமான் என்ற பரம்பரை அரச மரபினர் அரசாண்டு வந்தனர். அம்மரபில் வந்தவர் மெய்ப்பொருள் நாயனர்; சிவனடியார் கருத்தறிந்து ஏவல் செய்வார்; அறநெறி வழாமல் அரசியல் நடத்தினர்; பகைமன்னரை வென்ருர்; அன்பர் திருவேடமே சிந்தை செய்பவர்; கோயில்களில் நாட்பூசனை, திருவிழாக்கள் இவை குறைவறச் செய்தார்; தமது செல்வம் அடியார்களுடையனவே என்று கொண்டு அவர்கள் வந்தபோது வேண்டுவன கொடுத்து மகிழ்வார்.

இப்படியாக இவர் வாழ்ந்து வருங்கால் பகைமன்னன் ஒருவன் இவருடன் போருக்கு வந்து தோல்வியுற்று, சேனைகளையுமிழந்து அவமானப்பட்டான். நேரில் போரில் வெல்ல முடியாத அவ்வரசன் வஞ்சனையால் வெல்ல சூழ்ச்சி செய்தான். இவருடைய சைவ சீலத்தை நன்குணர்ந்தவன். ஆதலின், மெய்யெலாம் திருநீறுபூசி, சடைமுடித்து, கையிலே படைக்கலம் ஒன்றை மறைத்து வைத்த புத்தகப் பையை எடுத்துக்கொண்டு திருக்கோவலூர் வந்தடைந்தான். அரண்மனை சேர்ந்தான். பலவாயில்களும் கடந்து சென்ருன். எம்பிரான் அடியார் என்று காவலர் வழிவிட்டனர். கடைசி வாயிலில் இருந்த தத்தன் என்ற ஏவலன் 'அரசர் உறங்கும் நேரம்; அமயம் பார்த்துச் செல்லவேண்டும்' என்று கூறினன். பொய்த்தவ வேடம்பூண்ட முத்தநாதன் என்ற அப்பகைமன்னன், 'நான் இவற்கு உறுதி கூறவந்தேன். நீ நில்' என்று சொல்லி அக்காவலாளனையும் மீறி உள்ளே புகுந்தான்.

கட்டிலிலே அரசர் துயில, அரசியார் அருகமர்ந்திருந்தனர். அடியார் வந்தது கண்டு அரசரைத் தேவியார் எழுப்பினர். தூக்கம் நீங்கிய மன்னன் சிவனடியார் வந்தார் என்றெண்ணி 'தாங்கள் இங்கெழுந்தருளியது யான் பெற்றபேறு' என்றுகூற, அவன் 'உங்கள் நாயனர் முன்னே அருளிய ஆகம நூல் எங்குமிலாத ஒன்றை உனக்கு உபதேசிக்கக் கொண்டுவந்தேன்' என்ருன். நாயனர் 'இதற்குமேல் பேறு வேறுண்டோ? ஆகமத்தை வாசித் தருள்செய்க' என்று வேண்டினர். நாயனரும் தானும் தனித்திருந்தே அவ்வாகமத்தை ஓத வேண்டுமென்ருன் அக்கயவன். நாயனரும் அரசியாரை அந்தப்புரம் செல்லப் பணித்து, தவவேடத்தனை ஆசனத்திருத்தித் தாம் கீழே நின்றுகொண்டு, 'இனி அருள் செய்க' என்று சொன்னர். புத்தகக் கவளியை அவிழ்ப்பவன்போல படைக்கலத்தை எடுத்து நாயனர் வணங்கும்போது அப்பகைவன் தான் நினைத்தபடியே செய்து முடித்தான். மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத்தொழுது அரசரே வென்ருர். பொய்த்தவன் புகுந்தபோதே மனம் அங்கு வைத்த தத்தன் உள்நுழைந்து வாளால் அவனை வெட்டப் போனன். நாயனர் கையினல் தடுத்து 'தத்தாநமர்' என்று சொல்லி நிலத்தில் சாய்ந்தார். 'யான் இனிச் செய்ய வேண்டிய பணி என்ன?' என்று வணங்கிக் கேட்டான் தத்தன். நாயனர் 'இவ்வடியாரை யாரும் தடுக்காத வண்ணம் கொண்டுபோய் விடு நீ' என்ருர். இதனை அறிந்த பலரும் அரசருக்குத் தீங்கு செய்த அவனைக் கொல்வதற்காகச் சூழ்ந்தனர். அரச ஆணையைத்

தத்தன் அவர்களுக்குக் கூற, அவர்களும் அஞ்சி யகன்றனர். தத்தன் திருக்கோவலூர் நகர் கடந்து அவனைவிட்டுத் திரும்பி வந்து நாயனூரிடம் செய்தியைத் தெரிவித்தான். அதைக் கேட்பதற்காகவே உயிர் தாங்கி யிருந்த அரசர் அந்த தத்தன் செய்தபணிக்கு மிக மகிழ்ந்தார். சுற்றத்தாருக்கும் அரசியல் ஆயத்தார்க்கும் திருநீற்றன்பைப் பாதுகாக் கும்படி சொல்லி, அம்பலக் கூத்தனின் ஆடுங் கழலைச் சிந்தித்து வந்தித்தார். இறைவன் அவருக்குக் காட்சி கொடுத்து, தன் திருவடி நீழலில் இடையருது கும்பிட்டிருக்கும் பேற்றை யளித்தார்.

பெரியபுராணத்தில் மெய்ப்பொருள் நாயனூர் வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் இருபத்து நான்கு செய்யுட்களால் அருளியுள் ளார். நாயனூரின் இயற்பெயர் தெரியவில்லை. மலாடர்கோமான், சேதிநாதன் என்பதால் மலையமான் திருமுடிக்காரி வழி வந்தவர் என்று கொள்ள இடமுண்டு. சிவனடியாரின் மெய்வேடமே மெய்ப்பொருள் என்று கொண்டதால் இவர் பெயர் மெய்ப்பொருள் நாயனூர் என்று வழங்கலாயிற்று. 'இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்ற திருக்குறளுக்கு நாய னூர் வரலாறு சிறந்த எடுத்துக்காட்டு. 'இன் னுயிர் செகுக்கண்டும் எம்பிரான் அன்ப ரென்றே நன்னெறிகாத்த சேதிநாதனூர் பெருமை' என்று சேக்கிழார் போற்றிப் புகழ் கின்ருர். அவர் கொள்கைக் கிணங்க அவரு டைய ஏவலனுன தத்தன் நடந்து கொண்டது அத்தகையவர்க்கு முன்மாதிரியானது. தஞ்சை இராஜராஜேச்சுரத்தில் நாயனூர் படிமத்தின் கீழ் 'தத்தாநமர் என்றமிலாடு டையார்' என்று பொறிக்கப் பெற்றிருக் கிறது. அதையே சேக்கிழாரடிகள் 'தத்தா நமர் என்ருர்' என்று கூறியிருப்பதிலிருந்து அப்புலவர் பெருந்தகையார் கல்வெட்டுக்களை யெல்லாம் அறிந்து தம் நூலை இயற்றினூர் என்பது போதருகின்றது.

சேதிபர்நற் கோவலூர் மலாட மன்னர்
திருவேட மெய்ப்பொருளாத் தெளிந்த சிந்தை
நீதியினு ருடன்பொருது தோற்ற மாற்ருன் [ணம்
நெடுஞ்சினமும் கொடும்படையு நிகழா வண்
மாதவர்போ லொருமுறைகொண் டணுகி வாளால்
வன்மைபுரிந் திடமருண்டு வந்த தத்தன்
காதலுற நமர்தத்தா வென்று நோக்கிக்
கடிதகல்வித் திறைவனடி கைக் கொண்டாரே

—உமாபதி சிவாசாரியார்.

---

சிரவணபுரம், கௌமார மடாலயத்துக்குப் பாத்தியப்பட்ட ஸ்ரீ தண்டபாணி சுவாமி கோயில் முருகப்பெருமானுக்கு 1-11-59 ஞாயிறு முதல் 5-11-59 வியாழன் முடிய லட்சார்ச் சனையும், 6-11-59 வெள்ளிக்கிழமையன்று தெய்வயானையம்மையார் திருமணவிழாவும் சிறப் பாக நடைபெற்றது. தேவாரம், திருப்புகழ் இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

---

நாகை வெளிப்பாளையம், ஸ்ரீஆனந்தவல்லி அம்பாள் சமேத ஸ்ரீ அகத்தீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் முடிவுற்றதும் 14-9-59 தேதி முதல் லெட்சார்ச்சனை வைபவம் ஆரம்பிக்கப்பட்டு 16-10-59 அன்று 131 அர்ச்சனை களுடன் பூர்த்தியடைந்தது.

---

14-11-59-ல் நன்னிலம் தாலுகா, கோயில்திருமாகாளம் ஸ்ரீ மகாகாளநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருஞானசம்பந்தர் தேவார திருப்பதிகங்களை சென்னை அறநிலையத்துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள் திறந்துவைத்து சிறப்புரையாற்றி னூர்கள். நிர்வாக தர்மகர்த்தா திரு. எஸ். சிவராஜவேலாயுதம் பிள்ளையும் நிர்வாகி எஸ். வெங்கடாசலமும் பொதுமக்களும் பூர்ணகும்ப கோயில் மரியாதையுடன் ஆணையாளரை வரவேற்ருர்கள். அம்பல், கோயில் திருமாகாளம் சாகுபடியாளர்கள் சார்பிலும், ஊராண்மைக் கழகங்களின் சார்பிலும் மாலைகளும் வரவேற்புப்பத்திரங்களும் அளிக்கப்பட்டன.

# * சாந்தலிங்க சுவாமிகள் *

எம்மத்தில் உள்ளவர்கள்
எந்நிட்டை சொன்னாலும்
சம்மதமே யாம்எமக்குத்
தற்போதம் மாயிலெனப்
பொய்ம் மதத்தோர்
நாணப் புகன்றருளும்—அப்புனிதன்
மும்மதமாப் போலும்
முழுஞான வீரனம்மா

—*திருப்புகழ் தண்டபாணி சுவாமிகள்*

அறம் தேய்ந்து மறம் பெருகும் காலத்தே ஆங்காங்கே மக்களை நல்வழிப் படுத்த பேரருளாளர் பலர் தோன்றுவது வரலாறறிந்தஒன்று. அத்தகைய அருட் குரவர்களுள் ஒருவர் சாந்தலிங்க அடிகளார். அருந்தமிழ் மூதாட்டி 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று கூறினர். அந்த தொண்டை நாட்டிலே பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றினார் சாந்தலிங்கச் சான்றோர். வீரசைவசமயத்தைச் சார்ந்தவர். இளமையிலேயே இறைவனிடத்துப் பக்தியும், நற்குணம் நல்லொழுக்கம் வாய்க்கப் பெற்றவராய்த் திகழ்ந்தார். துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகள் என்பாருடைய தொடர்பும் பெற்றார்; அப் பெரியாருடன் திருவண்ணாமலையில் உடனுறையும் பெறும் பயனையும் எய்தினார். பொம்மபுரம் சிவஞான பாலைய சுவாமிகளைக் காண வேண்டுமென்ற பேரவாவினால் அவ்வூர் நோக்கிப் புறப்பட்டார். செல்லும் வழியில் துறைமங்கலம்-சிவப் பிரகாச சுவாமிகளின் தொடர் பேற்பட்டது. இவர் துறையூர்ச் சிவப்பிரகாசரின் வேறாவர். சாந்தலிங்கரும் துறைமங்கலம்-சிவப்பிரகாசரும் சிவஞான பாலைய சுவாமிகளைக் கண்டு வணங்கினர். பொம்மபுரத்துச் சுவாமிகளின் திருக்குறிப்பின்வண்ணம், சிவப்பிரகாச சுவாமிகள் தமது தங்கை ஞானாம்பிகையைச் சாந்தலிங்கருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். சாந்தலிங்கர் ஞானாம்பிகையாருடன் பேரூர் வந்து தங்கியிருந்தனர். அவ்வூரில் திருமடம் அமைத்துக்கொண்டு அன்பர்களுக்கு ஞான நூல்களை விளக்கியும், மற்ற நேரங்களில் ஞான நிட்டை கூடியும் வருவாராயினர். ஒரு நாள் பட்டிப் பெருமான் பச்சைநாயகியுடன் விடை யூர்தியின் மீது காணும்பேறு பெற்றார். இக்காட்சியினை தம் நூல்களுள் பல பாடல்களில் கூறியுள்ளனர். ஓரிடத்தில்,

ஆனேறு இவர்ந்து என்னெதிரே
அன்று வந்தோய்க்கு
ஏனோ வெறுப்பு இப்பொழுது
ஓர் சற்றிரங்கு கில்லாய்
நானே அறிவேன் நின்பெருமையை
நம்பனே நீ
தானே பொறுத்தாளா கண்டாய்
என் தவறெலாமே

எனமிக்க ஆராமையுடன் சொல்கிறார்.

சாந்தலிங்கர் ஒல்வொரு நாளும் யாராவது ஒரு புது அடியவருடன் உண்பதை நியமாகக் கொண்டிருந்தனர். பல அடியார்கள் மடத்தில் வந்து தங்கி ஞானோபதேசம் பெறத் தொடங்கினர். அடிகளார் துறவற நெறியின் பெருமையினைப் பாடம் சொல்லும்போது விளக்கிவருவாராயினர். இல்வாழ்க்கையிலிருக்கும் சாந்தலிங்கர் துறவறம் போதிக்கும் காரணம் என்னோ என்று ஐயுற்றனர். இதைக் குறிப்பால் உணர்ந்த அச்சான்றோர், ஒருநாள் பாடம்தொடங்கும்பேரது மனைவியார் ஞானாம்பிகையாரை மடிமீதிருத்திச் சொல்லியருளினார். அவ்விருவரும் சிவபெருமான் உமாதேவியாக அங்குள்ளார்க்குக் காட்சியளித்தனர். எல்லோரும் தங்கள் தவறுணர்ந்து மன்னிப்பு வேண்ட, அவ்வாறே அருளினார் அடிகளார்.

சுவாமிகள் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் என்ற நான்கு அரிய நூல்களை அருளியுள்ளார். கொலை மறுத்தல் என்னும் நூல் வினா விடையாக இருபத்திரண்டு செய்யுட்களையுடையது. கொலை மறுப்பையுணர்த்தும் நூல்

களில் தலைசிறந்தது. பக்திமிகுதியால் ஒரொருவர் செய்தவற்றைப் பொது விதியாகக் கொள்ளக்கூடாது என்பதை, "நலந்தரு தாதையை வதைத்து முத்தி பெற்முர் உளரெனில் இஞ்ஞாலத்தூடே கலந்து முத்தியடையுநர்க்கு எல்லாம் அதுவோகதி; உலகம் கடந்த பத்திவலந்தனை நீ விதியெனக் கூறுதல் பழுது" என அறுதியிட்டுக் கூறுகின்முர். கொலை மறுத்தலை மறுத்தற்கரிய ஏதுக்களான் நிறுவிக் காட்டுகிறது; கொல்லாமை, புலால் உண்ணுமை, உயிர்கள்மாட்டு அருளுடைமை இவைகளை வற்புறுத்துகிறது.

வைராக்கிய சதகத்தில் கடவுளன்பு கூறப்படுகிறது. தோத்திரமாக 50 செய்யுட்களும், சாத்திரமாக 50 பாடல்களும் தன்னகத்தே கொண்டது. அதில் ஒரு பாடல்,

ஒழித்திடும் பவப்பகை விரைந்து
உள்ளமே ஒது மூதுணர்வோர்முன்
பழிச்சுப் பாடலை அரற்கு அவை
விடர்க்கு இளம்பாவையர் உரைபோலும்
கழித்திடேல் உபசாரம் என்றுஇதனை
நீ கட்டுரை எனக் கொள்வாய்
விழித்து மாரனை எரித்த
தேஅருள் பெறும் விருப்பினர் விருப்புஈதே.

மற்றொரு நூலான வைராக்கிய தீபத்தில் பாசத்தினீங்கும் பாதை காட்டப்படுகிறது. அதில் 101 செய்யுட்கள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக அந்த நூலிலிருந்து ஒரு பாடல் கீழே கொடுக்கப்படுகிறது :—

இளமையில் பிணியற்று ஒருகுடை
நிழல்கீழ் இருநிலமுழுவதும் புரக்கும்
வளமை பெற்றுடைய மகற்கும்
எப்பொழுது வருங்கொல் கூற்றெனும் பயத்
உளமிகப்பறை நின்று அறையுமேல் [தானும்
புவிமிதுடையரோ மற்றையர் இன்பம்
களிமிகுந்து இருப்பர் தெளிவு
இலாமையின் மேற்காரியம் கருதுருநரரே

சுவாமிகளின் நான்காவது ஞான நூல் அவிரோதவுந்தியார் என்பது. 100 செய்யுட்களையுடையது.

எம்மதத் தோரெவ் வகைநிட்டை சொல்லினும்
சம்மத மேயெமக் குந்தீபற
தற்போத மாய்க்குமே லுந்தீபற
தோல்வியும் வெற்றியும் சொன்மதங்கட்
கால பேதத்தினுண் டுந்தீபற [கெல்லாம்
கருத்தன் செயலதென் றுந்தீபற

என்ற செய்யுட்களின் அரிய கருத்துக்கள் இன்புறற்பாலன.

துறவறத்தையே போதித்துக்கொண்டிருந்த அடிகளாரின் இல்வாழ்க்கை, சொல்லொன்று செயலொன்று என்ற மாறுபாடு போலச் சிலருக்குத் தோன்றியது. சுவாமிகள் இதையறிந்து ஒரு நாள் பிச்சைக்குச் செல்கையில் முதலில் பாலன்னம் கிடைத்தால் துறவறமேற்கொள்வதாக பெருமான் மீது ஆணையிட்டுச் செல்ல, இடையன் ஒருவன் பாற்சோறிட்டான். அன்று முதல் அடிகளார் நெறி தவருத துறவறம் பூண்டு ஒழுகி வருவாயினர்.

கன்னட நாட்டரசரான குமார தேவர் என்பார் அரசைத் துறந்து அருட் குருவைத் தேடி வந்து கடைசியாக சாந்தலிங்கரை அண்மி அடிமையாக ஏற்றுக்கொள்ளுமாறு விண்ணப்பித்தனர். அடிகளாரும் அவருக்கு ஞானேபதேசம் செய்தனர். குமாரதேவரும் விருத்தாசலம், துறையூர் இவ்விடங்களில் மடங்களை நிறுவினர். மகாராஜா துறவு முதலிய பதினறு நூல்களை இயற்றினர். இவருடைய மாணுக்கரான சிதம்பர சுவாமிகளே திருப்போரூர்ச் சந்நிதி முறை என்ற அரிய நூலைப் பாடியவர்; சாந்தலிங்க அடிகளாரின் திருவருள் நோக்கத்து இலக்காகி அவருடைய நான்கு ஞான நூல்களுக்கும் உரைவகுத்தார்.

சாந்தலிங்க அடிகளார் ஒரு மாசிமக நன்னுளில் இறையருளிற் கலந்தனர். அவருடைய சமாதி பேரூரில் நொய்யலாற்றின் தென் கரையில் பட்டீசுவரர் கோயிலுக்குக் கிழக்கே இருக்கிறது. அந்த பரம்பரையில் இப்போது ஆறுமுக சுவாமிகளும், இளவரசு இராமசாமி அடிகளாரும் இருந்து சமயத் தொண்டாற்றுகின்றனர். சாந்தலிங்க அடிகளாரின் நினைவுச் சின்னமாக ஒரு தமிழ்க்கல்

(தொடர்ச்சி 53-ம் பக்கம் பார்க்க)

## செய்திகள்

கும்பகோணம் வட்டம், கொரநாட்டுக்கருப்பூர், ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி கோயிலில் திருப்பள்ளியறை விழா, பள்ளியறை ஸ்ரீசொக்கர் பெருமானை புதிதாக வார்த்தும், பள்ளியறை மஞ்சம், பல்லக்கு முதலியவைகளை புதுப்பித்தும் 10-12-59 தேதி ஸ்ரீசொக்கநாதசுவாமிக்கு அபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

தருமபுர ஆதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 18-12-59-ல் சிறப்பாக நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பெற்றன.

◆ ◆ ◆ ◆

லால்குடி ஸ்ரீசப்தரிஷீசுவர சுவாமி கோயிலில் 'ஆதிரை விழா' 4-1-60-ல் தொடங்கி 14-1-60 முடிய சிறப்பாக நடைபெறும்.

◆ ◆ ◆ ◆

27-12-59 அன்று சாத்தூர், ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கோயிலில், மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில், கடந்த ஒரு ஆண்டுகாலமாய், நிலக்கோட்டை நாடார் போர்டு உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியர் வித்வான் திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்களாலும் சிவகாசி நகராட்சி மன்ற உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் வித்வான் திரு க. கொன்றையாண்டி அவர்களாலும் நடத்தப்பட்டுவந்த கந்தர் அநுபூதி நிறைவிழாவும், புலவர்களைப் பாராட்டுதலும், பொற்கிழி வழங்குதலும், இடையிடையே பெரியபுராணச் சொற்பொழிவு நிகழ்த்திய மங்கையர்க்கரசி மாதர் சங்கச் சகோதரிகளைப் பாராட்டிப் பரிசளித்தலும் நடைபெற்றது. வித்வான் திரு க. கொன்றையாண்டி அவர்கள் கந்தரலங்கார வகுப்பை அன்று தொடங்கி வைத்தார்கள்,

◆ ◆ ◆ ◆

சங்ககிரி, ஸ்ரீ சோமேசுவரர் ஆலயத்தில் மார்கழி முதல் தேதி தொடங்கி தினமும் திருப்பாவை, திருவெம்பாவை, திருவாசகம், திருப்புகழ், தேவாரம், திருப்பள்ளி எழுச்சி பாராயணம் நடைபெற்று வருகின்றன.

◆ ◆ ◆ ◆


மதுரை, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் வடக்காடி வீதி, திருப்புகழ் மண்டபத்தில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வகையறு தேவஸ்தானம் சார்பில் திருப்பாவை திருவெம்பாவை ஆறங்க மாநாடு 21-12-59-ல் நடைபெற்றது. மாநாட்டை சென்னை அறநிலையத்துறை அமைச்சர் கனம் திரு எம். பக்தவத்சலம், பி.ஏ. பி.எல்., அவர்கள் துவக்கிவைத்துள்ளார்கள்.

◆ ◆ ◆ ◆

கும்பகோணம், ஸ்ரீ ஆதிகும்பேசுவர சுவாமி ஆலயத்தில், 27,28-12-59 தேதிகளில் கும்பகோணம் வட்டம் ஆலயங்களின் சார்பாக திருப்பாவை திருவெம்பாவை விழா சென்னை அறநிலைய ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'தொண்டன்' ஆசிரியர் மகாவித்வான் திரு ஆறுமுகநாவலர், திருவாசகமணி, திரு கே. எம். பாலசுப்ரமண்யம், திருச்சி திரு ஐயம்பெருமாள் கோனார் மற்றும் பல அறிஞர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

◆ ◆ ◆ ◆

சிதம்பரம், ஸ்ரீ சிவகாமசுந்தரி உடன்கூடிய ஸ்ரீமந் நடராஜமூர்த்தியின் ஆருத்ரா தரிசன திருவிழா 4-1-1960 முதல் 13-1-60 முடிய சிறப்பாக நடைபெறும்.



மருதமலைக் கோயில் முழுத்தோற்றம்

# — மருதமலை —

திரிபுரமதனை ஒருநொடி யதனி
லெரிசெய் தருளிய சிவன்வாழ்வே
சினமுடை யசுரர் மனமதுவெருவ
மயிலது முடுகி விடுவோனே
பருவரையதனை யுருவிட எறியும்
அறுமுக முடைய வடிவேலா
பசலையொ டணையு மிளமுலை மகளிர்
மதன்விடு பகழி தொடலாமோ
கரிதிருமுகமு மிடமுடை வயிறு
முடையவர் பிறகு வருவோனே
கனதன முடைய குறவர்த மகளை
கருணையொ டணையு மணிமார்பா
அரவணை துயிலு மரிதிரு மருக
அணிசெயு மருத மலையோனே
அடியவர் வினையு மமரர்கள் துயரும்
அறவரு ளுதவு பெருமாளே

—அருணகிரிநாதர்.

கொங்குநாட்டுக் குன்றுதோருடல்களில் மருதமலை என்பதொன்று. இது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ளது. கோயம்புத்தூருக்கு வடமேற்கே சுமார் ஏழுகல் தொலைவில் மேற்குத்தொடர்ச்சி மலைச்சரிவில் இருக்கிறது. கோயம்புத்தூரிலிருந்து நாலுகல் தூரத்திலிருக்கும் வடவழி என்ற ஊர் வரை பஸ் போகிறது. பின்னர் மூன்றுகல்

தொலைவு நடந்தோ அல்லது வண்டியிலோ போய் மலையடிவாரம் சேரலாம். மாதக் கார்த்திகைகளில் பஸ் மலையடிவாரம்வரையில் போகிறது.

மலையடிவாரத்திலிருந்து கோயிலிருக்கும் இடம் சுமார் 500 அடி உயரம்; ஒருகல் தொலைவு நடந்தேறிச் செல்லவேண்டும். அடிவாரத்தில் தான்தோன்றிப்பிள்ளையார் கோயில் இருக்கிறது. விநாயகர் சுயம்பு மூர்த்தி; மலைமேலுள்ள முருகன் கோயிலைப் பார்த்தவண்ணமிருக்கிறார். மலைமேல் செல்லப் படிக்கட்டுகள் இல்லை. குண்டுக் கற்களாலான இயற்கை மலைவழிப்பாதைதான். மலையேறும்போது நடுவில் இடும்பன்கோயில் இருக்கிறது. இடும்பனை வணங்கி மேலே சென்று மருதமலை முருகன் கோயிலை அடைகிறோம். கோயில் மலைச்சரிவில் பீடபூமியில் அமைந்திருக்கிறது. அழகிய சிறு கோயில். கோயிலுக்குப் பின்புறம் காடு நிறைந்த மலைமேலும் உயர்ந்து செல்கிறது.

ஆறுமுகக் கடவுள் மூலவர். மருதாசல மூர்த்தி என்பது அவர் திருநாமம். வள்ளி தெய்வயானை இல்லை. பிரகாரத்தில் வலது புறம் மார்க்கண்டேசுரர் (இலிங்கம்) சந்நிதியிருக்கிறது. இடதுபுறம் மரகதாம்பிகை சந்நிதியிருக்கிறது.

கோயிலுக்குத் தென்மேற்கே மலையின் கீழ் கொஞ்சதூரம் சென்றால் மருததீர்த்தம் என்ற தீர்த்தம் இருக்கிறது. மருதமரங்களிடையே உள்ள சுனை. அண்மையில் அம்மரங்கள் அழிந்துபோய்விட்டனவாம். மருத தீர்த்தத்திற்கும் சற்று கீழே சென்றால் பாம்பாட்டிச்சுனை இருக்கிறது. இத்தலத்தில் பாம்பாட்டிச்சித்தர் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவருடைய 'தெளிந்து தெளிந்து தெளிந்து ஆடுபாம்பே' என்று தொடங்கும் பாடல் பிரசித்தமானது. மலைக்கோயிலுக்குப் பின்புறம் மேலே கொஞ்சம் உயரத்தில் சரவணப்பொய்கை இருக்கிறது. இதைப் புற்றுக் கண்சுனை என்று வழங்குகின்றனர். இந்த சுனையிலிருந்து நீரைத் தேக்கிவைத்துக் கோயிலுக்கும் மலையடிவாரத்திற்கும் குழாய்மூலம் தண்ணீர் கொண்டுபோகப்படுகிறது. யாத்ரீகர்களுக்கு மிகவும் பயன்படுகிறது.


மலையில் கோயிலைச் சுற்றி மடங்கள் இருக்கின்றன. தேவர் படக்கம்பெனியின் உரிமையாளர் திரு. சின்னப்பதேவர் அண்மையில் ஒரு புதிய சத்திரம் கட்டியிருக்கிறார்; மலையடிவாரத்தில் மலையேறும் இடத்தில் அழகிய நாலுகால் மண்டபமும் அமைத்திருக்கிறார். கோயிலிருக்கும் சமநிலத்திற்குச் சற்று கீழே இருளர்பதி இருக்கிறது. மலைசாதியினர் வீடுகள் பத்து இருக்கின்றன. அவர்களுக்காக அரசினர் ஆரம்பப்பள்ளியொன்றும் கோயிலுக்கருகில் வைத்திருக்கின்றனர்.

இம்மலையில் தேவர்கள் தவம் செய்து முருகக்கடவுளை வழிபட்டனர் என்பர். இத்தலத்தைப்பற்றிய பல பிரபந்தங்கள் உண்டு. தலமான்மியமுமிருக்கிறது. கோவை சி. கு. நாராயணசாமி முதலியார் மருதமலைத் தல வரலாறு எழுதியுள்ளார். பேரூர்த் தல புராணத்தில் இரண்டு படலங்கள் இத்தலத்தைப் பற்றிப் பேசுகின்றன. திருமுருகன் பூண்டிக் கோயில் கல்வெட்டொன்றில் இத்தலத்தின் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி இப்பதி குறைந்தது 800 ஆண்டுகட்கு முற்பட்டது என்று கூறலாம்.

அருணாசலக் கவிராயர் இயற்றிய மருதாசலக்கடவுள் பிள்ளைத்தமிழ் என்ற நூலும், ஆசிரியர் பெயர் தெரியாத மருதாசலமூர்த்தி சதகம் என்ற நூலும். மருதாசலமாலை, மருதாசலபதி தாய்மகளேசல், மருதாசலபதி உயிர் வருக்கமாலை முதலியவையும் இத்தலத் திறைவனைப் பற்றியவையே. அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ் ஒன்றை மேலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

மருதமலை முருகன்கோயில் வெகு தொலைவு வரையில் நம் கண்களுக்குத் தெரிகிறது.


புலியூர், ஸ்ரீ இலட்சுமி நாராயண, ருக்மணி-சத்யபாமா உடன் கூடிய ஸ்ரீ வேணுகோபாலசுவாமி ஆலய ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா சம்ப்ரோக்ஷணம் 11-12-59-ல் நடைபெற்றது.



கங்கைகொண்ட சோழபுரம் சிற்பம்—சிவபெருமான் சண்டேசுவரருக்கு
கொன்றைமாலை அணிவித்தல்.



அழகர்கோயில் தந்தப் பதுமைகள்.



பேரூர் கோயிலும் திருக்குளமும்

# பேரூர்

தீராப் பிணிதீர சீவாத் துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே பாலாக் கிரிராச
பேராற் பெரியோனே பேரூர்ப் பெருமாளே

—அருணகிரிநாதர்.

கோவன் என்ற இருளர் தலைவன் ஒருவன் புதூர் ஒன்றை ஆக்கினன், அது கோவன் புத்தூர் என்பது; மருவி இப்போது கோயம்புத்தூர் என்ற பேரால் வழங்குகிறது. முன்னல் சிறு ஊராக இருந்து பின்னல் பெருநகராக ஆகிவிட்டது. அக்காலத்தில் பேரூராக இருந்தது மேலைச் சிதம்பரம் என்னும் திருப்பேரூர்தான். அது கோயம்புத்தூருக்கு மேற்கே நான்கு கல் தொலைவிலுள்ளது. அப்பதியில் ஒரு பெரிய சிவன் கோயில் இருக்கிறது. அதை அரசவனம் (பிப்பிலாரண்யம்), தட்சிணகைலாசம், பிறவா நெறி என்றும் நூல்கள் கூறுகின்றன. பேரூர் ஒரு தேவாரவைப் புத்தலம். அப்பர் சுந்தரர் இருவரும் இத்தலத்தைப்பற்றி தேவாரத்தில் குறித்திருக்கின்றனர்.

பேரூர்ப் பெருமான் கோயில் இயற்கை வளம் நிறைந்த இடத்தில் விளங்குகிறது. மேற்குமலைத் தொடரில் இதைச் சுற்றி வில் போல ஐந்து மலைகள் சூழ்ந்துள்ளன. அவை சிவமயமான வெள்ளிமலை, நீலிமலை என வழங்கும் உமாதேவியார்மலை, ஐயாசாமிமலை என்ற பிரமன்மலை, பெருமாள்முடி என்றழைக்கப்படும் திருமால்மலை, முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள மருதமலை என்பன. நொய்யலாறு கோயிலின் பக்கத்தில் ஓடுவது

இயற்கைக் காட்சியை மேலும் கவினுறச் செய்கிறது.

கோயில் வாயிலை இராஜகோபுரம் அழகு செய்கிறது;கிழக்கு நோக்கியமைந்திருக்கிறது. சுவாமி, அம்பாள் இவ்விரண்டு சந்நிதிகளும் கிழக்கு நோக்கியே யிருக்கின்றன. வெளிப் பிரகாரத்தில் தண்டபாணி, விசுவநாதர், விசாலாட்சி சந்நிதிகள் மேற்குப் பார்த்திருக் கின்றன. கனகசபை, கோயிலுக்குள்ளே நுழையும்போது வலதுகைப் புறமாக இருக் கிறது.

இத்தலத்திறைவன் சுயம்பமூர்த்தி, பட்டீசுவரர், பட்டிநாதர், கோஷ்டீசுவரர் என்ற திருநாமங்களை யுடையவர். ஒரு பசுவானது பட்டி (தொழு) இட்டு இறைவனுக்குப் பால் சுரந்தது. அதனுல் பட்டீசுவரர் என்ற பெயர் வரலாயிற்று. பசுவின் கொம்பு, குளம்பு பட்ட வடுக்கள் இன்றும் சிவலிங்கத் திருமேனியில் காணலாம். இறைவியின் திருப்பெயர்கள் பச்சைநாயகி, மரகதவல்லி என்பன. அம்பிகை சந்நிதிக்கு ஈசான திக் கில் பட்டித்திருமால் எழுந்தருளி யுள்ளார்; அப்பெருமானின் திருநாமம் இராஜகோபாலன் என்பது; அவர் சந்நிதிக்கு வலதுபுறம் மகா லட்சுமி சந்நிதியுமுண்டு. இந்த இரண்டு சந்நிதிகளுக்கும் தனி அர்ச்சகர் இருக்கின் றனர். கோயிலின் உள்வடக்குப் பிரகாரத் தில் சேரமான் பெருமாளும், சுந்தரரும் எழுந் தருளி யிருக்கின்றனர். சேரமான் காதில் குண்டலங்களுடன் அரசகோலத்தில் வெகு அழகாகக் காட்சியளிக்கிருர்.


எலும்புகல்லாதல், இறவாப்பனை, பிறவாப் புளி, செம்பு பொன்மயமாதல், சாணம் புழுக் காமல் இருத்தல், பறவைகள் வலது செவி மேல் வைத்து இறத்தல் முதலியவற்றை இத் தலத்திற்குத் தனிச்சிறப்புக்களாகக் கூறுகின் றனர். நொய்யலாற்றைக் காஞ்சிமாநதி யென் பர். இறந்தோரின் எலும்புகளை அவ்வாற் றில் இத்தல எல்லைக்குள் இட்டால் கொஞ்ச காலத்தில் கற்களாக மாறிவிடுகின்றன.

பட்டீசர் கோயிலுக்குமுன் தென்கிழக் காக ஒருமேடைமேல் பிறவாப்புளி இருக்கிறது. இதன் விதைகள் முளைப்பதில்லை. இறவாப் பனை என்ற மரம் வடகயிலாயம் என்ற கோயில் பிரகாரத்தில் இருக்கிறது. இந்த கோயிலுக்குள்ளேயே பிரமதீர்த்தம் இருக் கிறது. பைத்தியம், நாய்க்கடி இவை இத் தீர்த்தத்தில் ஆடுவோருக்குத் தீரும் என்பர். செப்புக்காசுகளை இதில்போட்டால் களிம்பு போய் பொன்மயமாக மாறுகிறது. இந்த தல எல்லைக்குள் பசுசாணம் (கோமயம்) புழுக்கிறதில்லை. பறவைகள் இறந்து விழுந் தால் அவைகளின் வலது காதுகள் மேல்பக்க மாகவே பூமியில் படாமல் இருக்கின்றன.

பட்டீசர் கோயிலுக்குள் சிருங்கதீர்த்தம் இருக்கிறது. அதை இப்போது சிங்கதீர்த் தம் என்று வழங்குகின்றனர். இன்னும் மாதையன் என்ற அமைச்சர் ஒருவர் கட்டிய பதினுறு கோணமுள்ள தெப்பக்குளமும் உண்டு. காஞ்சிமா நதியில் சோழன்துறை என்ற நீராடுமிடம் சிறப்புடையது. திருநீற்று மேடு என்ற இடத்திலிருந்து வெட்டி யெடுக் கப்படும் மண் வெண்மையாகத் திருநீறுபோல் இருக்கிறது.

இத்தலத்தில் இன்னும் சில கோயில்கள் உள்ளன. காஞ்சி நதிக்கு வடபுறம் வசிட்ட லிங்கம் கோயில் இருக்கிறது. மாதேசுவரர் கோயில், அழகிய சிற்றம்பலம், அரசம்பல வாணர் கோயில், பட்டிவிநாயகர் கோயில், வடகயிலாயம், தென்கயிலாயம், மூர்க்கம்மன் கோயில் இவைகள் உள்ளன. அரசம்பல வாணர் கோயிலை சின்ன கோயில் அல்லது காலவேசுவரம் என்பர். நடராஜப் பெரு மான் திருநடனம் செய்த பெரிய அரசமரம் இக்கோயிலிலுள்ளது. கோயில் வாயிலில் கோபுரத்துக்குப் பதிலாகப் பெரிய இடபம் மாடிமேல் இருக்கிறது. பட்டி விநாயகர் கோயிலின் கீழ்தான் நச்சுப்பொய்கை இருப் பதாகக் கூறுகின்றனர். சாந்தலிங்க அடிக ளாரின் சமாதிக் கோயிலும் மடமும் பட் டீசர் கோயிலுக்குக் கிழக்கே சற்று தொலை வில் இருக்கிறது.

இத்தலத்தைப்பற்றி யெழுந்த நூல்களும் பாடல்களும் எண்ணிறந்தன. அப்பர் க்ஷேத் திரக் கோவையில் "பேரூர் பிரமபுரம் பேரா வூரும்" என்றும், "அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற்றுள்ளார் ஆரூரார் பேரூர் அமுந்தூ ருள்ளார்" என்று கூறியிருக்கிருர். சுந்தரர் திருக்கச்சியனேகதங்காவதம் தேவாரத்தில் "குடகத்திலையம்பல வாணனின்ருடல்" என்று மேலைச்சிதம்பரம் என்பதைக் குறிப்



பேரூர் பட்டீசர் கோயில் உட்புறம்

பாக உணர்த்தியுள்ளார். இன்னும் அவரே தில்லையில் நடனத்தைக் கண்டபோது பேரூரை நினைக்கிருர். "மீகொங்கிலணி காஞ்சிவாய்ப் பேரூர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்ருமன்றே" என்கிருர். காஞ்சி நதியான நொய்யலாற்றையும் குறிக்கிருர். "பேரூர் உறைவாய்ப்பட்டிப் பெருமான் பிறவாநெறியானே" என்றும் ஊர்த்தொகையில் பாடியிருக்கிருர். மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் "அரசம்பலத்து நின்ருடும்பிரான்" என்று அரசம்பலத்தைக் கூறுகிருர். சேக்கிழார், ஏயர்கோன் கலிக்காம நாயனுர் புராணத்தில் "மீகொங்கிற்காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினுர்" என்று சொல்லியிருக்கிருர். அருணகிரிநாதர் இத்தலத்திற்கு இரண்டு திருப்புகழ்ப் பாடல்களை ஓதியுள்ளனர். ஒன்றில் "பட்டியாள்பவர் கொட்டியாடினர் பாரூராசூழ் பேரூராள்வாய் பெருமாளே" என்கிருர். கோவை-கந்தசாமி முதலியார் இயற்றிய திருப்பேரூர்ப் போற்றிக் கலிவெண்பா, கிள்ளைவிடு தூது, மும்மணிக்கோவை, பச்சைநாயகியார் ஊசல், மரகதவல்லியம்மன்மாலை, பச்சைநாயகியம்மை விருத்தம் என்ற நூல்களும், முத்துநைனுத்தை முதலியாரின பச்சைநாயகியம்மை பிள்ளைத் தமிழ், ஆசிரியர் பெயர் தெரியாத பேரூர்ப் பட்டி புராணம் என்கிற பிறவாநெறிப்புராணம், குட்டிக்கவுண்டர் பாடிய அரசம்பல விருத்தம், இராமசாமிக் கவிராயரின் திருப்பேரூர் வண்ணம், மகாவித்துவான் வாசுதேவ முதலியார் இயற்றிய கண்ணுடி விடுதூது, விளக்கு விடுதூது, பச்சைநாயகியம்மன் பந்தடி, சிதம்பர தாண்டவராய முதலியாரின் மரகதமஞ்சரி, ஆசிரியர்கள் பெயர் தெரியாத பட்டீசுவரக்கோவை, பேரூர்மாலை, மரகதமாலை, பச்சைநாயகி பேரில் வருகை, ஊஞ்சல், தென்பாங்கு, சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் (சம்பந்த சரணுலயத் தம்பிரான்) அவர்கள் இயற்றிய திருப்பேரூர்பட்டி விநாயகர் ஆனந்தக்களிப்பு, பலவகைக் கண்ணிகள், மு. அருணுசலக் கவிராயர் பாடிய திருப்பேரூர்

உலா, குடந்தை வித்துவான் சபாபதிப்பிள்ளை இயற்றிய திருப்பேரூர்க் கட்டளைக் கலித்துறையந்தாதி முதலிய பலநூல்கள் இப்பதியைப் பற்றிப் பாடப்பெற்றன. திருப்பேரூர்த் தலப் புராணத்தைத் திருவாவடுதுறையாதீனத்துக் கச்சியப்ப முனிவர் பாடி யிருக்கின்றார். இது ஒப்பற்ற தமிழ்ப் பேரிலக்கியமாகவும், சைவ சாத்திர நூலாகவும் புலவர்களால் போற்றப் பெறுகிறது. 2,220 பாடல்களையும், 36 படலங்களையும் தன்னகத்தே கொண்டது.

தென்னாட்டிலேயே அற்புதக் கற்சிற்பங்களுடைய கோயில்களில் பேரூர் ஒன்று. சிற்பிகளுக்குள் ஒரு வழக்குண்டு. "தாங்கள் செய்யும் சிற்பம், பேரூர், பெரியபாளையம், தாரமங்கலம், தாடிகொம்பு இவை தவிர மற்ற எல்லா வேலையும் செய்வ"தாக ஒப்பந்தம் செய்வார்களாம். பேரூரில் அழகிய சிற்பங்களைக் கனகசபையில் காணலாம். இதைக் கட்டியது மதுரை திருமலைநாயக்கர் சகோதரர் (மைத்துனர் என்றும் சொல்லப்படும்) அளகாத்திரி நாயக்கர். அவர் உருவம் ஒரு தூணில் காணப்படுகிறது. கனக சபை உள் மண்டபத்தில் நாலு தூண்கள் மேலே பெரிய மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. ஒரு தூணில் ஒரு உருவம், அடி புலிக்கால், இடை முதல் கழுத்துவரை பெண் பாகம், தலை யானைத்தலை தும்பிக்கையோடு கூடியது இருக்கிறது. பதஞ்சலி, வியாக்கிரபாதர் தில்லையில் கூத்தப்பிரானை வழிபட்டதுபோல் பிரமனும் திருமாலும் பட்டிமுனி, கோமுனிகளாக இங்கு வழி பட்டதாகக் கூறப்படுகிறது. அவர்களுடைய உருவச்சிலைகள் கனக சபையில் காணப்படுகின்றன. இன்னும் தூண்களில் இருக்கும் கஜசம்மாரமூர்த்தி, பிட்சாடனர், ஊர்த்துவ தாண்டவர், வீரபத்திரர், கணபதி, ஆறுமுகர், காளி இவர்களின் சிலைகள் மிகவும் அழகானவை. வீரபத்திரரின் விரிந்தசடைக் கற்றையில் தேள் செதுக்கப் பட்டிருக்கிறது. போர்வீரன் துப்பாக்கியுடனும், சித்தர் கையிலுள்ள பாம்பைக் குரங்கொன்று பற்றிக்கொண்டிருக்கும் உருவமும், வேடன்பெண்ணைத் தூக்கிச்செல்வதும், ஒரே உருவில் மீனும் பறவையும், இரணியவதம், அனுமான் சிங்கியைக் கிழித்தல் முதலிய உருவங்களும் காணப்படுகின்றன. ஒரே கல்லில் சங்கிலிகளும், சுற்றக் கூடிய வளையம் அமைந்த தாமரைமொட்டும் சிற்பியின் கைத்திறத்தின் சின்னங்களாக விளங்குகின்றன. இக்கனகசபையை யமைத்த சிற்பியின் மகன் ஒரு தூணில் தேரை இருப்பதாகச் சொன்னானாம். அத்தூணிலிருந்த குதிரை உருவத்தை உடைத்ததும் தேரை வெளிப்பட்டதாம். அக்குதிரையின் கால் குளம்பு, வால் இவைகள்தான் இப்போது காணப்படுகின்றன.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த பாண்டியன் மாறன் சடையன் என்ற மன்னன் பேரூரில் திருமாலுக்கு ஒரு கோயில் எடுத்தான் என்று செப்பேடு பின்வருமாறு கூறுகிறது:—

"காஞ்சிவாய்ப் பேரூர் புக்குத்
திருமாலுக் கமர்ந் துறையக்
குன்ற மன்னதோர் கோயிலாக்கியும்
ஆழிமுன்னீர் அகழாக
அகல்வானத் தகடுரிஞ்சும்
பாழி நீண்மதில் பரந்தோங்கும்
பகலவனும் அகலவோடும்"

அத்தகைய குன்ற மன்னதோர் கோயில் இப்போது இருந்த இடம் தெரியாமற்போயிற்று. இப்பாண்டிய மன்னனிடம் மதுரகவியாழ்வார் அமைச்சகராக இருந்தார் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவதால் திருமாலிடம் பேரன்பு பூண்டு அக்கோயிலைக் கட்டியிருக்க வேண்டும் என்று உணரலாம்.

பேரூர்ப் புராணத்தில் இப்பதியில் பள்ளுத் திருவிளையாடல் நடந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இறைவனும் இறைவியும் பள்ளனும் பள்ளத்தியாகவும் நாற்று நட்டார்களாம். அதை இப்போது பெருந்திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். நாற்று நடவு உற்சவம் என்று பெயர். ஆனி மாதம் நடக்கிறது. பள்ளர் (தேவேந்திர குலத்தினர்) இதை முன்னின்று நடத்துகிறார்கள். மார்கழித் திருவாதிரையிலும், பங்குனி உத்திரத்திலும் இத்தலத்தில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இக்கோயில் மிகவும் புராதனமானது. இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட உரோம நாணயங்கள் இங்கே அகப்பட்டன. கரிகாற்சோழன் கர்ப்பக் கிரகத்தைக் கட்டிய

தாகக் கூறப்படுகிறது. கொங்குசோழர் காலத்தில் அர்த்த மண்டபம், மகாமண்டபம் இவைகள் கட்டப்பட்டன. ஒய்சள, விஜய நகர மன்னர்கள் பல தானங்கள் வழங்கியுள் ளனர். நாயக்க மன்னர் காலத்தேதான் கனக சபை கட்டப்பட்டது என்பதை மேலே சொன்னோம். நடராஜப் பெருமான் (ஆடவல் லான்) திருவுருவம் மிகச்சிறந்த சிற்பஅமைதி வாய்ந்தது. இத்தலத்திலுள்ள காளி கோயிலி லிருந்து பார்த்தால் சபாநாயகரின் தூக்கிய திருவடி காணப்படும். இதைத் திவ்விய தரி சனம் என்பார்கள்.

பட்டீசுவரர் கோயிலிலும் அழகிய சிற் றம்பலம் கோயிலும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கொங்கு சோழர்களான விக்கிரமசோழன், கரிகாலசோழன், வீர சோழன், வீர ராஜேந்திர சோழன், ஒய்சள வீர வல்லாளன், கோமாறவர்மன் வீர பாண் டியன், கோனேரின்மை கொண்டான் முத லியவர் காலத்தவை அக்கல்லெழுத்துக்கள். அவைகளில் பெரும்பாலானவை நெல், நிலம், விளக்கு முதலியவைகள் தானம் செய்ததை அறிவிக்கின்றன. ஒரு கல்வெட்டில் தாம ரைக் குளத்துக்காகத் தானம் வழங்கியது கூறப்படுகிறது. பங்குனித் திருநாளில் திருப் பதிகம் (தேவாரம்) பாடுவார்க்கு நெல்அளித் ததை ஒரு கல்லெழுத்துத் தெரிவிக்கிறது. பட்டீசரின் பெயர் திருவான்பட்டியுடையார் என்று குறிக்கப்படுகிறது.

உரியபல வானவர்தம் மூரும் வேற்றூரும்
அரியயனூர் தம்மூரு மந்தோ—பெரியதென
ஒருரை யான்வேண்டே னென்னூர் புரம்பொடித்த
பேரூரை யானடைந்த பின்

—பேரூர் மும்மணிக்கோவை.

---

(45-ம் பக்கத் தொடர்ச்சி)


லூரியும் சீரிய முறையில் நடைபெற்று வரு கிறது. வண்ணச் சரபம்-திருப்புகழ் தண்ட பாணி சுவாமிகள் புலவர் புராணத்தில் சாந்த லிங்க சுவாமிகளின் வரலாற்றைக் கூறியிருக் கிறார்.

சாந்தலிங்க சாந்தலிங்க
சாந்தலிங்க தேசிகா
சாந்தவின்ப மேவவந்து
தண்ணருள் புரிந்துகா
மாந்தரின்ப மேவமுந்து
மறைகளாக மங்களின்
போந்தகொள்கை யோர்ந்துநன் கொ
ருந்தியார் புகன்றவா

—சாந்தலிங்கர்பத்து

திருவாஞ்சியம், வாஞ்சிநாதசுவாமி திருக்கோயிலில் வள்ளி, தெய்வயானை உடன் முருகப்பெருமான் கார்த்திகை ஞாயிறு பெருவிழா 3-12-59ல் ஆரம்பித்து 13-12-59 முடிய சிறப்பாக நடைபெற்றன. விழா நாட்களில் வேதபாராயணம், தேவார இன்னிசை, சமயச் சொற்பொழிவுகள், சிறப்பு நாதசுரக்கச்சேரிகள் முதலியன நடைபெற்றன.

திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் கோயிலில் கடந்த 25-10-59 அன்று கனம் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு 11-12-59 முடிய நடைபெற்ற திவ்யப் பிரபந்த இசைப்பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்ற அத்யாபகர்களுக்கு மதுரை இந்துசமய அறநிலையத் துறை துணை ஆணையாளர் திரு. ஏ. சக்கரை பி.ஏ., பி.எல்., அவர்கள் 11-12-59 அன்று அழகர் கோயிலில் நற்சான்றிதழ்கள் வழங்கினார்கள். ஷ விழாவிற்கு வந்திருந்தவர்களை நிர்வாக அதிகாரி திரு. சி. எஸ். தீனதயாளு பி.எஸ்ஸி. பி. எல்., வரவேற்றார். துணை ஆணையாளர் பேசுகையில் தேர்ச்சிபெற்ற அத்யாபகர்கள் கோயிலில் பிரபந்தத்தை இசையுடன் பாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அழகர் கோயிலை திருப்பதி போன்று செய்ய வேண்டுமென்றார். ஆசிரியர் டி. கே. பாலகிருஷ்ணய்யங்கார் அவர் களும் பேசினார்கள்.



திருவெள்ளறை புண்டரீகாட்சன் கோயில்—புஷ்கரிணி

# திருவெள்ளறை

இன்பமதனை யுயர்த்தா யிமையர்க்
கென்று மரியாய்
கும்பக் களிறட்ட கோவே கொடுங்சஞ்சன்
நெஞ்சினிற் கூற்றே
செம்பொன் மதிள்வெள் ளறையாய்
செல்வத்தினல் வளர்பிள்ளாய்
கம்பக் கபாலி காணங்கு கடிதோடிக்
காப்பிட வாராய்


—பெரியாழ்வார்.

ஆறினேடொரு நான்குடை நெடுமுடி
யரக்கன்றன் சிரமெல்லாம்
வேறுவேறுக வில்லது வளைத்தவனே
யெனக்கருள் புரியே

மாறில்சோதிய மரகதப் பாசடைத்
தாமரைமலர் வார்ந்த
தேறல்மாந்தி வண்டின் னிசைமுரல்
திருவெள்ளறை நின்ருனே

—திருமங்கையாழ்வார்.

'மஞ்சுலாமணி மாடங்கள் சூழ்திரு வெள்ளறை'யென்ற திவ்விய தேசம் ஆழ்வார்களால் மங்களசாசனம் செய்யப்பெற்ற திருப்பதிகளில் ஒன்று. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடி வட்டத்திலிருக்கிறது. திருச்சிராப்பள்ளியிலிருந்து துறையூர் செல்லும் நெடுஞ்சாலையில் 13-ஆவது கல்லில் இருக்கிறது. பஸ் வசதி உண்டு. சாலையோரமாகப்



திருவெள்ளறை—குகைக்கோயில்

பிரயாணிகள் விடுதியும், ஊருக்குள் சத்திரங்களும் இருக்கின்றன.

வெண்மையான பாறையாலாகிய ஒரு சிறு குன்றின்மேல் கோயில் இருப்பதால் திருவெள்ளறை என்ற பெயர் ஏற்பட்டது. சுவேதகிரி, சுவேதாத்திரி என்றும் வழங்கப்படுகிறது. கோயிலுக்கு மக்கள் உறையும் தெருவுள்பட ஐந்து பிரகாரங்கள் உண்டு. கோயிலுக்குள்ளே நுழைய முதலில் பதினெட்டுப் படிகளும், மேலே மொட்டை கோபுரமும் இருக்கின்றன. வடக்கு வழியாகத்தான் உள்ளே போகலாம். எதிரில் நான்காம் பிரகாரத்தின் அழகிய உயரமான மதில் சுவர்களைப் பார்க்கலாம். பழங்காலத்தில் கட்டப்பட்டதென்றாலும் புதிதாகவே காணப்படுகிறது. இதனால்தான் பெரியாழ்வார் “மஞ்சுதவழ் மணிமாட மதிள் திருவெள்ளறை”, “செம்பொன் மதிள் வெள்ளறை” என்று கூறினார் போலும். இந்தப் பிரகாரத்தின் வட கிழக்கு மூலையில் நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. [illegible]மண்டபம் என்று பெயர். வெளித் தென் பிரகாரத்தில் பெரிய பாறையில் குடையப்பட்ட மண்டபம் இருக்கிறது. இது பல்லவர் காலத்திய குடைவரை கோயில். மார்க்கண்டனும் சிபியும் இங்கு தவமிருந்ததாகக் கூறுகின்றனர். அதன் அண்மையிலேயே நீராழி மண்டபம் போன்ற நடு மண்டபத்துடன் வசந்த மண்டபம் இருக்கிறது. பாறையின் பக்கத்தில் பள்ளத்திலுள்ள குளத்தை க்ஷீர புஷ்கரிணி என்பர். கிழக்கு வெளிப் பிரகாரத்தில் மணவாள மாமுனிகள் சந்நிதியும், பூங்கிணறும் இருக்கின்றன.


மூன்றாவது பிரகாரத்துள் செல்ல அழகிய கோபுரவாயில் வடக்கு நோக்கியிருக்கிறது. கோபுரம் மூன்று நிலைகளுடையது. இப்பிரகாரத்தை ஆழ்வார் திருச் சுற்று என்பர். இதன் வட கிழக்கு மூலையில் நம்மாழ்வார் சந்நிதியும், ஊஞ்சல் மண்டபமும் இருக்கின்றன. கிழக்குப் பிரகாரத்தில் கருடன் சந்நிதி, பலிபீடம், கந்த புஷ்கரிணி இவைகள் இருக்கின்றன. இங்கிருந்து கிழக்கு நோக்கியுள்ள ஆரியபடாள் வாசல் வழியே உள்ளே

செல்கிறோம். உள்ளேயிருக்கும் பிரகாரத்தையும் தாண்டி நாழி கேட்டான் வாசல் வழியாகச் செல்கிறோம். எதிரில் மும்மூர்த்திகள், கோவர்த்தனதாரி இவர்களுடைய பெரிய சுதை உருவங்கள் அழகிய காட்சியளிக்கின்றன. எம்பெருமான் எழுந்தருளியுள்ள சுவேதகிரியின் மேலே செல்ல கர்ப்பக்கிரகத்தின் வடக்கிலும் தெற்கிலும் இரண்டு வாசல்கள் இருக்கின்றன. தட்சிணாயன வாசல் ஆடி முதல் மார்கழி முடியவும், உத்தராயண வாசல் தை முதல் ஆனி முடியவும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். பிரகாரத்திலிருந்து அயனவாசலையடைய அஷ்டாக்ஷரத்தை உணர்த்த எட்டுப்படிகளிருக்கின்றன. அதற்கு மேலே மலை செல்ல காயத்திரி கணக்கில் 24 படிகளிருக்கின்றன.

கர்ப்பக்கிரகத்தில் சுவேதகிரி நாதனை புண்டரீகாட்சப் பெருமாள் கிழக்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலமாய்க் காட்சியளிக்கிறார். இருபுறமும் சூரியசந்திரர் சாமரை வீசுகின்றனர். அனந்தன் ஆதிசேடன் இடது புறம் நின்று சேவிக்கின்றனர். பூமிப்பிராட்டி அமர்ந்திருக்கிறார். வலப்பக்கம் கருடன் நின்றுகொண்டும், மார்க்கண்டேயர் உட்கார்ந்துகொண்டும் இருக்கின்றனர். விமானத்தின் பெயர் விமலாகிருதி விமானம் என்பர். பெரிய திருவடி, சிபி, பூதேவி, மார்க்கண்டேயர் இவர்கட்குப் பிரத்தியட்சம்.

திருவெள்ளறைப் பிரானை சேவித்த பின்னர் மூன்றும் பிரகாரத்திலுள்ள தாயார் சந்நிதியையடையலாம். பங்கஜவல்லி, பங்கயச் செல்வி, சண்பகவல்லி என்பன நாச்சியாரின் திருநாமங்கள். இந்த சந்நிதி முன் மண்டபத்தில் தசாவதார எம்பெருமான்கள் எழுந்தருளியுள்ளனர். இப்பிரகாரத்தின் தென் மேற்கு மூலையில் சக்கரத்தாழ்வார் சந்நிதியிருக்கிறது.

இப்பதிக்குரியனவாகச் சொல்லப்படும் தீர்த்தங்கள் ஒன்பது. திவ்விய, கந்த, க்ஷீர புஷ்கரிணிகள் மூன்றும் கோயிலுக்குள்ளே இருக்கின்றன. கோயிலுக்குத் தெற்கே சக்கரதீர்த்தம், மணிகர்ணிகை தீர்த்தம், வராக தீர்த்தம், இவைகள் இருக்கின்றன. வடக்கே, துறையூர் போகும் நெடுஞ்சாலை அருகில் 'குசஹஸ்தி' (குசலவ) தீர்த்தம் இருக்கிறது. கிழக்கே பத்மதீர்த்தமும், மேற்கே உடையவர் தீர்த்தமும் இருக்கின்றன. வெளி வீதியின்



திருவெள்ளறை—குசஹத்தி தீர்த்தம்

தென்மேற்கு மூலையில் ஸ்வஸ்திக பந்தம்போல் கட்டப்பட்டுள்ள குளத்தில், ஒரு படிக்கட்டில் குளிப்பவர்களை மற்றொரு படிக்கட்டில் குளிப்பவர்கள் பார்க்க முடியாது. 'மாமியார் மருமகள் குளம்' என்று வேடிக்கையாக இதன் பெயர் கூறப்படுகிறது.

வேதாந்த தேசிகர் அருளிச் செய்தபடி "மூனுந்தவநெறி மூட்டிய நாதமுனி கழலே நாளும்" தொழுதவரும், நன்னெறியை மணக்கால் நம்பிக்கு எடுத்துரைத்தவருமான உய்யக்கொண்டார் அவதாரம் செய்யும் பேறு பெற்றது திருவெள்ளறைத் திருப்பதியே. உடையவ(இராமானுஜ)ருடைய சீடராய் நடாதூரம்மாளைத் தமது சீடராக்கிக்கொண்டு அவருக்கு ஸ்ரீ பாஷ்ய காலட்சேபம் சொல்லி அதிலுள்ள தத்துவங்களைப் போதித்து ஸ்ரீ பாஷ்ய காலட்சேபம் சொல்லுவதில் நடாதூரம்மாளுக்கு ஒப்பாரும்மிக்காரும் இல்லைஎன்ற புகழ் மாலையைச் சூட்டும்படி அருள்புரிந்த மகானுபாவரான எங்களாழ்வான் பிறப்பால் புகழ்பெற்று விளங்குமிடமும் இதுவே. உடையவர் இங்கு சில காலம் வதிந்ததின் காரணமாக அவர் பெயரால் கோயிலும் குளமும் எடுக்கப்பட்டிருக்கின்றன. உடையவர் கோயில், வடக்கு வீதியில் மொட்டைக்கோபுர வாயிலுக்கெதிரில் சற்று கிழக்கே கோபுரத்துடன் விளங்குகிறது.

இந்த திவ்விய தேசத்தைப் பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்திருக்கின்றனர். பெரியாழ்வார் பதினொரு பாசுரங்களை அருளியுள்ளார். எம்பெருமானைக் குழந்தை கண்ணனாகப் பாவித்து உள்ளமுருகிக் 'காப்பிடவாராய்' என்றழைக்கிறார். திருமங்கை மன்னன் இப்பதிக்கு பதின்மூன்று பாடல்களை ஓதியுள்ளார். அவைகளில் இயற்கைக் காட்சியின் எழிலை மிக்க சுவைபடச் சொல்லியிருக்கிறார். 'தெய்வ நாறுமொண் பொய்கைகள் சூழ்திரு வெள்ளறை', 'ஒங்கு பிண்டியின் செம்மலரேறி வண்டுழிதரமாவேறித், தீங்குயில் மிழற்றும் படப்பைத் திருவெள்ளறை' என்றெல்லாம் கூறுகிறார். 'மஞ்சுலாமணி மாடங்கள் சூழ்திரு வெள்ளறைமேய அஞ்சனம் புரையும் திருவுருவனை ஆதியை அமுதத்தை' என்று புண்டரீகாட்சனைப் புகழ்கின்றார்.

திருவெள்ளறைக் கோயிலில் குடவரையில் ஆறு தூண்கள், தாயார் சந்நிதி, கந்த புஷ்கரிணி படிகள், மூன்றும் பிரகாரம் வடபுறத் தென்புறச் சுவர்கள், உடையவர் கோயில் கர்ப்பக்கிரகச் சுவர்கள் இவைகளில் பல கல் வெட்டுக்கள் இருக்கின்றன.

குகைக் கோயிலின் தூண்களில் பல்லவ நந்திவர்மன், முதல் இராஜராஜ சோழன், சோழன் பரகேசரிவர்மன் இவர்கள் காலத்திய கல்லெழுத்துக்கள் உள்ளன. நித்திய பூசைக்கு வேண்டிய தானங்கள் வழங்கப்பட்டதை அறிவிக்கின்றன. ஒரு கல்வெட்டில் கண்ணன் ருக்மிணி சந்நிதியில் பூசை நடைபெறுவதற்கு நிபந்தம் ஏற்படுத்தியதைக் குறிக்கிறது. கண்ணன் ருக்மிணி கோயிலைக் குறிக்கும் பழைய கல்வெட்டு இதுதான் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஊரிலிருக்கும் நாலு மூலைக் கேணியின் படியில் உள்ள கல்வெட்டு அக்கிணறு தந்திவர்ம பல்லவனால் கட்டப்பட்டதென்பதைத் தெரிவிக்கிறது. அதே யிடத்திலிருக்கும் ஒய்சள அரசனான வீரராமநாத தேவன் காலத்திய மற்றொரு கல்வெட்டு அக்கிணறு பழுது பார்க்கப்பட்டதைக் குறிக்கிறது.


திருவெள்ளறை சுவேதகிரிநாதன் கோயிலுக்குக் கிழக்கே, நெடுஞ்சாலையிலுள்ள பிரயாணிகள் விடுதிக்கருகே பாறையில் குடைந்த வட சம்புநாதர் கோயில் இருக்கிறது. சுவாமி மேற்கு பார்த்தும், அம்பிகை கிழக்கேயும் எழுந்தருளியுள்ளனர். குடவரையுள் நடுவில் இலிங்கமும், தென்புறம் செந்தாமரைக் கண்ணன் (புண்டரீகாட்சப் பெருமாள்), விநாயகர், வடபுறம் சம்புமுனி, சம்புநாதேசுவரர் உருவங்களும் பாறையில் செதுக்கப்பட்டிருக்கின்றன. பைரவர், அப்பர், சண்டேசுவரர், தட்சிணாமூர்த்தி இவர்களுடைய உருவங்களும் இருக்கின்றன. அகிலாண்டேசுவரி, முருகன் இவர்களுடைய தனிச் சந்நிதிகள் கிழக்கு நோக்கியுள்ளன. குடவரைச் சுவர்களிலும், கோயிலினுள்ளேயிருக்கும் பாறைகளிலும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவைகளில் திரிபுவன முழுதுடைவளநாட்டு வடகரை நாட்டுத் திருவெள்ளறை என்று குறிக்கப்படுகிறது. இறைவன் பெயர் திருவானைக்காவுடையார், திருவானைக்கா பெருமானடிகள்,

திருவானைக்காவல் பட்டாரகர் என்றெல்லாம் கூறப்படுகிறது. நந்திவர்ம பல்லவன், இராஜராஜன், இராஜேந்திரன், விக்கிரமசோழன், பாண்டியன் மாறன் சடையன் இவர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் அங்குள்ளவை. தெள்ளாறெறிந்த, நந்திக் கலம்பகத் தலைவனை நந்திவர்மனே இங்குக் குறிக்கப்பெற்ற பல்லவ மன்னன். வேதம்வல்ல அந்தணர்க்கும், விளக்கெரிக்கவும், நித்தியபூசனைக்கும், நந்திவனத்திற்கும், நிலம் பொன் ஆடுகள் இவைகளைத் தானமாக வழங்கப்பட்டதை அறிவிக்கின்றன.

சுவேதகிரிநாதன் கோயிலும், வட சம்புநாதர் கோயிலும் மிகப் பழமையானவை என்பதை அங்குள்ள கல்வெட்டுக்களால் அறியலாம். "ஆதித்திரு வெள்ளறை அடுத்தது திருப்பைஞ்ஞீலி, சோதி திருவானைக்கா, சொல்லிக் கட்டியது ஸ்ரீரங்கம்" என்ற பழமொழியை ஆதாரமாக அங்குள்ளோர் பெருமையுடன் கூறிக்கொள்கின்றனர்.


கல்இருந்தான் தந்தை கமலத்தோன் அக்கமலத்
தில்இருந்தான் தந்தை அரங்கேசன் என்றே
—தொல்லைமறை
உள்அறையா நின்றமையால் உள்ளே கள்ளமின்றி
வெள்ளறையான் தாளே விரும்பு

—பிள்ளைப்பெருமாளையங்கார்.



திருவெள்ளறை—வடஜம்புநாதர்கோயில்

# திருவானைக்கா



திருவானைக்கா அம்பிகை சிலந்தி யானை வழிபாடு

எத்தாய ரெத்தந்தை யெச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடா மேவர் நல்லார்
செத்தால் வந்துதவுவா ரொருவ ரில்லைச்
சிறுவிறகாற் றீமுட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா வென்றன்
அத்தாவுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்
[செய்கேனே

—திருநாவுக்கரசர்.

சோழநாட்டில் பாடல்பெற்ற பதிகளைக் கணக்கிட்டோர் காவிரியாற்றுக்கு வடக்கேயுள்ளவை, தெற்கேயுள்ளவை என இருபிரிவுகளாகக் கூறியுள்ளனர். காவிரிக்கு வடகரையிலுள்ள தலங்களில் ஒன்று திருவானைக்கா. கொள்ளிடம், காவிரி இவ்வாற்றின் இடையே உள்ள அரங்கத்தில் அமைந்திருக்கிறது. திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே இரண்டு கல் தொலைவிலும், ஸ்ரீரங்கம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து கிழக்கே அரை கல் தூரத்திலும் இருக்கிறது.

இவ்வூரை இப்போது திருவானைக்காவல், திருவானைக் கோயில் என்று திரித்து வழங்குகின்றனர். சரியான பெயர் திருவானைக்கா என்பதே. ஜம்புகேசுவரம், சம்புவனம், வெண்ணாவல்வனம், ஜம்புவீச்சரம், கஜாரண்யம், இபவனம், தந்திவனம், ஞானபூமி, காவை, தந்திபுகாவாயில், அமுதேசுவரம் என்ற பெயர்களால் இத்தலத்தைப்பற்றிய நூல்கள் அழைக்கின்றன. வெண்ணாவல் மரத்தடியில் ஈசன் எழுந்தருளியிருப்பதால் ஜம்புகேசுவரம் சம்புவனம் முதலிய பெயர்களும், ஆனை வழிபட்டதால் ஆனைக்கா, கஜாரண்யம், இபவனம் முதலிய பெயர்களும், அம்பிகை இறைவனை வழிபட்டு ஞானோபதேசம் பெற்றதால் ஞானபூமி யென்

றும், யானைபுக முடியாத வாயிலையுடைய கோயிலானமையால் தந்திபுகாவாயில் என்றும், அமுதமாகிய நீரில் இறைவன் எழுந்தருளியிருக்கிறபடியால் அமுதேசுவரம் என்றும், சோலைகள் நிறைந்திருப்பதால் காவை என்றும் பெயர்வரக் காரணமாயின.

இத்தலம் சோலைகளுக்கு நடுவே இயற்கை எழில் நிறைந்த இடத்தில் அமைந்துள்ளது. நடுநாயகமாகக் கோயில் விளங்குகிறது. சுவாமி சந்நிதி மேற்கு முகமாகவும், அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியும் இருக்கின்றன. கோயில் 2500 அடி நீளமும், 1500 அடி அகலமும் உள்ளது. ஐந்து பிரகாரங்களையுடையது. நான்காவது, ஐந்தாவது பிரகாரங்களில் வீடுகள் இருக்கின்றன.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு ஜம்புகேசுவரர், வெண்ணாவலீசர், அமுதேசுவரர் முதலிய பல திருநாமங்களுண்டு. தேவியின் திருப்பெயர்கள் அகிலாண்டேசுவரி, அகிலாண்ட நாயகி, அகிலாண்டவல்லி என்பன; அழகும் அருளும் நிறைந்த அம்மையார்.

இப்பதியில் திருமஞ்சனக்காவேரி, கொள்ளிடம், பிரமதீர்த்தம், இந்திரதீர்த்தம், சம்புதீர்த்தம், இராமதீர்த்தம், ஸ்ரீமத் தீர்த்தம், அக்கினி தீர்த்தம், அகத்தியதீர்த்தம், சோமதீர்த்தம், சூரியதீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் இருக்கின்றன. வெண்ணாவல் மரமே தலவிருட்சம்; கர்ப்பக்கிரக விமானத்துக்கருகில் இருக்கிறது; மிகவும் பழைமையானது. இந்த தலம் பஞ்சபூதத் தலங்களில் அப்புத்தலம். மூலலிங்கத்தின் கீழே எப்போதும் நீர் சுரந்துகொண்டே இருக்கிறது. அப்பர் சுவாமிகள் "செழுநீர்த் திரள்" என்றே கூறுகிறார்.

இத்தலத்தின் அற்புத நிகழ்ச்சிகள் சிலவற்றை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். உயிர்கள் எல்லாவற்றிற்கும் இறைவன் அருள்புரிகிறான். நாரை, கரிக்குருவி முதலியவற்றிற்கு முத்தி கொடுத்தான். திருவானைக்காவில் தன்னை வழிபட்ட சிலந்திக்கும், யானைக்கும் தண்ணருள் சுரந்தான். நாவல் மரத்தினடியில் எழுந்தருளியுள்ள அமுதலிங்கத்தை யானையொன்று பூவும் நீரும் கொண்டுவந்து நாடோறும் வழிபட்டது. சிலந்தி மரத்திலுள்ள இலைகள் இறைவன்மீது விழாவண்ணம் வாய்நூலால் பந்தரிட்டது. இதை அநுசிதம் என்று எண்ணிய யானை சிலந்தி வலையை அழித்து வந்தது. அதைப் பொறுக்காத சிலந்தி ஒரு நாள் யானையின் துதிக்கை வழியே நுழைந்து மூளையைக் கடிக்க, யானை இறந்தது; உள்ளிருந்த சிலந்தியுமிறந்தது. இறைவனைப் பூசித்த யானை கயிலாயத்தில் கணநாதனாகும் பேறு பெற்றது. சிலந்தி சோழ மன்னனாகப் பிறந்தது.

"சிலந்தியு மானைக் காவிற்
றிருநிழற் பந்தர்செய்து
உலந்தவ ணிறந்த போதே
கோச்செங்க ணானுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ்
சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார்
குறுக்கை வீரட்டனாரே"

என்று அப்பர் கூறியுள்ளார்.

அந்த சோழ அரசனே கோச்செங்கட் சோழன் என்பான். அவனே திருவானைக்கா கோயிலை அமைத்தவன். பழம் பிறப்பின் நினைவால் யானை புகாதவண்ணம் கட்டினான். இதைப்போன்றே இன்னும் பல கோயில்களையும் எடுத்தான். அவைகளுக்கு மாடக்கோயில்கள் என்று பெயர். திருமங்கையாழ்வார் "எண்டோள் ஈசற்கு எழுபது மாடங்கள்" அமைத்தான் கோச்செங்கட்சோழன் என்று புகழ்ந்து கூறியுள்ளார்.

உமாதேவியார் பூசித்த தலங்களுள் இது ஒன்று. அதைக் குறிக்க நாடோறும் உச்சிக்கால பூசையில் பூசகர் பெண்ணுடையணிந்துகொண்டு போய் இறைவனுக்கு வழிபாடு செய்கிறார்.


இக்கோயிலிலுள்ள நான்காவது மதில் மிகவும் பெரியது. 35 அடி உயரமும், 6 அடி கனமும் உள்ளது. இதைக் கட்டும்போது சித்தர் ஒருவர் திருநீற்றையே கட்டுகிறவர்களுக்குக் கூலியாகக் கொடுத்ததாகவும், அது அவரவர் தகுதிக்கேற்பப் பொன்னாயிற்றென்றும் கூறப்படுகிறது. இறைவனே ஒரு சித்தராய் எழுந்தருளி அவ்வாறு

செய்தார் என்பர். "சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித் திருவானைக்காவுடைய செல்வா" என்று கூறியிருப்பது இதைக் குறிக்கும் போலும். மதிலைத் திருநீற்று மதில், திருநீறிட்டான் மதில் என்று வழங்குகின்றனர்.

உறையூர்ச் சோழன் ஒருவன் தன் தேவியோடு காவிரியில் நீராடினான். அவன் கழுத்திலணிந்திருந்த முத்துமாலை நழுவித் தண்ணீரில் போய்விட்டது. 'இது இறைவனுக்காகுக' என்று சொன்னான். அம்மாலை இறைவனுக்குத் திருமஞ்சனத் துக்காக காவிரியில் எடுக்கும் தண்ணீருடன் குடத்தில் புகுந்தது. அப்படி முகந்த நீரை ஜம்பு லிங்கத்திற்குத் திருமுழுக் காட்டுகையில் அதன் கழுத்தில் வீழ்ந்தது. அது தெரிந்த உறையூர்ச்சோழன் மனம் மகிழ்ந்து இறைவனை வழிபட்டான். "தாரகமாகிய பொன்னித் தண் துறை விழுத்தும், நீரின் நின்றடி போற்றி நின்மலா கொள்ளென ஆங்கே, ஆரம்கொண்ட எம் ஆனைக்காவுடை ஆதி" என்று சுந்தரரும், "ஆரநீரோடேந்தினானைக் காவுசேர்மினே" என்று சம்பந்தரும் இவ்வரலாற்றைத் தேவாரத்துள் கூறியிருக்கின்றனர்.

இக்கோயிலில் நாள் தோறும் நாலு கால பூசை நடைபெறுகிறது. சாதாரணமாகச் சிவன் கோயில்களுக்கு ஏற்பட்ட திருவிழாக்கள் இங்கும் நடைபெறுகின்றன. பிரம்மோற்சவம் மாசி மாதம் தொடங்கி பங்குனியோடு 40 நாட்கள் நடைபெறும். பங்குனிச் சித்திரை நட்சத்திரத்தன்று பஞ்சப் பிரகார உற்சவம் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. பெருமான் பெண்கோலம் பூண்டும், அம்பிகை ஆண் வேடம் கொண்டு ஐந்து பிரகாரங்களிலும் உலா வருதல் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். மார்கழித் திருவாதிரையில் நடராஜப் பெருமான் அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் பவனி வருவார். ஆடிப்பூரத்தில் கோயிலினுள் இருக்கும் சூரிய தீர்த்தத்தில் தெப்பத் திருவிழா நிகழும்.

திருவானைக்காவின் சிறப்புக்களைப் பல நூல்கள் விதந்தோதுகின்றன. சம்பந்தர் மூன்று பதிகங்கள் ஓதியுள்ளார். "வெண்ணாவலானாய்", "விறல்மிக்க கரிக்கருள் செய்தவனே", "ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர் ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதும் ஏதம் இல்லையே," "ஆனைக்காவில் அண்ணலை வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே", "கண்ணப்பர்க்கருள் செய்த கயிலை எங்கள் அண்ணல் ஆரூராதி யானைக்காவே" என்று கூறியிருக்கிறார். திருநாவுக்கரசரும் மூன்று பதிகங்கள் அருளியுள்ளார். அவர், "கழலடி தொழுது தூமலர் தூவி நின்று அழுமவர்க் கன்புன் ஆனைக்கா அண்ணலே," "திருவானைக்காவிலுறை சிவனே! ஞானம் ஆனாய் உன் பொற்பாதம் அடையப்பெற்றால் அல்ல கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே" என்று போற்றுகிறார். சுந்தரர் ஒரு பதிகம் பாடியிருக்கிறார். "அண்ணலாகிய ஆனைக்காவுடை ஆதியை நாளும் எண்ணுமாறு வல்லார்கள் எம்மையாளுடையாரே" என்று சொல்கிறார். மூவர் தேவாரத்திலும் "ஆனைக்கா அண்ணல்" என்று இறைவனைப் புகழ்ந்திருப்பது குறிக்



திருவானைக்கா கோயில் உள்மண்டபம்

கத்தக்கது. ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத் திரத்திருவெண்பாவில்,

குழீஇயிருந்த சுற்றங் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த வங்கங்க ளெல்லாம்-தழீஇயிருந்து
மென்னுனைக் காவா விதுதகா வென்னுமுன்
தென்னுனைக் காவடைநீ சென்று

என்று சொல்லியிருக்கிறார்.

அருணகிரிநாதர் பதினெட்டுத் திருப்புகழ்ப் பாடல்களால் இப்பதியைப் போற்றுகிறார். ஆனைக்கா, கயப்பதி, கரிவனம், காவை, வெணுவலடி, செம்புகேசுவரம் என்றெல்லாம் குறிக்கிறார். ஒரு பாடலில் "ஆழித் தேர் மறுகிற் பயில் மெய்த் திருநீறிட்டான் மதிள் சுற்றிய பொற்றிரு ஆனைக்கா" என்று மதிலைப்பற்றிக் கூறியிருக்கிறார். சேக்கிழார், கோச்செங்கட் சோழ நாயனார் புராணத்துள்ளும், ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணத்திலும் இத்தலத்தின் சிறப்புக்களைச் சொல்லியிருக்கிறார். தாயுமானவரும், காளமேகப்புலவரும் பாடல்கள் பாடியுள்ளனர். காளமேகப் புலவர் திருவானைக்கா உலா என்னும் அழகிய நூலையாத்துள்ளனர். கமலை ஞானப்பிரகாசர், தந்திவனப்புராணம் என்ற நூலை இயற்றியதாகக் கூறப்படுகிறது. கச்சியப்ப முனிவர், திருவானைக்கா தலபுராணம் என்ற அரிய நூலைச் செய்திருக்கிறார். 25 படலங்களும், 1454 பாடல்களையுமுடையது. திருவானைக்கா திருப்பணி மாலை என்ற நூல் 40 பாக்களையுடையது; ஆசிரியர் பெயர் தெரியவில்லை; கோயில் திருப்பணிச் செய்திகளைக் கூறுகிறது. திரிசிரபுரம்-மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் அகிலாண்ட நாயகி மாலை, அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ் இவைகளைப் பாடியிருக்கின்றார்கள். கே. வி. சுப்பையர் அவர்கள் 100 செய்யுட்களுடைய திருவானைக்காப்பதிற்றுப்பத்தந்தாதி என்ற நூலை இயற்றியுள்ளார்கள். ஆதிசங்கரர், 'ஸ்ரீ மாத்ருகா புஷ்பமாலா' என்ற நூலையும், ஸ்ரீதர வெங்கடேசுவர அய்யவாள், 'ஸ்ரீ ஜம்புநாதாஷ்டகம்" என்ற நூலையும் வடமொழியில் அருளியிருக்கின்றனர்.

பழைமையும் புதுமையும் கலந்த சிற்பங்கள் பலவற்றை இக்கோயிலில் காணலாம். "ஸ்ரீரங்கம் கோயிலைவிட திருவானைக்கா கோயில் சிற்ப அழகில் மிஞ்சிவிட்டது," என்று திருச்சிராப்பள்ளி மாவட்ட கஜட்டியர் கூறுகிறது. சந்நிதியில் ஐந்து கோபுரங்கள் ஒரே வரிசையில் இருப்பது மிக்க வனப்புடையதாகத் தோன்றுகிறது. ஊஞ்சல் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், வசந்த மண்டபம், நவராத்திரி மண்டபம், துவஜஸ்தம்ப மண்டபம், சோமாஸ்கந்தர் மண்டபம், நடராஜர் மண்டபம், மும்மூர்த்தி மண்டபம் முதலியவை சிற்பங்கள் நிறைந்தவை. ஆயிரக்கால் மண்டபத்தின் நடுமண்டபம் தேர்போல் அமைக்கப்பட்டிருக்கிறது. சூரியதீர்த்தத் திருக்குளத்தைச்சுற்றி 100 தூண்களைக்கொண்ட இரண்டடுக்கு வரிசை மண்டபம் அழகுசெய்கிறது. கோயில் மூல லிங்கத்தை நேரே ஒன்பது தொளைகளுடைய பலகணி வழியாய்த் தரிசிக்கலாம். உள்ளே போக தென்புறம் சிறு வாயில்தான்; யானைபுக முடியாத படி யமைத்தது. மூல மூர்த்தியின் விமானம் கல்லினாலேயே அமைக்கப்பட்டது. அம்மன் கோயில் சலவைக் கற்களால் கட்டப்பெற்றது. அந்த சந்நிதித் தூண் ஒன்றில் "ஏக பாததிரி மூர்த்தி" உருவமொன்று அழகிய காட்சியளிக்கிறது. இக்கோயிலில் ஜேஷ்டா தேவி (மூதேவி)க்கும் ஒரு சந்நிதியுண்டு.

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. மூன்றும் இராஜராஜ சோழன், முதல் குலோத்துங்கன், இராஜேந்திர சோழதேவன், குலசேகர பாண்டியன், சுந்தரபாண்டியன்,கண்ணனூரைத் தலை நகராகக்கொண்டிருந்த ஹொய்சள மன்னர்கள் வீர சோமேசுவரன், வீர ராமநாததேவன், காகதீயமன்னன் பிரதாப ருத்திரதேவன், சாளுவமன்னன் திருமலைராஜன் முதலிய பல மன்னர்கள் காலத்தில் கல்லெழுத்துக்கள் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. இந்த ஊர், தென்கரைப் பாண்டிகுலாசனிவள நாட்டில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இறைவன் பெயர், திருவானைக் காவுடையார், திருவானைக்கா எம்பெருமான், திருவானைக்காவுடைய நாயனார் என்று குறிக்கப்படுகிறார். நிலவிற்பனை, நிலதானம், கோயிலில் விளக்கெரிக்க ஆடுகள், பொன் முதலியவை வழங்கியது, திருவாபரணம் அளித்தது, நந்தவனத்திற்கு நிலம் விட்டது, நாற்பத்தெண்ணுயிரவர் மடம் கட்டியது முதலிய பல

# -: மீராபாய் :-

[திரு. T. S. பஞ்சாபகேச சர்மா]

'பிறவாமைவேண்டும்; மீண்டும் பிறப் புண்டேல், உன்னை என்றும் மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி, அறவா! நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க' என்று பிரார்த்தித்த காரைக்கா லம்மையார்க்கு இணையானவள் பக்தியிற் சிறந்த பதிவிரதை மீரா. அவள் ஆசையற்று, பாசம்விட்டு, பரமன் பூஜையிலீடுபட்டு, பர மாத்மாவுடன் கலந்த பெருமாட்டி, பாலபக் தர்களான பிரஹலாதன், துருவன், ஆண் டாள் முதலியவர்களைப்போல் அன்பின் வெற்றி பெற்றவள். ஆண்டாளும், மீராவும் மனிதனுக்கு மாலையிடுவதை மறுத்து, மாத வன் கோபிகா ஜீவனனை நாதனுக வரித்தவர் கள். ஆண்டாள் அதிர்ஷ்டசாலி. அவள் தகப்பனுர், அவள் இஷ்டத்திற்கு இணங்கி, அரங்கநாதனுக்கு மாலையிடும் பாக்கியத்தை ஏற்படுத்தினுர். ஆனுல் பக்தை மீராவுக்கு, ஆரம்பத்தில் அறிவிற்குறைந்த அன்னையிட மிருந்தும், இடையில், முட்டாளும், மூர்க் கனும், ஸந்தேஹியுமான கணவனிடமிருந் தும் கணக்கற்ற தடைகள் ஏற்பட்ட போதி லும், அவள் மாமனம், முகுந்தனையே நாடி, பிறப்பிறப்பற்ற பேரானந்த நிலையை யடை யப் பெருமுயற்சி கொண்டது.

## பிறப்பும் பாலப் பருவமும்

வட இந்தியாவிலுள்ள இராஜபுதனத் தில், ஓர் சிற்றரசனுக்குப் புதல்வியாக 1601-ல் பிறந்தாள் மீராபாய். பல வருஷம் தவமியற்றிப் பெற்ற அந்த குழந்தையை அவள் பெற்ருேர் பெரிதும் அன்புடன் வளர்த்து வந்தனர். விதி வசத்தால் தன் சிறு பிராயத்திலேயே தன் தந்தையை இழந்தாள் மீரா. ஆனுல் நற்குண நற்செய்கைகளமைந்த அவள் தாய் அவளை மிக்கப் பரிவுடன் வளர்த்து வந்தாள். ஒருநாள் இராஜ வீதியில் விவாஹ ஊர்வலம் வர அதைக்கண்ட மீரா, 'நான் யாருக்கு மாலையிடுவது?' என்று தாயைக்கேட்க, வாசலில் வந்த பொம்மைவிற் பவனிடம், கிரிதர கோபாலனின் பொம்மை யொன்றை வாங்கிக்கொடுத்து, 'இவரே உன் புருஷன், இவருக்கு மாலையிடு' என்ருள். தாயார் விளையாட்டாகச் சொன்னதைக் கருத் திற்கொண்டு, மீரா, கண்ணனையே கணவ னுக வரித்து, அவனிடம் அளவற்ற அன்பு செலுத்த ஆரம்பித்தாள். வரவர மற்ற குழந் தைகளுடன் கூடி விளையாடுவதை விட் டொழிந்தாள். தன்னந்தனியே யிருந்து, வேணுகோபால விக்ரஹத்தை மடியில் வைத்

---

செய்திகளை அவைகள் தெரிவிக்கின்றன. இதில் வரும் சாளுவமன்னன் திருமலைராஜன் தான் காளமேகப்புலவரை ஆதரித்தவன். சிலந்திமைச் சோழனுக்கிய இறைவன் பேரால் திருவீதி யமைக்கப்பட்டதை ஒரு கல்வெட்டு குறிக்கிறது.

இத்தலத்தில் இராஜராஜேசுவரர் கோயில், நீலவிண்டீசுவரர் கோயில், சங்க ரேசுவரர் கோயில், பிடாரிகோயில், வீரபத் திரர் கோயில், சுப்பிரமணியர் கோயில் முத லியவைகள் உள்ளன. கோயிலுக்குள் மும் மூர்த்தி, காசி விசுவநாதர், மீனுட்சி சுந்த ரேசுவரர், விநாயகர், சனீசுவரர், பால தண்டபாணி முதலிய சந்நிதிகள் இருக் கின்றன.

வானைக்காவில் வெண்மதி
மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித்
தேவிபாக மாயினுன்
ஆனைக்காவில் அண்ணலை
அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க்
கேதும் ஏதம் இல்லையே

—திருஞானசம்பந்தர்.

துப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டி மகிழ்வாள். வயது வளர வளர, தன் குலதெய்வம் கோபாலகிருஷ்ணனின் சரித்திரங்களைக்கேட்பாள். கண்ணன் லீலைகளை விளக்கும் கீர்த்தனங்களை மனப்பாடம் செய்து தன்னை மறந்து பாடுவாள். பாட்டிற்குகந்தபடி ஆடுவாள். கிருஷ்ணஜயந்தி முதலிய உத்ஸவங்களில், தன் அன்னையின் பூஜைக்கு வேண்டியவற்றைச் செய்ய மிக்க துரிதமாக அங்குமிங்கும் ஓடுவாள். பௌராணிகர்கள், பாகவதம் பத்தாம் ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் கிருஷ்ண லீலை'களைப்பற்றி பிரவசனம் செய்யும்பொழுது அவன் லீலைகளில் மனம் லயித்து, ஆயர்பாடிச் சிறுமிகளில் தானொருத்தியென நினைப்பாள். தன் தோழிகளுடன் நந்தவனம் சென்று, தன் கிரிதர கோபால விக்ரஹத்தை மேடைமேல் வைத்துப் பூஜை செய்து, தான் கேட்ட கிருஷ்ண கதைகளை அவர்களுக்குச் சொல்லி, கிருஷ்ண பஜனையில் அவர்களுடன் ஆடிப்பாடுவாள். இதைக் கண்ட அவள் தாய், மிக்க ஆனந்தங் கொண்டாள்.

## மங்கைப் பருவமும் மணமும்

இவ்வாறு மீராவின் பாலப்பருவம் கடந்து மங்கைப் பருவம் மலரத் தொடங்கிற்று. அவள் அழகும், அடக்கமும், அன்பும், இன்பம் ததும்பும் இனிய மொழிகளும் எவரையும் அவள் வசமாக்கின. அவள் அன்னை அவள் கலியாணத்தைப்பற்றின கவலையிலாழ்ந்தாள். மீரா காரணத்தையறிந்து, கோபாலகிருஷ்ணனையே தான் வரித்ததாகவும், அவனை மணந்ததாகத்தான் கண்ட கனவைப் பின் வருமாறு கூறுகிறாள்.

"அன்னையே தாயே அழகன் ஜகதீசன்
என்னைமணக்க இரவில் கனுக்கண்டேன்
தோரணம் நாட்டித் துழாமாலை தொங்கவிட்டு
பூரணகும்பம் பொலிவாக முன்வைத்து
செய்தற்கரிதாம் அத்திருமணப் பந்தரின்கீழ்
வையமளந்து வளர்ந்த வடிவழகன்
ஐம்பத் தறுகோடி ஆட்கள் நடுவேநான்
முன்செய் தவப்பயனுல் முகுந்தன் கிரிதரனே
அன்பு நிறைந்திடுமென் அகமுடையானுக
[வந்தான்
இன்ப மணமும் நேற்றிரவே யானதம்மா
துன்பம் ஒழிந்ததம்மா சுகமும் பிறந்ததம்மா."

இதைக் கேட்டு இராணி திகிலடைந்தாள். மகள் மதியிழந்ததாகக் கருதினுள். விளையாட்டு வினையானதாக நினைத்தாள். பலபலவென்று கண்ணீர் உகுத்தாள். மீரா ஒன்றும் புரியாமல் பிரமித்து நின்றுள். பிறகு அவள் தாய் அவள் கிருஷ்ண விக்ரஹத்தைக் கணவனுகக் கருதுவது தவறென்றும், அவ்விதம் செய்தால், உலகத்தார் ஏளனம் செய்து, பல அவதூறுகள் அவளுக்கு ஏற்படுமென்றும் பற்பல புத்திமதிகள் கூறினுள்.

இவ்வாறு சின்னுட்கள் செல்ல, மீரா செய்வது யாதெனத் தோன்ருது, தன் பூஜையறைக்குச் சென்று, கிரிதர கோபாலனிடம், தன் குறைகளை முறையிட்டாள். ஒரு சமயம் தாய் சொல்வதுபோல், உலக இயல்புக்கு ஒத்து ஓர் ஆண் மகனையடைந்து, அவனையன்புடன் நேசித்து, இல்வாழ்க்கை நடத்துவதுதான் சிறந்ததெனத் தோன்றும். மற்றோர் சமயம், மங்களரூபன், மன்மத மன்மதன், கமலக்கண்ணன், கார்மேகவண்ணனிடம் தனக்குற்றகாதலை எவ்வாறு மறப்பது என்று எண்ணுவாள். அவன் முகாரவிந்தத்தில் மயங்கியிருக்கும் மனத்தை எவ்விதம் மானிடரிடம் திருப்புவது. "பெய்யுமா முகில்போல் வண்ணு உந்தன் பேச்சும் செய்கையும் எங்களை, மையல் ஏற்றி மயக்க உன் முகம் மாய மந்திரம்தான் கொலோ?' என்று கதறுகிருள். தான் மானிடனுக்கு மாலையிடுவதை, சூடிக் கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளைப்போல,

"வானிடை வாழும் அவ்வானவர்க்கு
மறைவர் வேள்வியில் வகுத்தஅவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து,
கடப்பதும், மோப்பதும், செய்வதொப்ப

என்கிருள்.

மீராவின் நிலை இவ்வாறிருக்க, அவள் தாய், தன் மகளுக்கேற்ற மணுளனைத் தேட பல தேசங்களுக்கு ஆட்களை யனுப்பினுள். ஆனுல் அவள் முயற்சி பயன்பெறும் காலம் வரவில்லை. கொஞ்சநாட் செல்ல கடவுளின் கிருபையால், இராஜபுதனத்தில் வெற்றி வீரனென்று கீர்த்திப்புகழ் நாட்டி ஜயகோபுரம் கட்டின மீவார் இராஜ்யாதிபதி கும்பாஜி ராணு, தான் பல மனைவிகளை மணந்திருந்தும், தன்னைப்போல் கிருஷ்ணபக்தி நிறைந்த மனைவி ஒருவளைப்பெற விரும்பினுன். மீரா

வின் லாவண்யம், நற்பண்புகள், கிருஷ்ண பிரேமையில் அதிசய ஈடுபாடு இவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டு, மீராவுக்குச் சம்மத மானால், அவளைத்தான் மணக்கப்பேரவாக் கொண்டிருப்பதாகச் செய்தியனுப்பினன். மீராவின் தாய் இதைக் கேட்டாள். ஆனந்த வாரிதியில் மூழ்கினள்; உடனே கலியாணத் திற்கு வேண்டிய ஏற்பாடுகளில் ஈடுபட் டாள்.

ஆனால் பக்தை மீரா மிகப் பரிதாப நிலை யடைந்தாள். கண்ணன் தன்னை ஒரு நாளும் கைவிடமாட்டானென எண்ணினள். இவ் வுலக விஷயங்களில் அவளுக்குச் சிந்தை யில்லை. தாய் எவ்வளவு புத்தி சொல்லியும், கண்ணனைத் தவிர வேறெவரையும் கனவி லும் நினைக்க முடியாதென்றும், தன் பதி விரதா தர்மத்திற்குப் பங்கம் வருமென்றும் பகர்ந்தாள். இதைக் கேட்ட அவள் அன்னை கோபங்கொண்டாள். குலத்தைக் கெடுக்க வந்த கோடரி என்றும், அவள் உயிருட னிருப்பதைவிட இறப்பதே மேலென விளம் பினள். மானமழிந்து, உயிர் பெற்றிருப்பதை விட, உயிரைவிடத் தயாராயிருப்பதாகத் தாயிடம் சொன்னாள். அவள் அறிவற்ற அன்னை அவளுக்கு விஷம் கொடுக்கத் தீர்மா னித்தாள். காலகூட விஷமடங்கிய ஒரு கிண் ணம் மீராவிடம் அனுப்பப்பட்டது. உடனே மீரா தன் குலதெய்வம் கிருஷ்ணனை மனதில் பிரார்த்தித்தாள். 'கண்ணா எல்லாம் உன் திருவுள்ளம்' என்று சற்றும் யோசியாமல் விஷபானம் செய்தாள். மயக்கமுற்று மஞ்சத் தில் சாய்ந்தாள்.

அவள் இறந்தாள் என்ற செய்தி அரண் மனையில் பரவிற்று. தாய் ஓடி வந்து கோ வென்று அலறி மீராவைக் கட்டிக்கொண் டாள். உடனே மீரா உறக்கத்தை விட்டு எழுந்தவள்போல் கண் விழித்து "அம்மா! கண்ணனிடம் என்னுயிரை அர்ப்பணம் செய்தேன். இதோ பார் அவன் உருவம் அக் கடு விஷத்தால் கருத்திருக்கிறது. கருணாஸாக ரன், பக்த பரிபாலகன், எனக்கு மற்றோர் உயிர் தந்திருக்கிறான். இனி எனக்கு இத் தேகத்தையளித்த உனக்காக, உன்னிஷ்டப் படியே கும்பாஜிராணாவை மணக்கிறேன். ஆயர்பாடி ஆய்ச்சியரைப்போல் இவ்வுலகக் கட்டுப்பாட்டுக்கு உட்படுகிறேன். கண்ணனை எப்பொழுதும் கருத்திற்கொண்டு கோவிந்த னின் திருவுள்ளப்படி நடக்கிறேன். அவன் என்னைக் கைவிடான்.' என்றாள். மீராவின் தாய்க்கு தெய்வாம்சமான அவளிடம் அப் பொழுது ஓர் பீதி ஏற்பட்டது.

கும்பாஜியும், தான் மணக்க நினைத்த மங்கை மீராவின் மஹிமையைப்பற்றிக் கேட் டான். குதூஹலம் கொண்டான். மீராவும் கம்ஸ மர்த்தனனை கருத்திற்கொண்டு, இம்மை மறுமைப் பயனையடைவதே தனக் குத் தகுதியென்றும் பெற்ற தாய்க்கும் அத னால் திருப்தி விளையுமென்றும் கருதினள்.

முகூர்த்த நாளுக்கு முதல் நாளே தன் பந்துஜன பரிவாரங்களுடன் கும்பாஜிராணா விவாஹ ஸந்நத்தனாய் வந்தான். இராஜபுத்திர முறைப்படி, கும்பாஜிக்கும் மீராவுக்கும் திருமணம் நிறைவேறியது. தங்கச் சிவிகை யில், தன் அருமை கிரிதர விக்ரஹத்தை வைத்தாள். திவ்ய அலங்காரத்துடன் கிருஷ் ணன் முன் தூக்கிச் செல்லப்பட மீராவும் அவள் மணாளனும் 'கோபிகா ஜீவன ஸ்மர ணம். கோவிந்தா! கோவிந்தா!!' என்ற நாம ஸங்கீர்த்தனத்துடன் பின் சென்றனர். சித் தூர் சேர்ந்தனர். அரண்மனையில் அந்தப் புரத்திற்கடுத்து, மீராவின் விருப்பத்திற் கிணங்க கிருஷ்ணனுக்கு ஓர் கோயிலமைத் தான் கும்பாஜிராணா.

## இல்லற வாழ்வும் இறைவன் பணியும்

தினமும் ஸதிபதிகளிருவரும் அதிக நேரத்தை அக்கோயிலிலே கழித்தனர். எப் போதும் இருவரும் சேர்ந்து கிரிதரனைப்பூஜிப் பதும், உருக்கமாய் அவர்களியற்றிய கீர்த் தனைகளைப் பாடுவதுமாயிருந்தார்கள். மற்ற பக்த ஜனங்களுடன் கிருஷ்ண பஜனையிலீடு படுவார்கள். இதைக் கண்டு அவ்வூர் ஜனங்க ளனைவரும் சந்தோஷங்கொண்டு, தாங்களும் அவர்களுடன் சேர்ந்துகொண்டனர். அக் கோயிலின் மஹிமை பாரத நாடெங்கும் பரவலாயிற்று. பல தேசங்களிலிருந்தும் கிரி தரனைத் தரிசிக்க கோஸாயிகளும், சந்நியாசி களும் வந்தனர். வந்த பக்தர்களுக்கு உண வும், உடையும், உறைவிடமும் வரையில் லாது வழங்கினான் கும்பாஜி.

'மீரா தன் வாழ்நாளை, தன் அரண்மனை உபவனத்தில், ஆனந்தம் பெருகத் தன் கண

வனுடன் கழித்தாள். எங்கு நோக்கினும் கிருஷ்ண லீலைகளை விளக்கும் சலவைச் சிலைகள். அல்லி, அரவிந்தம் பூத்துக்குலுங்கும் பொய்கையொன்றில், ஐந்து தலை நாகத்தின் மீது ஒருகால் ஊன்றி, மற்றொருகால் உயர்த்திக் கைகளை வீசிப் புன்முறுவலுடன் நர்த்தனம் செய்யும் கண்ணனின் காளிங்கநர்த்தன அவஸரம். இயற்கையன்புடன் எவரையும் தன் வேணுகானத்தால் வசீகரிக்கும் வசுதேவ விக்ரஹம் மற்றோர்புறம். அந்த நந்தவனம் பிருந்தாவனமோ எனப் பொலிந்தது. ஒருநாள் தன் மணாளனிடம் தனக்கு திவ்ய ஸ்தலங்களை தரிசிக்க வேண்டுமென்ற அவாவைத் தெரிவித்து, அவனும் தன்னுடன் வர வேண்டுமென்று யாசிக்க அவனும் உடனே இணங்கி, வட இந்தியாவிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களைப் பார்த்துவிட்டுத் திரும்பினர். இதனால் நாளுக்குநாள், மீராவின் பக்தி பெருகலாயிற்று. முன்னிலுமதிகமாய் பஜனையிலும், அடியார் பணிவிடைகளிலும் ஈடுபட்டாள். அவர்கள் தேசமும் சுபிக்ஷமாயிருந்தது.

## கண்ணனின் கபட நாடகம்

இவ்விதம் மீரா இல்லற வாழ்க்கையை இறைவன் பணியிலீடுபட்டு, நடத்தி வருங்கால், 'நல்ல காரியங்களுக்குப் பல தடைகள்' ஏற்படும் என்ற பழமொழிக்கிணங்க, அவள் சக்களத்திகள் அரசன் அவளிடம் காட்டும் அளவற்ற அன்பில் பொறாமைகொண்டு அவளைத் தூஷிக்கத்தலைப்பட்டனர். கிருஷ்ண பக்தி என்ற வியாஜத்தால், சாமான்ய ஜனங்களுடன், வெட்கம் மானத்தைத் துறந்து பஜனை செய்வதும், கோஸாயிகளுடன் குதிப்பதும், இராஜபுத்ர குலத்துக்கே, மேலும் அரசபட்ட மகிஷிக்கே அவமானம் என்று அவதூறு கூறினார்கள். இத்தீயோரின் எண்ணம் பலிக்குங் காலம் நெருங்கியது போலும்.

ஆண்டுக்கு ஒரு முறை வரும் கிருஷ்ண ஜயந்தி உத்ஸவம், நகரம் முழுவதும், முக்கியமாக ஆலயங்களிலெல்லாம் ஏக அலங்காரம். எங்கும் கோவிந்தநாம சங்கீர்த்தனம். அரண்மனை அந்தப்புரத்திலுள்ள கிரிதர கோபாலனின் சந்நிதியைப்பற்றிக் கேட்பானேன். 'ராதா ரமணனுக்கு ஜேய்!' என்ற கோஷத்துடன்,

"உண்மையன்பை உடையவரே
உலகை யளந்த பெருமானை
அண்மை யாகக் கண்டிடுவர்
அல்லார் காணார் காணாரே"

என்று குதித்துக் கூத்தாடுகிறாள் மீரா. பூஜை வெகு விமரிசையாக நடைபெறுகிறது. பூஜை முடிந்தவுடன், பயபக்தியுடன் ஒதுங்கி நின்ற இரு கோசாயிகளைக் கண்டாள். வழக்கம்போல் அப்பெரியோர்களின் அனுக்ரகத்தைப்பெற அவர்களிடம் சென்றனள். மன அமைதியும், வசீகரத் தோற்றமுமுள்ள அவ்விருவருள் ஒருவர் மீராவிடம் ஓர் உயர்ந்த முத்துமாலையைக் கொடுத்து, கிருஷ்ணனுக்கு அர்ப்பணம் செய்யும்படி சொல்லிச் சென்றார்.

இந்த முத்து மாலையால் மீரா மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். இந்த சம்பவம் அவளுக்கு ஆராத்துயரத்தையளிக்கப் போகிறதென்பதை அவள் கனவிலும் கருதவில்லை. அடுத்த நாள் அத்தாணி மண்டபத்தில் அரசாங்க விஷயங்களை விசாரித்துவிட்டுச் சபை கலைந்தவுடன், கும்பாஜிராணாவின் சேனாபதி அவனிடம் தனிமையாகப் பேச ஒதுங்கி நிற்பதைக் கண்டான். விசேஷத்தை விளம்பும்படி வினவ, சேனாபதி, 'அரசே, நம் நாட்டுக்கும், நம் குலத்திற்கும், தங்கள் மேன்மைக்கும் மானக்கேடான சம்பவம் நேற்று நடந்தது. அன்னியர், அயல் நாட்டார், புறமதத்தினர் நம் அந்தப்புரக் கோயிலுக்குள் நுழைந்து, அந்தப்புரப் பெண்களைக் கண்ணெடுத்துப் பார்த்து, நம் மீரா தேவியாரையணுகி, அவரிடம் ஓர் முத்து மாலையைத் தனிமையிற் கொடுத்துவிட்டுச் சென்றனர். பிறகு இவர்கள் யாரென்று, நம் ஒற்றர்களைக் கொண்டு விசாரிக்கச் செய்ததில், அவர்கள் டில்லி பாதுஷா அக்பர் சக்கரவர்த்தியும் அவன் மந்திரி அபுல்பாஸலுமென்றும், போகும்பொழுது அந்த அக்பர், "இவ்வளவு எழிலும், குணமும் நிறைந்த மாதுசிரோமணியின் சிறப்பை கும்பாஜி அறியமாட்டான், இவள் நம் போன்ற சக்கரவர்த்திக்கு பட்டமகிஷியாக விருக்கத் தகுந்தவள்" என்றானாம். "என்ன மானக்கேடான சம்பவம். ஊரிலுள்ளோர் இதைக்கேட்டு எள்ளி நகையாடி, மீராவின் நடத்தையைப்பற்றிக் குறைகூறுகின்றனர்" என்றான். இடியோசைகேட்ட

நாகம்போல் நடுநடுங்கினான் கும்பாஜி, சேனாபதி சென்றதும், "ஆ! மீரா! உன்னைப் பக்தியிற் சிறந்த பதிவிரதை என்றல்லவோ எண்ணி ஏமாந்தேன். அடி நயவஞ்சகி! உன் போலி வேடமும், மனப்பான்மையும் இப்பொழுதே யறிந்தேன், என் குலப்பெருமை யிழந்தேன்' என்று கதறிக் கட்டிலில் சாய்ந்தான்; மூர்ச்சையுற்றான்.

கிருஷ்ணன் கோயிலுக்குச் சென்று, கோஸாயி கொடுத்த முத்து மாலையை முகுந்தனுக்குச் சாத்தி, பிரசாதங்களுடன், பிராணநாதனைக் கண்டு வணங்க வந்தாள் வழக்கம்போல் மீரா. அவன் பக்கம் நின்றாள். அவன் கவனியாதுபோலிருந்தான், 'நாதா!' என அவள் அழைக்க, கோபத்தினால் அவளை எரித்துவிடுபவன்போல் பார்த்தான். 'பக்தை வேடம் போட்டு, பதியை வஞ்சித்த பாதகி உன் நாதன் அக்பர் டில்லியிலிருக்கிறான். அவன் இரகசியமாக உனக்கு நேற்றுக் கொடுத்த முத்துமாலை எங்கே உன் கழுத்திற் காணோம்?' என்றான். அதற்கு மீரா, 'இதென்ன விந்தை! என்னை இவ்வபாண்டமான பழி. கோஸாயி ஒருவர் கோபாலனுக்கு சமர்ப்பித்தார் அம் முத்துமாலையை. இதில் என்ன விபரீதம்?' என்று பதிலுரைத்தாள். பிறகு சேனாபதி உரைத்தவற்றை விளக்கமாகக் கூறி, அவளை இனி கிருஷ்ண பூஜை செய்யக் கூடாதென்றும், தோட்டத்திலேயே சிறை யிருக்க வேண்டுமென்றும் உத்திரவிட்டான். இதைக் கேட்ட மீரா மூர்ச்சையடைந்தாள், சற்றுநேரம் கழித்து மயக்கம் தெளிந்து, பக்தவத்ஸலா! பாண்டுரங்கா! புருஷோத்தமா! உம்மிடம் அன்பு செலுத்துவதில் ஏதோ அடியாள் தவறிழைத்திருக்கிறேன், என்னைப் பரீட்சிப்பதற்கே இத்தண்டனை விதித்திருக்கிறாய். கண்ணா! கமலக்கண்ணா! நீ கபடநாடக சூத்திரதாரி என்பதை என் விஷயத்திற் காட்டிவிட்டாய். என் புத்திக்குறைவால் இவ்வில்லற சுகத்தை விரும்பினேன். ஆனால், உன்னை அடிக்கடி நினைக்கவில்லையே யென்று இக்கொடும் தண்டனையை விதித்தாய் போலும். இனி உன்னை ஒரு நிமிஷமும் மறவேன் என்று கூறி, சேடிகள் கொண்டுவந்த உணவையும் உண்ண மறுத்து, உலகை வெறுத்து பகவந் நாமத்தைச் சதா உச்சரித்துக்கொண்டு நாளைக் கழிக்கலானாள்.

கும்பாஜியின் மனம் அமைதியின்றி துயரத்திலாழ்ந்திருந்தது. ஒரு சமயம் மீராவைப்பற்றி நல்லெண்ணம்கொள்வான். மறு நிமிஷம், 'மீரா! மாலையிட்ட மணாளனுக்குத் துரோகம் செய்த காதகி! உன்னைச் சித்திரவதை செய்யவேண்டும்' என வாய்விட்டு அலறுவான். ராணாவின் மனநிலையறிந்த அவன் பிரதானி ரகுநாத பட்டர், மணப்பதற்கு முன் விஷம் குடித்தும் இறவாத தெய்வப் பிறப்பை, நிரபராதி, குணக்குன்றான மீராவைச் சிறை மீட்டு, மறுபடி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். ராணா அவரைக் கடிந்து பேச வேலையைவிட்டு நீங்கிவிட்டார்.

பிறகு அரசன் பேய் பிடித்தவன்போல் எப்பொழுதும் சஞ்சலத்துடனிருந்தான். அவன் சகோதரி ருக்மிணி, மீராவிடம் அவன் கொண்ட சந்தேகத்தை விலக்க வேண்டுமென்றும், அவள் மேலான குணங்களை எண்ணி அவள் ஆவலுடன் பூஜிக்கவிரும்பும் கிருஷ்ண விக்ரகத்தைக் கொடுத்து அவள் துயரத்தைத் தொலைக்கவேண்டுமென்றும்பலவாறுவாதாடி ராணாவின் அனுமதி பெற்று மீராவிடம் முகுந்தனின் விக்ரகத்தை ஒப்புவித்தாள். மீரா அடைந்த ஆனந்தத்திற்களவில்லை. கண்ணனை காடாலிங்கனம் செய்தாள். "கிருஷ்ணா! எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ! என்னுடல் பொருள் ஆவி எல்லாம் உன்னுடையதே; நின்னையன்றி எனக்கு வேறு கதியில்லை; என்னிடம் உனக்குற்ற கருணைதான் என்னே! காலத்தில் என்னை ஒருநாளும் நீ கைவிடமாட்டாய்," என்று கதறினாள்.

மீரா கற்பு நிலை தவறிவிட்டாள் என்ற சந்தேகம் கும்பாஜியின் மனதை விட்டு அகலவில்லை. தன் சுகத்தையும், மகிழ்ச்சியையும் அவள் கருதாது, கண்ணன் பணிவிடையில் ஈடுபட்டிருந்தது அவனுக்கு அதிககோபத்தையுண்டாக்கியது. தவிர முன் நடந்த சம்பவம் ஒன்று அவன் நினைவுக்கு வந்தது. மீரா மணத்திற்குப் பிறகு, கும்பாஜியை மதியாமல் சதா கிருஷ்ண பஜனை செய்துகொண்டிருந்த சமயம் வேறொரு மனைவியை மணக்க விரும்பினான். ஜால்வர்தேச அரச குமாரி ஒருவள் தனக்குச் சமமான மந்தர் என்ற இராஜ புத்ரனை மணக்க இருந்தாள். அவளைப்

பலாத்காரமாக ராக்ஷச விவாகம் செய்துகொண்டான். அவள் இவன் இச்சைக்கு இணங்காது வெகு துயரத்திலாழ்ந்தாள். அவளிடம் கருணைகொண்ட மீரா அவளுக்கு அறிவுரைகள்கூறி கிருஷ்ணபிரேமையில் ஈடுபடும்படி செய்தாள். மந்தர் அரச குமாரன் இவள் மனநிலையையறிய எண்ணி மீராமூலம் அவளைச் சந்தித்து அவளுக்குக் கும்பாஜியிடம் அன்பில்லையென்பதைத் தெரிந்து அவளைத் திரும்ப அடைய கும்பாஜியின்மேல் படையெடுக்க ஏற்பாடு செய்தான். இந்தக் கதையும் இவன் ஞாபகத்திற்குவர இருதலைக்கொள்ளி எறும்புபோல் மனம் துடித்தான். மீராவை முடித்தால்தான் தனக்கு அமைதி ஏற்பட்டு, தன் மானமும் காப்பாற்றப்படுமெனவும் நினைத்தான். சேனாதிபதியையும், மற்றும் சிலரையும் அவளைக் கொல்ல ஆணையிட்டான். அவர்கள் மறுத்துவிட, அவளுக்கே, “நீ உண்மை ராஜபுத்ர ஸ்த்ரீயானால், பக்தியிற் சிறந்த பதிவிரதையானால், உடனே நதியில் விழுந்து உயிர் துறப்பாய்; அப்பொழுதுதான் உன் கற்பு நிலையில் எனக்கு ஏற்பட்டிருக்கும் ஐயம் நீங்கும்; உன்னைப் பரிசுத்தை எனக் கருதுவேன்” என்று ஒரு கடிதம் எழுதி அனுப்பினான். உடனே தன் பதிவிரதா தர்மத்தைப் பரிபாலிக்க ஆற்றையடைந்தாள். கிரிதர விக்ரகத்தைக் கரையில் வைத்தாள். “கிருஷ்ணா! அநாதரக்ஷகா! ஆபத் பாந்தவா! எல்லாம் நின்னருள். என் மரணத்தால் என் மணாளனுக்குச் சுகமென எழுதியிருக்கிறார். கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை அவர் கிருபையாலன்றோ இவ்வளவு சீக்கிரத்தில் உன் பாதாரவிந்தங்களை யடையும் பாக்கியம் பெற்றேன். கோபாலா! உன்னையன்றி வேறு துணையறியேன். நித்தமும் மீரா நின்னடிமை. என்று மழியும் இவ்வுடலபிமானம் அகற்றினேன். இவ்வுலகில் அழியாத பொருள் ஒன்றுமில்லை. பெரியவர்க்கும் சிறியவர்க்கும் சாவு ஒன்றே பக்தியொடு கைகூப்பிப்பணிகின்றேன். உரிய குலம், குடியாவும் மாயை என்னும் உண்மையினை உணர்ந்துகொண்டேன்,” என்று கண்ணனைத் துதித்துத் தூய நதியில் குதித்தாள். ஆற்று வெள்ளம் அவளை அடித்துச் சென்றுவிட்டது. ஜலத்தில் மிதந்து செல்லும் பொழுது ஓர் அற்புத அனுபவம். கிருஷ்ணன், அவள் மனக் கண்முன், புன்முறுவலுடன் தோன்றி “மீரா! வா. உன் பக்திக்கு மெச்சினேன். நீ எதற்காகப் பிறந்தனையோ அக்காரியம் இன்னும் முடிவுபெறவில்லை. நீ இன்னும் சிலகாலம் உயிருடனிருந்து, உன்னைப்போலவே என்னிடம் அனன்யபக்தியைப் பாரிலுள்ளோருக்குப் புகட்டி, அவர்கள் கடைத்தேற வழிகாட்டி என் பாத மலரையடைவாய். ராணா உண்மை பக்தன். அவன் இனி மனம் திருந்துவான். உன் சிறப்பைப் பெருக்கவே அவனைக் கலங்க வைத்தேன். கவலையுறாதே. பிருந்தாவனம் சென்று உலகம் உய்ய பக்தி ரசத்தையூட்டி என் சாயுஜ்யமடைவாய்” என்று சொல்லி மறைந்தார் மாயன். மீரா அவ்வாற்றங்கரையில் ஓர் ஆல மரத்தடியில் ஒதுக்கப்பட்டுக்கண்விழித்தாள். தன் ஆடையும் காஷாய நிறமாக மாறியிருந்ததைக் கவனித்தாள். ஆற்றில் மூழ்கினாள் அவ்வழியே பிருந்தாவனம் சென்றுகொண்டிருந்த பக்தர்களுடன் சேர்ந்து, ‘ராமகிருஷ்ண கோவிந்த நாராயணா’ என்று பகவந் நாமஸ்மரணை செய்துகொண்டு பிருந்தாவனத்தை யடைந்து பரந்தாமன் பணிவிடை செய்ய ஆரம்பித்தாள். பலதடவை சமாதி நிலையில் கண்ணனைத் தரிசித்தாள்.

“கார்முகிலின் மேனிபெறும் நந்தகுமாரா-என்றன்
கண்களிலே குடியிருப்பாய் நந்தகுமாரா
மார்பினிலே வைஜயந்தி மாலையணியும்-உன்றன்
வடிவினிலே மயங்கி நின்றேன் நந்தகுமாரா
ஆரமுத மூறுமிதழ் மீதிலமரும்-குழல்
அழகினுக்கோர் அளவுமுண்டோ நந்தகுமாரா
பாரும் விண்ணும் பணிந்துதொழும் நந்தகுமாரா -என்றும்
பக்தரையாள் ஈசன் நீயே நந்தகுமாரா”

என்று சதா பஜனை செய்தாள்.

## பக்தைக்கு உகந்த பரிசு

பிருந்தா வனத்திலுள்ள பழைய கண்ணன் கோயிலொன்று அடைத்துக்கிடந்தது.

“ஆளடிமை யாகஎனை அமர்த்திக்கொள்வாய்
அழகாக நந்தவன வேலைசெய்வேன்
நீள் செல்வம் பக்தியலால் வேறொன்றில்லை
நித்தியனே நின்மலனே நிகரில்லோனே!”

என்று கசிந்து பாடிக் கதவு திறக்கும்படி செய்தாள்.

பிருந்தாவனத்தில் 'ரூபகோஸ்வாமி' என்ற ஒரு சந்நியாசி இருந்தார். அவர் மண், பெண், பொன் என்பதில் இரண்டாவது உயிருள்ளதாகையால் பெண்களை வெறுத்து, அது மிகவும் கொடியதென போதித்து வந்தார். பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார். மீரா அவரிடம் உபதேசம் பெற எண்ணி அவரை அணுக, அவர் அவளைப் பார்க்க மறுக்க, "பிருந்தாவனம் கோபிகைகளுடன் கண்ணன் திருவிளையாடல் புரிந்த இடம். அது பெண்களுக்கே உரியது. ஒவ்வோர் பக்தனும் நாயகி பாவத்துடன்தான் நந்தகோப குமாரனை நாடமுடியும் எனப் பகர்ந்து, துறவிகளுக்கு விருப்பு வெறுப்பாகாதெனவும் எடுத்துரைத்தாள். அவள் வீரமொழிகளை வியந்தார் ரூபகோஸ்வாமி.

இவ்விதம் மீரா அங்கு பக்தியைப் பரப்பிவர, மீவார் நாட்டு ஜனங்கள் அங்கு திரண்டுவந்து, மறுபடியும் உயிர் பெற்று உயர்ந்து விளங்கும் மீராவைக் கண்டு பெருமையுற்று ராணு கும்பாஜிக்கு புத்திமதிகூறி மறுபடி அவளை அழைத்து வரவேண்டுமென்று கூறினர்.

தான் செய்த குற்றத்திற்காக ராணு மிகவும் வருந்தினன். கனவில், கனிவுடன் கண்ணனைப் பூஜிக்கும் மீராவைக் கண்டான். மறுநாள் டில்லி பாதுஷா அக்பர், தான்தான் மீராவின் பக்தியை மெச்சி கிருஷ்ணனுக்கு அர்ப்பணம் செய்ய அம்முத்து மாலையைக் கொடுத்ததென்றும், அதனுல் மீராவுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைக் கேள்விப்பட்டதாகவும் உடனே பிருந்தாவனத்திலிருந்து மீராவை அழைத்துப்போகாவிட்டால் அவன்மேல் படையெடுத்துவருவதாகவும் தாக்கீது அனுப்பியிருந்தான். கும்பாஜி தன் பாவச் செயலை உணர்ந்தான். அதற்குப் பரிகாரம் செய்ய மந்திரி ரகுநாதப்பட்டருடன் பக்தை மீராவைத் தன் நாடு அழைத்துவரச் சென்ருன். அவளிடம் தன் குற்றங்களைக் கூறி மன்னிப்புக் கேட்டான். மறுபடி தன் வாழ்க்கைத் துணைவியாயிருந்து, தனக்குற்ற வசையை விலக்க வேண்டுமென்று வேண்டினன். "கண்ணனை நாடிய நான், மறுபடி கணவனை நாடலாமா!" என்ருள். 'ஆனுல் மீவாருக்கு விஜயம் செய்து எங்கள் அரசியாயிரு' என அவன்வேண்ட 'பரமனருளால் பந்தம் நீங்கிய நான்அங்கு வந்திருக்க இயலாது' என்று மறு மொழி கூறினள். "அப்படியானுல், சின்ஞட்கள் அங்கு தங்கி, மீவார் ஜனங்களை உன் பக்தி மிகுந்த பாடல்களால் மகிழ்விக்க வேண்டும்" என்று மன்ருடினன். அதற்கு அவள் ஒருவாறு சம்மதித்து தீர்த்த யாத்திரைவியாஜமாகச்சித்தூர்சென்று குடிகளைத் திருப்தி செய்து திரும்பி பிருந்தாவனம் வந்து சேர்ந்தாள்.

கிருஷ்ண ஜயந்தி கண்ணன் பிறந்த நாள். நடுநிசி ஜயந்தி உற்சவம் மிகவும் விமரிசையாக நடந்து எல்லோரும் தாமோதரனைத் தரிசித்துவிட்டு வெளியே சென்றுவிட்டனர். மீராமாத்திரம் கிருஷ்ண சந்நிதியில் தனித்து நின்ருள். அன்று மீராவுக்கு என்றுமில்லா ஆனந்தம் ஏற்பட்டது. தன் சிறுவயதில் கிருஷ்ணபிரேமையால் கோபிகைகளில் தாஞெருவளாய் நினைத்து கிருஷ்ண லீலா சாகரத்தில் மூழ்கியிருந்தபோழுது கனவில் கண்ணன் தோன்றி தன்னை மாலையிட்ட காட்சி நினைவுக்கு வந்தது. அவன் அழகையும், புகழையும் நினைந்து, "என்றுமே இக் கிரிதரனையன்றி வேறிங்கு ஏதுமொரு துணையறியேன். ஏகிமல! நித்தமும் மீரா நினதடிமை. இரவு பகல் எப்பொழுதும் உன்னைக் காணுது இருக்க மனம் வரவில்லை. கண் கவர்ந்து, கருத்தைவிட்டு அகலா நின்னழகை எவ்வாறு புகழ்வேன்.

"நந்த குமாரன் வடிவழகை
நானும் கண்டநாள் முதலா
இந்த உலகம் மேலுலகம்
இரண்டும் வேம்பே ஆனதம்மா!
மீனை வண்டை மானையவன்
விழிகள் மறக்கச் செய்திடுமே
கானிற்படரும் கோவையும் அக்
கனிவா யிதழைக் காட்டிடுமே
அம்பொற் குழைகள் மிசையாட
அரைஞாண் சதங்கை இசைபாட
நம்பன் கண்ணன் அழகியவோர்
நடனுய் வந்து நடிக்கின்ருன்"

என்று பாடியாடி ஆனந்த நிலையில் மயங்கி சந்நிதியில் விழுந்துவிட்டாள்.

ஜயந்தி உற்சவத்திற்கு அங்கு வந்து, சற்று தூரத்தில் நின்று, மீராவின் பக்திப் பெருக்கை கவனித்துவந்த கும்பாஜி ராணா தன் தவற்றை நினைந்து நினைந்து உளம் நைந்தான். கண்ணன் பக்தியிலீடுபட்டு, கற்பு மாறாக் காரிகையின் பெருமையைக் கண்டான். மயங்கி விழுந்த மீராவை கை தூக்கிச் சைத்யோபசாரம் செய்தான். மீரா மயக்கந்தெளிந்து எழுந்தாள். 'நேரமாயிற்று வெளியே போகலாம் வா' என்றான். "எதற்காக? அதோ பாருங்கள். என்னைக் கிரிதரன் அழைக்கின்றான். "கண்ணா! என் கருமணி வண்ணா! இதோ வந்தேன். என் சித்தமிசை குடிகொண்ட ஞானரூபா! தேவகியின் துயர் தீர்த்த தேவதேவா! திரௌபதியின் மானம் காத்த கார்முகிலே! அபயம்! அபயம்! இதோ வந்தேன்! வந்தேன்!! என்னை யாட்கொள்வாய்.

"என்றும் எனைநீ ஏற்றுக் கொள்
எனக்குத் துணைவே றெவரு மில்லை
நன்று பசியும் எனக் கில்லை
கண்ணில் உறக்கம் சிறிது மில்லை
துன்றும் உடலும் குறுகி ஒரு
துரும்பாய்த் தேய்தல் கண்டிலையோ
நன்று தருவாய் எனைக் கூடி
நடுவிற் பிரியா தருள் வாயோ!"

என்று கதறி கிரிதர கோபாலனின் விக்ரஹத்தை நோக்கி, விரிந்த கைகளுடன் சென்று கிருஷ்ணனை அணைத்துக் கொண்டாள். உடனே விக்ரஹம் இரண்டாய்ப் பிரிந்து மீராவைத் தன்னுள் அடக்கிக் கொண்டது. ஒரே ஜோதி மயமாய் விளங்கிற்று. கும்பாஜியின் கண்களைப் பறித்தது. அடுத்த நிமிஷம் கண் விழித்தான். கண்ணனின் வேணுகானம் கேட்டான். அதற்கிசையப் பாடி ஆடும் மீராவின் பாட்டும் கேட்டது. தன்னையும் ஆட்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தான். காலமும் வந்தது. கிருஷ்ண ஸாயுஜ்யத்தைப் பெற்றான்.

கோபிகா ஜீவனஸ்மரணம்!

கோவிந்தா! கோவிந்தா!

குறிப்பு:—இதில் காணும் மேற்கோள் பாட்டுக்கள், கவிஞர் சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் "மலரும் மாலையும்" என்ற கவிதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

திருமாலிருஞ்சோலை கள்ளழகர் கோயிலில், கல்வெட்டுக்களை சென்னை அறநிலைய ஆணையாளர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் 22-12-59 காலை 10-மணிக்கு திறந்து வைத்தார்கள். நிர்வாகத் தருமகர்த்தர், திரு. P. அருணாசலம் B. E, அவர்கள் தலைமை வகித்தார்கள்.

ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தானம், தல்லாகுளம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடாஜலபதி சுவாமியின் திருவத்யயன திருவிழா 30-12-59 முதல் ஆரம்பம். 9-1-60 முதல் இராப்பத்து உற்சவம் ஆரம்பமாகி 18-1-60 முடிய நடைபெறும்.

4-12-59-ல் ஸ்ரீ முஷ்ணம் பூவராக சுவாமி கோயிலில் தாயாருக்குப் புதுக்கவசம் அணிவிக்கப்பட்டது. கண்ணாடி அறையும் திறக்கப்பட்டது. அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். அவர்கள் கலந்து கொண்டார்கள். கண்ணாடி அறையைத் திறக்கப் பயன்படுத்திய வெள்ளிக் கத்திரிக்கோலை ஏலம் விடப்பட்டது. அதை திரு. ஜி. வாகீசம் பிள்ளை எம். எல். ஏ. அவர்கள் ரூ. 151-க்கு ஏலத்தில் எடுத்தார்கள்.





திருமண்டங்குடி—தொண்டரடிப்பொடியாழ்வார் (உற்சவர்—இரு தோற்றங்கள்)

திருமண்டங்குடி, அரங்கநாதப் பெருமாள் கோயிலில் ஜிர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகா சம்ப்ரோட்சணம் 25-1-60ல் நடைபெறும். ஸ்ரீமந் நாராயணனின் 'வைஜயந்திவநமாலை'யின் அம்சமாகச் சோழநாட்டில் திருமண்டங்குடியில் மார்கழிக்கேட்டை நாளில் அவதரித்து, அரங்கனின் அருள்பெற்று, திருவரங்கம் சென்று, அரங்கன்மீது "பள்ளி எழுச்சி"யும், "திருமாலை"யும் பாடியதுடன், துளவத்தொண்டு செய்து வாழ்ந்த ஆழ்வாராகிய தொண்டரடிப்பொடி யாழ்வாரின் ஆலயமும், அவருக்குக் காட்சியளித்த அரங்கநாதர், அரங்கநாச்சியார் ஆலயமும், திருமதிள், கோபுரம், விமானங்கள், மண்டபம், பிராகாரம் தளவரிசை செய்யப்பெற்றும் புது வாகனமண்டபம் அமைத்தும் திருப்பணிக் குழுவினரால் திருப்பணி செய்யப்பெற்று, 22-1-60 வெள்ளிக்கிழமை யன்று யாக காரியங்கள் ஆரம்பித்து 25-1-60 மூலா நட்சத்திரம்கூடிய நன்னாளில் காலை 9-10-க்கு மேல் 11 மணிக்குள் மகாசம்ப்ரோட்சணம் நிறைவேற இருக்கிறது. பாகவத உத்தமர்களது வேதபாராயண, அத்யாபாக, உபன்யாசாதிகளும் நடைபெறும். சம்ப்ரோட்சணை அன்று மாலை பெரிய திருமஞ்சனமும், இரவு கருட வாகனத்தில் பெருமாளும், அன்னவாகனத்தில் ஆழ்வாரும் எழுந்தருளுவர்.

குற்றாலம், திருக்குற்றாலநாதசுவாமி கோயிலில் திருவாதிரைத் திருவிழா 3-1-60-ல் தொடங்கப்பெற்று 13-1-60 வரை நடைபெறும்.

✦ ✦ ✦ ✦

திருவானைக்காவல், ஸ்ரீ ஜம்புகேசுவரர் அகிலாண்டேசுவரி ஆலயத்தில் திருவெம்பாவை, திருப்பாவை மாநாடு சென்னை அறநிலையத்துறை ஆணையாளர் திரு அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்.. அவர்கள் தலைமையில் 30-12-59 அன்று நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

சென்னை, ஸ்ரீ வடபழநி ஆண்டவர் கோயிலில் கார்த்திகைத் திங்களில் நடந்த திருக்கிருத்திகை விழாவிற்கு சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வந்திருந்து ஸ்ரீ வடபழநி ஆண்டவரை வழிபட்டனர். கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்களும் வந்திருந்தார்கள்.

✦ ✦ ✦ ✦

திருக்கயிலாய பரம்பரைத் திருவாடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான ஆளுடையார் கோயில் என்கிற திருப்பெருந்துறைக் கோயிலில் ஆருத்திரா தரிசன மகோற்சவம் 2-1-60 முதல் தொடங்கி 12-1-60 வரை நடைபெறும்.

✦ ✦ ✦ ✦

திருப்பந்தணைநல்லூர், ஸ்ரீ வேணுபுஜாம்பாள் உடன்கூடிய ஸ்ரீ பசுபதீசுவர சுவாமி வகையறு கோயிலில் திருப்பாவை-திருவெம்பாவை மாநாடு 30-12-59 அன்று சிறப்பாக நடைபெற்றது. ' பாவை மணிகள் ', ' திருப்பாவை நோன்பு ', கருணையும் சீயும் ', ' மாணிக்கவாசகர் ' என்ற தலைப்புகளின்கீழ் சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப் பெற்றன.

✦ ✦ ✦ ✦

சோளிங்கபுரம். ஸ்ரீலட்சுமி நரசிம்மசுவாமி திருமலை திருப்படித் திருவிழா (ஐந்தாம் ஆண்டு) 1-1-60ல் சிறப்பாக நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

சிவகெங்கை சமஸ்தானம் கோயில்களுக்குச் சொந்தமான பாகனேரி ஸ்ரீ நீலகண்டேசுவர சுவாமி கோயிலில் 28-12-59 தேதியிலும், இளையான்குடி, ஸ்ரீ இராஜேந்திரசோழீசுவரர் கோயிலில் 29-12-59 தேதியிலும், நாட்டரசன்கோட்டை கண்ணுடையநாயகி அம்மன் கோயிலில் 30-12-59 தேதியிலும், திருப்பூவணம், ஸ்ரீ புஷ்பவனேசுவரர் கோயிலில் 31-12-59 தேதியிலும், சிவகெங்கை, ஸ்ரீ விசுவநாதசுவாமி கோயிலில் 1-1-60 தேதியிலும், மானாமதுரை. ஸ்ரீ சோமநாதசுவாமி கோயிலில் 2-1-60 தேதியிலும் திருப்பாவை-திருவெம்பாவை மாநாடுகள் சிறப்பாக நடைபெற்றன. சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பெற்றன. 3-1-60ல் மதுரை, ஸ்ரீ இம்மையிலும் நன்மை தருவார் கோயிலிலுல், 5-1-60ல் காளையார்கோயில், ஸ்ரீ சொர்ணகாளீசுவரர் கோயிலிலும், 6-1-60ல் கல்லல், ஸ்ரீ பகச்சாலவிநாயகர் ஸ்ரீ சோமசுந்தரேசுவரர் கோயிலிலும், 7-1-60 கண்டதேவி, ஸ்ரீ சொர்ணமூர்த்திசுவர சுவாமி கோயிலிலும், 8-1-60ல் சாக்கோட்டை, ஸ்ரீ வீரசேகரசுவாமி கோயிலிலும், 9-1-60ல் திருக்கோட்டியூர், ஸ்ரீ சௌமியநாராயணப்பெருமாள் கோயிலிலும், 10-1-60ல் நெய்க்குப்பை, ஸ்ரீ மனமொத்த கண்டீசுவரர் கோயிலிலும், 13-1-60ல் சிங்கம்புணரி ஸ்ரீ சேவுகப்பெருமாள் அய்யனார் கோயிலிலும், திருப்பாவை—திருவெம்பாவை மாநாடுகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

———